Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU




முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 ஆனி 07 வெள்ளிக்கிழமை (21.06.2013) பக்கங்கள் 20 ஓசை – 264


விண்ணப்பம் கோரல்
07


விலகல்
08


புத்திமான்
11


அறிவுறுத்து
14


'21' இல் '11'
18

# தமிழக அகதிகள் நாடு திரும்புவதில் ஆர்வம்



(கொழும்பு)

தமிழகத்தில் தங்கியிருக்கும் இலங்கை அகதிகள் மீண்டும் நாடு திரும்புவதில் ஆர்வம் கொண்டுள்ளதாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நாடு திரும்பியபின் இலங்கையில் தங்களுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாக, தமிழகத்தில் இருந்து நாடு திரும்பிய எந்த அகதிகளும் தங்களிடம் முறையிடவில்லை என்று, ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான ஆணையகம் மேலும் தெரிவித்துள்ளது.

சென்னையில் உள்ள ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான காரியாலயத்தின் அதிகாரி ஒருவர், இந்திய ஊடகம் ஒன்றுக்கு இதனைத் தெரிவித்துள்ளார். யுத்தம் நிறைவடைந்த பின்னர், இதுவரையில் தமிழகத்தில் இருந்து 5000 அகதிகள் வரையில் இலங்கை திரும்பியுளளனர்.

2012 ஆம் ஆண்டு ஆயிரத்து 600 அகதிகள் தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு நாடு திரும்பியுள்ள (19) ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் கடும் காற்று; மீனவர்களுக்கு எச்சரிக்கை

வடக்கு மற்றும் கிழக்கு கடற் பிரதேசங்களில் மணிக்கு 70 கிலோமீற்றர் வரை காற்றின் வேகம் அதிகரிக்கலாம் எனவும் மீனவர்கள் விழிப்புடன் செயற்படுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மன்னாரிலிருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்பிலும், யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலை வரையான கடற்பரப்பிலும் கடும் காற்று வீசக்கூடிய சாத்தியம் நிலவுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. இதே வேளை மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும், காலி மாத்தறை, புத்தளம், மற்றும் குருநாகல் மாவட்டங்களிலும் மழை பெய்யக்கூடுமெனவும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

## விபத்துக்களைத் தவிர்க்க பஸ் வண்டிகளில் ஜி.பி.எஸ்.

தனியார் பஸ் சாரதிகளுக்கு குறைந்தபட்ச கல்வித் தகைமையை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. அன்றாடம் இடம் பெறுகின்ற பஸ் அனர்த்தங்களை கருத்திற் கொண்டு இந்த நடவடிக்கையை மேற்கொள்வதற்கு தீர்மானித்துள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் ரொஷான குணவர்தன தெரிவித்துள்ளார்.

GPS எனும் நவீன கருவி மூலம் வாகனங்களின் வேகம் ஆணைக்குழுவினால் தற்போது கட்டுப்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார். அதேபோன்று சுமார் மூவாயிரத்து 200 தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபட்டு வருகின்ற நிலையில், 678 பஸ்களில் மாத்திரம் இந்தக் கருவிகள் பொருததப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் சுட்டிக் காட்டினார். அடுத்த மாத இறுதிக்குள் மேலும் ஆயிரம் பஸ்களில் GPS கருவிகளை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுத் (19) ஆம் பக்கம் பார்க்க

# இந்திய சிறப்புத் தூதுவர் நியமனம் பிசுபிசுப்பு

இலங்கை விவகாரங்களைக் கையாள்வதற்கு இந்தியா சிறப்புத் தூதுவர் ஒருவரைக் களமிறக்கும் பட்சத்தில் அத்தகையதொரு நியமனத்தை உத்தியோகபூர்வமாக ஏற்காதிருக்க கொழும்பு தீர்மானித்துள்ளது என நம்பகரமாகத் தெரியவருகின்றது.

இது விடயத்தில் தனது நிலைப்பாட்டை அரசு புதுடில்லி நிர்வாகத்துக்கு அறியப்படுத்தியுள்ளது என்றும், டில்லியின் இவ்வாறானதொரு இராஜதந்திர நகர்வு குறித்து கொழும்பு அதிருப்தி வெளியிட்டுள்ளது எனவும் அறியமுடிகின்றது.

இரு நாடுகளுக்குமிடையிலான அரசியல், பொருளாதார ரீதியிலான விவகாரங்கள் வெளிவிவகார அமைச்சுகளினூடாகக் கையாளப்பட்டு வரும் நிலையில், அதற்கும் புறம்பாக இது விடயத்தில் தனி நியமனமொன்று இடம்பெற்றால் அது சிக்கலைத் தோற்றுவிக்கும் என இலங்கை அரசு கருதுகின்றது.

அத்துடன், உள்நாட்டு விவகாரங்களில் இந்தியாவின் அநாவசியத் தலையீடு இதுவென்றும் கொழும்பு கருதுவதா (19) ஆம் பக்கம் பார்க்க

## இலத்திரனியல் அடையாள அட்டை; நடவடிக்கைகள் ஆரம்பம்

2015 ஆம் ஆண்டளவில் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டையை விநியோகிப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவிக்கிறது. இதற்கான விலை மனு தற்போது கோரப்பட்டுள்ளதாக ஆட்பதிவு ஆணையாளர் ஆர்.எம். எஸ்.சரத்குமார கூறியுள்ளார்.

இலத்திரனியல் அடையாள அட்டைகளை வடிவமைத்தல் மற்றும் தரவு களஞ்சியப்படுத்தல் ஆகியவற்றிற்காக விலை மனு கோரப்படவுள்ளதாக ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார். (19) ஆம் பக்கம் பார்க்க

# யுத்த வெற்றி அதிகாரப் பகிர்வை பின்தள்ளிவிட்டது

(கொழும்பு)



புலிகளுடனான யுத்தத்தில் அரசு பெற்றுக்கொண்ட வெற்றி அதிகாரப் பகிர்வை பின்தள்ளிவிட்டது என்றும், இதன் காரணமாகவே 13 ஆவது திருத்தச் சட்டத்தை அகற்ற அரசு அதிக அக்கறை காட்டி வருகிறது என்று கூட்டமைப்பு எம்.பி. எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

13 ஆவது திருத்தச்சட்டம் மாகாணசபைகளுக்கு வழங்கியுள்ள முக்கியமான அதிகாரங்களை அரசாங்கம் பறித்துக் கொள்ளாமல் இருப்பதை இந்தியா உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மேலும் தெரிவித்துள்ளார். புதுடில்லியில், நேற்று முன்தினம் வழங்கிய செவ்வி ஒன்றிலேயே மேற்படி விடயங் (19) ஆம் பக்கம் பார்க்க

# வன்னியில் தொண்டர் ஆசிரியர்களுக்கு நாளை மறுதினம் நிரந்தர நியமனம்

வன்னி தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியிலும், வவுனியாவிலும் இடம்பெறவுள்ளது.

நீண்ட காலமாகக் காணப்பட்டு வந்த வன்னி தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைசசரவையிலும் மற்றும் பல்வேறு தரப்பினர்களுடனும் தொடர்ச்சியாக மேற்கெண்ட கடுமையான உழைப்பின் பயனாக வன்னித் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் இப்போது சாத்தியமாக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கான நியமனக் கடிதம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வழங்கப்படவிருக்கிறது.

இந்த வகையில் கிளிநொச்சி வலயம், வடமராட்சி கிழக்கு மருதங்கேணி கோட்ட தொண்டராசிரியர்களுக்கு ஞாயிறு காலை 9.00 மணிக்கும், கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்திலும், மடு, வவுனியா வடக்கு, துணுக்காய், முல்லைத்தீவு வலய தொண்டராசிரியர்களுக்கு வவுனியா நகரசபை மண்டபத்தில் பிற்பகல் மூன்று மணிக்கும் நிரந்தர நியமனம் வழங் (19) ஆம் பக்கம் பார்க்க

## சுண்டிக்குளத்தில் அத்துமீறி மீன்பிடி

### முறுகல் நிலையை தவிர்க்க ஏற்பாடு

சுண்டிக்குளம் கடற்பரப்பில் வெளிமாவட்ட மீனவர்கள் அனுமதியின்றி தொழில் நடவடிக்கையில் ஈடுபடுவதன் காரணமாக அப்பகுதி மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவது குறித்து மீனவர் சமூகம் கடற்றொழில் திணைக்களம் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினரை ஒன்றுகூட்டி அப்பகுதி மீனவர்களின் பிரச் சினைகளைத் தீர்க்க இலங்கை மனித உரிமை ஆணைக்குழு முயற்சி மேற்கொண்டுள்ளது. அண்மைக்காலமாக மக்கள் மீள்குடியமர்வதற்கு (19) ஆம் பக்கம் பார்க்க

**நாளை...**

செவ்வாய் தோஷம்
விசேட கட்டுரை

**நாளைய முரசில்...**

வன்னியில் நிரந்தர நியமனம் பெறவுள்ள தொண்டர் ஆசிரியர்களின் பெயர்ப்பட்டியல்

# கிளிநொச்சியில் நியமனம் பெறவிருக்கும் தொண்டர் ஆசிரியர்களின் பெயர் விபரம்

சுந்தரலிங்கம் பிரபாகரன், கிளிநொச்சி, சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்திற்கு, கார்த்திகேசு தவராஜ சுந்தரம் - புதுமுறிப்பு - அக்கராயன் மகா வித்தியாலயத்திற்கு, தர்மலிங்கம் திவாகர் - அக்கராயன்குளம் - அக்கராயன் மகா வித்தியாலயத்திற்கு, தில்லையம்பலம் ஜெகதீஸ்வரி - ஸ்கந்தபுரம் - அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்திற்கு, மாலதி கோணேஸ்வரன் - அக்கராயன் - அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்திற்கு, அருள்வாணி பயஸ்றெஜினோல்ட் - ஆனைவிழுந்தான்குளம் -ஐயனார்புரம் அ.த.க.பாடசாலைக்கு, நடராசா கிருஸ்ணானந்தன் - வன்னேரிக்குளம் - அக்கராயன் மகா வித்தியாலயததிற்கு, இராசதுரை யமினா - இராமநாதபுரம் - கல்மடு நகர் அ.த.க.பாடசாலைக்கு, ரேவதி தயாகரன் - பாரதிபுரம் - அன்னை சாரதாதேவி வித்தியாலயத்திற்கு, சுஜீவா சிவகுமார் - கனகாம்பிகைக்குளம் - புதுமுறிப்பு விக்கினேஸ்வரா வித்தியாலயத்திற்கு.

ஷாம்மேரி நிமலதாசன் - கிளிநொச்சி - அன்னை சாரதாதேவி வித்தியாலயத்திற்கு, சுவிதா ரவீந்திரன் - யோகபுரம் - சிவபாதகலையகம் அ.த.க.பாடசாலைக்கு, கந்தசாமி அமிர்தாஸ் - கிளிநொச்சி - கோணாவில் அ.த.க.பாடசாலைக்கு, செல்வரட்ணம் யசோதினி - பூநகரி - செம்பன்குன்று அ.த.க.பாடசாலைக்கு, நர்சினி செல்வநாதன் -செல்வாநகர் அ.த.க.பாடசாலைக்கு, கவிதா குகேந்திரன் - அத்தாய் - பூநகரி செல்லியாதீவு அ.த.க.பாடசாலைக்கு, பாலச்சந்திரன் சுலக்ஷனா - பூநகரி - முக்கொம்பன் அ.த.க.பாடசாலைக்கு, விஸ்வலிங்கம் வசந்தநாயகி - சாவகச்சேரி - செல்லியாதீவு அ.த.க.பாடசாலைக்கு, இராமசாமி இரகுநாதன் 4 ஆம கட்டை, பூநகரி - சுண்ணாவில் அ.த.க.பாடசாலைக்கு, மல்லிகாவதி கிருஷ்ணநாதன் - தம்பிராய் - பூநகரி - சுண்ணாவில் அ.த.க.பாடசாலைக்கு, செல்வரஞ்சினி தெய்வேந்திரன் கிளி - ஆனையிறவு அ.த.க.பாடசாலைக்கு, ஆனையிறவு அ.சி.த.க.பாடசாலைக்கு செல்வரத்தினம் சிவதரிசினி கறுக்காய் தீவு,பூநகரி - வினாசியோடை அ.த.க.பாடசாலைக்கு, கல்யாணி சிவகரன் - பரமன்கிராய் பூநகரி - ஞானிமடம் அ.த.க.பாடசாலைக்கு - இன்பரூபி புவியரசன் - பூநகரி - ஞானிமடம் அ.த.க.பாடசாலைக்கு, ஜிசிதா அருளானந்தம் - பூநகரி - வினாசியோடை அ.த.க.பாடசாலைக்கு, தேவாநந்த் ஜெயபாமினி - பூநகரி - ஞானிமடம் அ.த.க.பாடசாலைக்கு, அந்தோணிமுத்து அகஸ்ரின் - பூநகரி - நாச்சிக்குடா அ.மு.க்.பாடசாலைக்கு, லோரன்ஸ் றூபிரஞ்சிதமலர் - இரணைதீவு - இரணைதீவு றோ.க.த.க. பாடசாலைக்கு, பகீரதன் உஷாந்தினி - பளை - இயக்கச்சி அ.த.க.பாடசாலைக்கு, மரியமாலா அமலதாஸ் - வன்னேரிக்குளம் - ஐயனார்புரம் அ.த.க.பாடசாலைக்கு, யேசுரட்ணம் யெககொண்சன் - வன்னேரிக்குளம் - ஐயனார்புரம் அ.த.க.பாடசாலைக்கு, முத்தையா தயாளினி - வன்னேரிக்குளம் -ஐயனார்புரம் அ.த.க.பாடசாலைக்கு, கணேசராசா தமிழினி - வன்னேரிக்குளம் - ஐயனார்புரம், அ.த.க.பாடசாலைக்கு, யசோதா விவேகானந்தன் - தருமபுரம் - தருமபுரம் இல-01 அ.த.க.பாடசாலைக்கு, ஜெயசுதா சுயந்தகுமார் - ஜெயபுரம் தெற்கு - நாச்சிக்குடா அ.மு.க.பாடசாலைக்கு, சவேரியான் உஷாநந்தினி - பல்லவராயன்கட்டு - வேரவில் இந்து மகா வித்தியாலுயத்திற்கு, ரஜனி ஜெயராமன் - யாழ்ப்பாணம் - ஜெயபுரம் மகா வித்தியாலயத்திற்கு, பிரேமறெஜினா குமாரலிங்கம் - நாகபடுவான் - நாகபடுவான் இல-03 அ.த.க.பாடசாலைக்கு, றஜிதா வீரசிங்கம் - தருமபுரம் - நாகேந்திரா வித்தியாலயத்திற்கு, முத்துக்குமாரு கருணாதேவி - தருமபுரம் - கல்லாறு தமிழ் வித்தியாலயத்திற்கு, றாகுலன் புஷ்பலதா - தருமபுரம் - கல்லாறு தமிழ் வித்தியாலயத்திற்கு, பவளராசா கோசலா - கிளிநொச்சி - கனகாம்பிக்கைக்குளம் அ.த.க.பாடசாலைக்கு, சசிந்தா நிர்மலரூபன் - கிளிநொச்சி - கனகாம்பிகைக்குளம் அ.த.க.பாடசாலைக்கு, சின்னையா சந்திரகுமார் - பரந்தன் - நாகேஸ்வரா வித்தியாலயத்திற்கு, சிந்துஜா அமிர்தசீலன் - கிளிநொச்சி - புனித திரேசா பெண்கள் கல்லூரிக்கு, செல்வரதீஸ்வரி சாந்தநாதன் - கிளிநொச்சி - கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தியாலயத்திற்கு, சத்தியசீலன் சத்தீஸ்வரன் - பரந்தன் - வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்திற்கு, கணபதிப்பிள்ளை பாஸ்கரன் - கிளிநொச்சி - ஊற்றுப்புலம் அ.த.க.பாடசாலைக்கு, காஞ்சனா சுதாகரன் - ஸ்கந்தபுரம் - கண்ணகைபுரம் அ.த.க.பாடசாலைக்கு, ஜெயகௌரி லோகநாதன் - ஸ்கந்தபுரம் - கண்ணகைபுரம் அ.த.க.பாடசாலைக்கு, நிக்ஸ்மலா பிரநந்தன் - ஸ்கந்தபுரம் - ஸ்கந்தபுரம் - இல 02 அ.த.க. பாடசாலைக்கு, சந்திராம்பாள் குகன் - கிளிநொச்சி - கண்ணகைபுரம் அ.த.க.பாடசாலைக்கு, அருள்மொழி சுஜியந்தன் - பல்லவராயன்கட்டு - கரியாலை நாகபடுவான் இல-2 அ.த.க.பாடசாலைக்கு, செல்வராஜா சுபோஜினி - முழங்காவில் - கரியாலை நாகபடுவான் இல -2 அ.த.க.பாடசாலைக்கு, பரராசசிங்கம் சசிகரன் - முழங்காவில் - கரியாலை நாகபடுவான் இல -2 அ.த.க.பாடசாலைக்கு, சிவலிங்கம் சிவராகினி - கோப்பாய் - கரியாலை நாகபடுவான் இல -2 அ.த.க.பாடசாலைக்கு, குழந்தைவேலு ஜெயலட்சுமி - பூநகரி - கறுக்காய்தீவு மகா வித்தியாலயத்திற்கு, ரதிதேவி நேமிநாதன் - கிளிநொச்சி - கறுக்காய்தீவு மகா வித்தியாலயத்திற்கு, கணபதிப்பிள்ளை நயினேஸ்வரன் - கிளிநொச்சி - விநாசியோடை அ.த.க.பாடசாலைக்கு, பொன்னம்பலம் சிவகரன் - பூநகரி -. கறுக்காய் தீவு மகாவித்தியாலயத்திற்கு, கணபதிப்பிள்ளை நிஷாந்தினி - கிளிநொச்சி - பூநகரி நல்லூர் மகா வித்தியாலயத்திற்கு, ஜெயலதா ஜெயகுமார் - கண்டாவளை - கண்டாவளை மகாவித்தியாலயத்திற்கு, றாஜினி விக்கினேஸ்வரமூர்த்தி - கண்டாவளை - கண்டாவளை மகா வித்தியாலயத்திற்கு, சுதாகினி சேக்ஸ்பியர் - கண்டாவளை -தருமபுரம் இல-01 அ.த.க.பாடசாலைக்கு,

ஈசன் ஜெயகௌரி - யாழ்ப்பாணம் - கண்ணகையம்மன் வித்தியாலயத்திற்கு, லோகநந்தினி திருக்குமார் - இராமநாதபுரம் - கிளிநொச்சி மத்தியகல்லூரிக்கு, வினாயகதாஸ் அருணகிரி - கிளிநொச்சி - கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு, மேரிஜெசிந்தா கிருபானந்தன் - கிளிநொச்சி - கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்திற்கு, நிமலேந்திரா சுகிதா - கிளிநொச்சி - கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்திற்கு, காந்தரூபி லோகேந்திரன் - யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்திற்கு, ரகுநாதன் சுஜாதா - கிளிநொச்சி - கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்திற்கு, கசேந்திரகுமார் தனரஞ்சினி - கிளிநொச்சி - சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்திற்கு, கந்தையா சச்சிதானந்தசிவம் - கிளிநொச்சி - பன்னங்கண்டி இ.த.க.பாடசாலைக்கு, சிவநாதன் லெனின் - கிளிநொச்சி - பாரதி வித்தியாலயத்திற்கு, ஜெயபாரதி கிருஷ்ணபாகலன் - கிளிநொச்சி - செல்வாநகர் அ.த.க.பாடசாலைக்கு, செல்வதரிசினி லெனின்ஸ் - கிளிநொச்சி - கிளிநொச்சி மகாவித்தியாலயத்திற்கு,

ஜெசிந்தா சந்திரகுமார் - கிளிநொச்சி - கிளிநொச்சி இந்துக் கல்லூரிக்கு, இராஜகோகிலா நல்லநாதன் - கிளிநொச்சி - பன்னங்கண்டி இ.த.க.பாடசாலைக்கு, கனகசுந்தரம் சிவாநந்தினி - சிவபுரம் - கிராஞ்சி அ.த.க. பாடசாலைக்கு, மரியதாஸ் மேரிபாமிலா - பூநகரி - கிராஞ்சி அ.த.க.பாடசாலைக்கு, சுவர்ணா உதயகுமார் - பூநகரி - கிராஞ்சி அ.த.க.பாடசாலைக்கு, கதிராமன் சோதிமலர் - கிராஞ்சி - கிராஞ்சி அ.த.க.பாடசாலைக்கு, குயின்ஸி றியோட்நேசன் - பூநகரி - குமுழமுனை அ.த.க.பாடசாலைக்கு, காந்தநிதி ஜெயகுமாரி - இயக்கச்சி - கோவில் வயல் சி.சி.த.க.பாடசாலைக்கு, தங்கராசா தீபா - கிளிநொச்சி - குமுழமுனை அ.த.க.பாடசாலைக்கு, கேதீஸ்வரி ரூபகுமார் - பளை - மாசார் அ.த.க.பாடசாலைக்கு, ஸஜனி பிரேமகாந்தன் - மாசார் பளை, இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பாடசாலைக்கு, அன்ரனி விஜிகுமார் ரதிதேவி - வட்டக்கச்சி - மாயாவனூர் அ.த.க.பாடசால்லக்கு, கார்திகேசு திருஞானதேவி - முகாவில் - இயக்கச்சி முகாவில அ.த.க.பாடசாலைக்கு, மாதவன் கருணசிவாணி - இயக்கச்சி, கோவில வயல் சி.சி.த.க.பாடசாலைக்கு, கோமதி சதீஸ்குமார் - முகாவில் இயக்கச்சி முகாவில் அ.த.க.பாடசாலைக்கு, வசந்தலீலா ரஞ்சிதகுமார் - பளை - அல்லிப்பளை சி.சி.த .க.பாடசாலைக்கு, கனகரத்தினம் குகதீசன் - பூநகரி - முக்கொம்பன் அ.த.க.பாடசாலைக்கு, கோபாலதேவன் அகிலா - பூநகரி - முக்கொம்பன் அ.த.க.பாடசாலைக்கு, சங்கீதா இராசேந்திரம்- பூநகரி - பரமன்கிராய் அ.த.க. பாடசாலைக்கு, சுகந்தினி ராஜ்மோகன் - பூநகரி - மகா வித்தியாலயத்திற்கு - பூநகரி மகா வித்தியாலயத்திற்கு, கந்தசாமி தாரணி - கோண்டாவில் - நாச்சிக்குடா அ.மு.த.க.பாடசாலைக்கு, சம்சோன் ஜெகப்பிரகாசம் - கிளிநொச்சி - முக்கொம்பன் அ.த.க.பாடசாலைக்கு, முடியப்பு மரியை சுதர்சினி உலானிஸ் - நாச்சிக்குடா - நாச்சிக்குடா அ.மு.த.க.பாடசாலைக்கு, சுதர்சினி பாலபாஸ்கரன் - முரசுமோட்டை - முருகானந்தா மகா வித்தியாலயத்திற்கு, கந்தையா றஜனி - விசுவமடு - மயில்வாகனபுரம் அ.த.க.பாடசாலைக்கு, ஜெயந்தினி ஸ்ரீகுமார் - கிளிநொச்சி - அம்பிகை வித்தியாலயத்திற்கு,

(தொடரும்.....)


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2436 திகதி 19-06-2013

ஆங்கில எழுத்து: I

வெற்றி எண்கள்: 45 58 61 63

போனஸ் இல: 19

ஜக்பொட் பரிசு ரூ. 10,676,275/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 236372 | 20/- | 4,727,440/- |
| 2 இல | 16894 | 100/- | 1,689,400/- |
| 3 இல | 360 | 1,000/- | 360,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 9672 | 40/- | 386,880/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 625 | 1,000/- | 625,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 11 | 10,000/- | 110,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 10,676,275/- | - |
| 1 இல + போனஸ் இல | 11218 | 100/- | 1,121,800/- |
| 2 இல + போனஸ் இல | 509 | 500/- | 254,500/- |
| 3 இல + போனஸ் இல | 07 | 100,000/- | 700,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 444 | 200/- | 88,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 25 | 1,500/- | 37,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 276138 | | 11,101,320/- |

பச்சை நிற டிக்கட்டுகள் 2013 ஜூன் 22 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 11,321,400/-

(C/1285)

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7


## நயினாதீவு உற்சவங்கள் இன்றுமுதல் வானொலியில் நேரடி அஞ்சல்



(யாழ்ப்பாணம்)
நயினை ஸ்ரீ நாகபூசணி அம்பாள்

ஆலயத்தில் இன்று இரவு நடைபெறும் சப்பரத் திருவிழா, நாளை சனிக்கிழமை நடைபெறும் தேர்த்திருவிழா, நாளை மறுதினம் தீர்த்தோற்சவம் ஆகிய சிறப்பு உறசவங்களை இலங்கை ஒளிபரப்புக் கூட்டுத்தபான யாழ். எப்.எம். வானொலி நேரடியாக அஞ்சல் செய்யவுள்ளது. இவ் நேரடி அஞ்சல் நேர்முக வர்ணணையை வர்ணணைக் கலாநிதி மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் நிகழ்த்தவுள்ளார். (60)

## நயினாதீவு உற்சவத்திற்கு பருத்தித்துறையிலிருந்து பேருந்து

(பருத்தித்துறை)

பருத்தித்துறையியல் இருந்து நயினாதீவு தேர், தீர்த்த உற்சவத்திற்கு சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் காலை 5.00 மணியிலிருந்து பருத்தித்துறை இ.போ.ச. சபையினர் பேருந்து சேவையை நடத்தவுள்ளதாக சாலை முகாமையாளர் கே.கந்தசாமி அறிவித்துள்ளார். (109)

## சமூக விஞ்ஞான படிப்பு வட்டம்

மாதந்தோறும் நடைபெற்று வரும் சமூக விஞ்ஞான படிப்பு வட்டத்தில் "நஞ்சற்ற உணவும் நல்ல தண்ணீரும்" என்ற தலைப்பில் கருத்துரை எதிர்வரும் ஞாயிறுக்கிழமை ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள செயல்திறன் அரங்க இயக்க மண்டபத்தில் நடைபெறும்.

தொடக்கவுரையினை ச.சத்தியதேவனும் கருத்துரையை சூழலியலாளர் பொ.ஜங்கரநேசனும் நிகழ்த்தவுள்ளார். இக் கருத்துரையைத் தொடர்ந்து இடம்பெறும் கலந்துரையாடலில் கலை இலக்கிய சமூக விஞ்ஞான அறிவியல் ஆர்வலர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

# போதிய அறிவுறுத்தல்கள் இல்லை ஒய்வூதிய பணத்தை இழக்கும் நிலை

(யாழ்ப்பாணம்)

சமூகபாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தில் யாழ். மாவட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டவர்களுக்கு போதிய அறிவுறுத்தல்கள் உரிய அதிகாரிகளினால் வழங்காமையாலும் உரிய முறையில் கட்டணங்கள் செலுத்தத் தவறியமையினாலும் தற்போது இத்திட்டத்தின் கீழ் செலுத்திய பணத்தையும் இழக்கின்ற நிலை காணப்படுவதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இத்திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட பயனாளிகள் ஒரு தவணைக் கட்டணத்தை மட்டும் செலுத்தியுள்ளனர். ஏனைய தவணைக் கட்டணங்களை செலுத்தாது கைவிட்டமையினால் இவர்கள் பாதிப்படையும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

சமூக பாதுகாப்பு ஓய்வூதியத்திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டவர்களுக்கே உலக உணவுத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாதமும் உலர் உணவுப் பொருட்கள் கட்டம் கட்டமாக வழங்கப்படும் என்று கிராம சேவகர்களினூடாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.


இதனடிப்படையில் கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் உலக உணவுத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாதமும் உலர் உணவுப் பொருட்கள் கட்டம் கட்டமாக வழங்கப்பட்டு வந்தன.

கிராம அலுவலர்கள் ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்ட பயனாளிகளை சமூகபாதுகாப்பு ஓய்வூதியத்திட்டத்தில் இணைகக வேண்டும் என யாழ்.மாவட்ட செயலகம் இலக்கினை தீர்மானித்ததன் அடிப்படையில் இத திட்டத்தில் அதிகளவான பயனாளிகள் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

இந்நிலையில் பயனுடைய இத்திட்டத்திற்கு பல பயனாளிகளை இணைத்து நான்கு தவணைக்குரிய கட்டணங்களையும் செலுத்துவதில் உரிய அதிகாரிகள் முழுமையான கவனம் எடுக்காமையினால் பலர் பணத்தைச் செலுத்தியும் அதனுடைய பயனை அனுபவிக்கமுடியாதவர்களாக இருந்து வருகின்றனர்.

இதனால் பணத்தைச் செலுததிய பயனாளிகள் ஒரு தொகுதி பணத்தை இழக்கவேண்டிய நிலை காணப்படுகின்றது. யாழ். மாவட்டத்தில் இவ்வாறு பலர். பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## சப்பரத்தில் ஏறிவா முருகா!



பொற்பதி என வந்த பொலிகண்டிப் பதியிலே
அற்புதங்கள் பலதந்த ஆறுமுக வேலா!
நெற்கண்ணில் தோன்றிய தீயினிலே - தாமரை
கற்பத்தில் அவதரித்த ஆறுமுகனே!
சப்பறத்திருவிழா கண்டுகொள்ள
திக்கெட்டும் அடியார் குறைதீர்க்கும் முத்துச்சாமியே
பற்பல சோதனைகள் எனச் சூழ்ந்தாலும்
வெற்றிதரும் வேலுடனே வருவான் வேலவனே!
நற்தமிழ் உரைக்கும் நம் வாழ்வினிலே
பொறுத்திருந்து காத்தருள்வான் கல்யாணக் கந்தனே!

பொலிகண்டி கல்யாண வேலவன் ஆலய மஹோற்சவத்தில் 12 ஆம் திருவிழா இன்றாகும்.

பொலிகையூர்
கே.கே.விசிந்தன்

## மகோற்சவம்

(அச்சவேலி)

கரவெட்டி தச்ச ஐங்கரன் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி திருவிழாக்கள் இடம்பெற்று வருகின்றது இவ் ஆலயத்தில் பூசைகள் யாவும் ஆகம விதி முறைப்படியே இடம்பெறுகின்றன.

அத்துடன் ஒவ்வொரு திருவிழாவன்றும் சுவாமி காலை, மாலை வேளைகளில் உள்வீதி உலா வருதலும் இடம்பெறுகின்றது.

இவ்ஆலய தேர்த்திருவிழாவானது நாளை சனிக்கிழமையும் தீர்த்த திருவிழா மறுநாள் ஞாயிற்றுக்கிமையும் இடம்பெறவுள்ளது.


## நீராவிப்பதியுறையும் வீரகத்தி விநாயகரே!

சித்திரத்தேரினிலே சிங்காரப் பவனிவரும்
நிராவிப் பதியுறையம் வீரகத்தி விநாயகரே!
இத்தினத்திலுமை ஏத்தியே பண்ணிந்திட்டோம்
ஈசனார் திருமகனே ஐங்கரன் கணபதியே!
பக்தியுடன் பதம் பணிந்து வடம்பிடித்திழுத்தோம்
பாதமலர் காட்டி முத்திதரவேண்டும்!
சித்திகள் பல அருளி நோயற்ற வாழ்வும் அருளி
சீரோடு சிறக்கச் செய்வாய் கஜமுகனே
சரணம் ! சரணம்!!

நீராவியடி வீரகத்தி விநாயகர் ஆலய சித்திரத்தேர் வெள்ளோட்டம் இன்றாகும்.

கலாபூஷணம்
இராசையா ஸ்ரீதரன்

# விக்கினேஸ்வரா மகா வித்தியாலய கட்டடம் மாணவர்களிடம் கையளிப்பு



புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா மகாவித்தியாலய கட்டடம் மாணவர்களிடம் கையளிப்பட்டுள்ளது. இந்நிகழ்வு விக்கினேஸ்வரா மகா வித்தியாலய அதிபர் இ.சந்திரகுமார் தலைமையில் கடந்த 14 ஆம் திகதி இடம்பெற்றது.

பிரதம விருந்தினர்களை பாடசாலை மாணவர்களின் இசை அணிமரியாதையுடன் அழைத்து வரப்பட்டு நிகழ்வு ஆரம்பமாகி "fridsro" என்ற நிறுவனத்தினால் 07 மில்லியன் ரூபா செலவில் பாடசாலைக் கட்டிடம் திருத்த வேலைசெய்து கையளிக்கப்பட்டுள்ளது.

சமூக சேவை அமைச்சர் வைபவ ரீதியாக கட்டடத்தை கையளித்துள்ளார் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கியதோடு மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. (40)

# தொழில் உறவுகள் அமைச்சினால் மாற்றுதிறனாளிகளுக்கான தொழிற் சந்தை

தொழில் வாய்ப்பின்றி இருக்கின்ற மாற்றுத் திறனாளிகளுக்கு (Differently able people) தொழில்வாய்ப்பினை ஏற்படுத்தி பொருளாதார ரீதியில் தன்னிறைவுத் தன்மையினை ஏற்படுத்து முகமாக மாற்றுத் திறனாளிகளுக்கான தொழில் சந்தைக்கான ஏற்பாடுதொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு, சமூக சேவை அமைச்சுடன் இணைநது மேற்கொண்டுள்ளது.

வடமாகாணத்திற்கான மாற்றுத் திறனாளிகளுக்கான தொழிற் சந்தை வீரசிங்கம் மண்டபத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 8.00 மணிமுதல் பி.ப 2.00 மணிவரை நடைபெறவுள்ளது.

எனவே மாற்றுத்திறனாளிகளுக்கான தொழிற்சந்தையில் வடமாகாணத்திலுள்ளதொழில் தருநர்களும் கலந்து கொண்டு தொழிற் சந்தையில் பங்கெடுக்கின்ற மாற்றுத் திறனாளிகளில் பொருத்தமானவரை இனங்கண்டு தொழில்வாய்ப்பினை வழங்குவதன் மூலம் மாற்று திறனாளிகளின் பொருளாதார பலத்தினை மேம்படுத்துவதுடன் தாங்கள் சமூக கடமையினை நிறைவேற்றுவதற்கு ஒரு சந்தர்ப்பத்தினையும் பெற்றுக் கொள்ள முடிகிறது.

எனவே மாற்றுத் திறனாளிகளுக்கான தொழிற்சந்தையில் பங்கெடுக்க விரும்புகின்ற வடமாகாணத்தில் தொழில் மற்றும் வியாபார நிறுவனங்களினை நடாத்துகின்ற தொழில் தருநர்கள் சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில அமைந்துள்ள பிரதி தொழில் ஆணையாளர் அலுவலகத்துடன் நேரிலோ அல்லது தொலைபேசி மூலமாகவோ (அலுவலக தொலைபேசி இல-0212226333) தொடர்புகொண்டு தமக்குரிய இடத்தினை ஒதுக்கிக் கொள்ளுமாறு வடமாகாண பிரதித் தொழில் ஆணையாளர் தெரிவித்தார்.

# மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டி முடிவுகள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்துாது தனிநாயகம் அடிகள் நூற்றாண்டு விழாவை யொட்டி யாழ். தமிழ்ச்சங்கமும் யாழ. மறைமாவட்டமும் இணைநது மாவட்ட ரீதியில் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

மன்னார் மாவட்டம்

பேச்சு (கீழ்ப்பிரிவு)

த.தனுர்ஷி (சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி) சே.கிறிஷேரா (புனித சவேரியார் பெண்கள் கல்லூரி), ஸ்ரீ.ஜொகான் லக்ஷன் (புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி).

(மத்தியபிரிவு)

ஜெ.ருமேசினி (புனித சவேரியார் பெண்கள்), ர.ஸாண்டிகா (சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி), வை. டிஜொனார்த் (புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி).

(மேற்பிரிவு)

சே.கிறிசேரா (புனித சவேரியார் பெண்கள் கல்லூரி) ஜே.றொக்ஷன்(புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி).

(அதிமேற்பிரிவு)

சூ.ஹட்சன் (சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி) யே.ஜென்சில் சார்ல்ஸ் (புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி)

கட்டுரை

(மத்தியபிரிவு)

என்.அபிஷா(புனித சவேரியார் பெண்கள் கல்லூரி) க.உகேஷ் (சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி).

(மேற்பிரிவு)

வே.பவதாரிணி (சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி) சீ.மே.நிதுசா சூசை (புனித சவேரியார் பெண்கள் கல்லூரி) அ.அருட்பிரகாஸ் (புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி).

(தொடரும்...)

## கும்பாபிஷேக தினம்

(சாவகச்சேரி)

நுணாவில்மேற்கு விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய கும்பாபிசேக தினவிழா இன்று இடம்பெறவுள்ளது. ஆலயத்தின் மகா கும்பாபிசேகம் இடம்பெற்ற தினத்தை முன்னிட்டு 108 சங்காபிசேகம் இன்று காலை இடம்பெறவுள்ளது.

விநாயகப் பெருமானுக்கு விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளதோடு மணவாளக் கோல உற்சவமும் இடம்பெறவுள்ளது. ஆலயபிரதமகுரு J.F. ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் இவ்வுற்சவம் இடம்பெறவுள்ளதோடு சுவாமி வீதியுலாவும இடம்பெறவுள்ளது. தொடர்ந்து மகேஸ்வர பூசைஇடம்பெற்று அன்னதானமும் வழங்கப்படவுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர். தெரிவித்துள்ளனர். (இ)

# நாளை வெளி வருகிறது எழுதாத ஒரு கவிதை

(பருத்தித்துறை )

பருத்தித்துறை பிரதேச செயலாளர் கவிஞர் ஆர். டி ஜெயசீலனின் எழுதாத ஒரு கவிதை நூல் வெளியீடும் அறிமுகநிகழ்வும் பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கலாசார பேரவை உபதலைவர் ஆர்.ரி.குலசிங்கம் தலைமையில் நாளை பி.ப 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

வாழ்த்துரைகளை வடமாகாண உள்ளூராட்சி அமைச்சு செயலாளர் ஆர்.வரதீஸ்வரன் பருத்தித்துறை பிரதேச சபையின் ஓய்வுபெற்ற செயலாளர் எஸ்.பசுபதி (குடா நீர் ஊரான்) கலாசார பேரவையின் உபசெயலாளர் யோ.இருதயராசா நிகழ்த்துவர்.

நூல் அறிமுகவுரையை சைவப்புலவர் பொன்.சுகந்தன் வெளியீட்டுரையை கவிஞர் எஸ்.குணேஸ்வரன் நிகழ்த்தவுள்ளார். வடமாகாண சபையின் இளைப்பாறிய பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி நூலை வெளியிட்டு வைக்க கலாபூஷணம் தெனியான் முதற்பிரதியைப் பெறுவார்.

நூல் நயப்புரைகளை கவிஞர் பெரிய ஐங்கரன், மூத்த எழுத்தாளர் சி.உதயகுமார் ஆகியோர் நிகழ்த்துவர் கவிஞர் ஜெயசீலனின் ஏற்புரையை அடுத்து சித்தாந்த பண்டிதர் சிவமுகுந்தன் நன்றியுரை நிகழ்த்துவார். (01)

ஒவ்வொருவரும் உலகத்தை மாற்ற நினைக்கிறார்களேயொழிய தம்மை மாற்றிக்கொள்ள நினைப்பதில்லை. - ஆபிரகாம் லிங்கன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## வெயிலை வெறுக்க வேண்டாம்!

அக்னி நட்சத்திரம் காண்டாவனம் எல்லாம் வாட்டி விடைபெற்றுச் சென்றுவிட்டது, வெயிலின் பாதிப்பும் குறைந்துவிட்டது. இப்போது மழை பெய்யாதா, வெக்கை தணிந்து உடல் குளிராதா என்று ஏங்குகிறோம். மாரி வந்து வீட்டுக்குள் குளிரில் முடங்கும் போதுதான் மறுபடியும் வெயிலுக்கு ஏங்கும் மனது.

ஏப்ரல், மே என்றாலே மனதளவில் வெயிலை நினைத்து அஞ்சத் தொடங்கிவிடுகிறோம். வெயில் என்றாலே அதை கொடுமையானதாகவே நினைக்கிறோம். சலித்துக் கொள்கிறோம். ஆனால், சுட்டெரிக்கும் வெயிலில் அலைந்து திரிந்து உழைப்போர் இருக்கிறார்கள்! அவர்கள் வெயிலை என்றைக்குமே வெறுத்ததில்லை. வெயில் வெறுக்கத்தக்கதும் அல்ல.

வெயில் இல்லாவிடில் உலகில் உயிர்களே இல்லை என்பதுதானே உண்மை! வெயிலில்தானே ஒளித்தொகுப்புச் செய்து, நமது தாவரங்கள் தமக்குத் தேவையான உணவை, இலைகள் மூலம் உற்பத்தி செய்கின்றன. அந்தத் தாவரங்கள் மூலம் தானே நமக்கும் காய்கறிகள்! வெப்பச் சலனம் ஏற்பட்டால்தானே அது மழை பெய்யும் வாய்ப்பை ஏற்படுத்தும்?

அனைத்துக்கும் ஆதாரமானது வெயில் என்பதை உணர்த்துவதற்காக, "சூரிய நமஸ்காரம்" என்று கதிரவனை வணங்குவது நமது மரபில் உள்ளது. இது அறிவியல்பூர்வ உண்மையுமாகும் என்பதை இப்போது மருத்துவர்களும் கூறுகிறார்கள். ஐரோப்பியர் வருகைக்கு முன்பெல்லாம் வெயிலைப் பற்றிய அச்சம் நம்மிடம் இருந்ததில்லை. கோடைக்கு குளிர்வாசஸ்தலம் தேடி ஓடும் வழக்கம் இருந்ததில்லை.

50 ஆண்டுக்கு முன்பு நம்மவர்கள் குளிர்சாதன வசதியை நினைத்துப் பார்த்ததுண்டா? வீட்டுக்குள் குளிர்சாதனப் பெட்டிகள் இருந்தது உண்டா? பெரும்பாலான வீடுகளில் மின்விசிறி கூட அவசியப்படவில்லை. ஆக, இயற்கை நமது உடலை சூழலுக்கு ஏற்பவே படைத்திருக்கிறது. நமது நாடு வெப்பமண்டலத்தில் இருப்பதால் நமது உடலும் வெப்பத்தைத் தாங்கும் வகையிலே இருந்தது.

ஆனால், நாம் நமது வாழ்க்கைமுறையை மாற்றிவிட்டோம். வெப்பத்தைக் கட்டுக்குள் வைத்திருக்கும் மரங்களது எண்ணிக்கையைக் குறைத்துவிட்டோம். மனிதத் தலைகளை விட மரங்களின் கிளைகள் அதிகமாக இருக்கவேண்டும் என்பதை மறந்துவிட்டோம். விளைவு நம்மால் இயற்கை வெப்பத்தைக் கூட ஏற்க முடியாத உடல் அமைப்பினராகிவிட்டோம்.

தென்னை ஓலை, பனை ஓலை, வைக்கோல், புல் ஆகியவற்றிலான கூரைகளையும் மண் சுவரால் ஆன வீடுகளையும் விட்டுவிட்டு சிமெந்தைப் பூசிய, மாபிள் பதிக்கப்பட்ட "கொதி அடுப்பு – புறாக் கூண்டு'களைக் கட்டிக்கொண்டுவிட்டோம்.

வெப்பம் என்பது நமது உடலுக்குத் தேவைப்படும் இயற்கை சக்தி. சூரிய வெயில் மூலம் நமது உடல் நமக்குத் தேவையான விற்றமின் "டி"யை உற்பத்திசெய்கிறது. தோலுக்கு கீழ் உள்ள கொழுப்பில் வெயில்பட்டால் அது இரசாயன மாற்றத்தால், விற்றமின் "டி" ஆகிறது. அதன் மூலம் நமக்குத் தேவையான கல்சியம் கிடைக்கிறது.

கல்சியம் நமது எலும்பு உறுதியாக இருப்பதற்கு அவசியம். கல்சியம் குறைபாட்டால் குழந்தைகளுக்கு "ரிக்கெட்ஸ்" எனும் பாதிப்பும், முதியோருக்கு மூட்டு வலி போன்றனவும் ஏற்படுகிறது. சமீபகாலமாக குழந்தை முதல் பெரியவர்கள் வரை சுமார் 75 சதவீதம் பேருக்கு விற்றமின் "டி" குறைபாடால் ஏற்படும் பாதிப்பு அதிகம் இருப்பதாக மருத்துவர்கள் கூறுகின்றனர்.

ஆக வெப்பத்தை வெறுத்து நிழலில் மட்டுமே நாம் வாழ்ந்தால் பல்வேறு உடல் பாதிப்புகள் நேரிடும். இப்போதெல்லாம் உடலில் சூரியன் நேரடியாகப் படுவதே அரிதாகிவிட்டது. வியாதியின்றி வாழ நாம் வெயிலை வெறுக்க வேண்டாம். - ஆசிரியர்

# புலிகள் அடைய நினைத்ததை முயற்சிக்கின்றது கூட்டமைப்பு

## முடியாது என்கிறது அரசு

விடுதலைப் புலிகள் துப்பாக்கிகளின் மூலம் அடைய நினைத்ததை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனநாயக ரீதியாக அடைவதற்கு அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்காது என்று முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் செய்யக் கூடியது ஒன்றுமில்லை.

ஆனால், இந்த விவகாரத்தை பின் தள்ளிப் போடலாம். அது தமிழ் மக்களுக்கு தீங்கானது.

எதைச் செய்ய வேண்டுமானாலும், அவர்கள் தெரிவுக்குழு முன் தோன்ற வேண்டும்.

தற்போதைய பிரச்சினைக்கு அரசாங்கத்தினாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினாலும் தனித்து தீர்வு காணமுடியாது.

அவர்கள் ஒரு ஜனநாயக வழிமுறைக்கு வந்தால், அந்த வழியிலேயே தொடர்ந்து நிற்க வேண்டும்.

விடுதலைப் புலிகளின் வழியைப் பின்பற்ற முயற்சித்தால், அரசாங்கம் அதைப் பொறுத்துக் கொண்டிருக்காது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னமும் தனித் தமிழ் தாயகம் என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளது.

அதற்கு அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்காது. தெரிவுக்குழுவில் பங்கேற்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்பவில்லை.

ஏனென்றால் அவர்களுக்கு தேசிய பிரச்சினை தீர்க்கப்படுவதில் விருப்பமில்லை.

தெரிவுக்குழுவுக்கு உறுப்பினர்களை நியமிக்குமாறு அண்மையில், இரா.சம்பந்தனிடம் ஜனாதிபதி கேட்டிருந்தார். ஆனால், இரா.சம்பந்தன் அந்த அழைப்பை நிராகரித்து விட்டார். என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# டெங்கு நோய்த் தொற்று அதிகரிப்பென எச்சரிக்கை

நாட்டில் பதிவாகும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

வாராந்தம் சுமார் 500 டெங்கு நோயாளர்கள் பதிவாகி வருவதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வாறு பதிவாகும் டெங்கு நோயாளர்களில் 50 வீதமானவர்கள் கொழும்பு மாவட்டத்திலேயே உள்ளதாக அமைச்சின் தொற்றுநோய் ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் பபா பலிஹவடன குறிப்பிட்டார்.

பாடசாலை, பல்கலைக்கழகம் போன்ற சன நெரிசல் அதிகமாகவுள்ள பகுதிகளிலேயே டெங்கு நுளம்புகள் அதிகளவில் பரவுகின்றமை இனங் காணப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்

இதேவேளை நுளம்பு ஒழிப்புக்கான விசேட தேசிய வாரமொன்றைப் பிரகடனப்படுத்துவதற்குச் சுகாதார அமைச்சு முடிவு செய்துள்ளது.

இதன்படி எதிர்வரும் யூலை மாதம் முதலாம் திகதி முதல் 7 ஆம் திகதி வரையான காலப் பகுதி டெங்கு நுளம்பு ஒழிப்புக்கான விசேட தேசிய வாரமாகப் பிரகடனப்படுத்தப்படும் என்று சுகாதார அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

வருடா வருடம் யூன், யூலை மாதங்களில் இந்நாட்டில் டெங்கு நோய்க்கு உள்ளாவோரின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுவது வழமை. இதனைக் கருத்தில் கொண்டே இவ்வாரத்தைப் பிரகடனப்படுத்தி டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை விரிவான அடிப்படையில் முன்னெடுக்கப் படவிருப்பதாகவும் அவர் கூறினார். சுகாதாரம், கல்வி, அரச பாதுகாப்பு, உள்ளூராட்சி, மாகாண சபைகள், சுற்றாடல், தகவல் ஊடகம், பொது நிர்வாகம் ஆகிய அமைச்சுக்களின் ஒத்துழைப்போடு இத்தேசிய வேலைத்திட்டம் விரிவான அடிப்படையில் முன்னெடுக்கப்படும் எனவும் அவ்வதிகாரி கூறினார்.

# வெளிநாடு செல்லும் பெண்களுக்கு புதிய விதிமுறைகள் அறிமுகம்

வெளிநாடு செல்லும் பெண்களுக்காக புதிய விதிமுறைகள் அடுத்த மாதம் முதல் அறிமுகப் படுத்தப்படவுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

இதன் பிரகாரம், பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள உத்தியோகத்தர் மூலம் வெளிநாட்டிற்குச் செல்வோரின் குடும்ப நிலைமை மற்றும் பிள்ளைகளின் பாதுகாப்புத் தொடர்பான தகவல்கள் அடங்கிய அறிக்கையொன்றை பெற்றுக்கொள்ளுதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் குறித்த பிரதேசத்திற்குரிய பிரதேச செயலரின் கையொப்பம் இருப்பது கட்டாயமானது என பணியகத்தின் பொது முகாமையாளர் மங்கள ரன்தெனிய குறிப்பிட்டார்.

வேலைவாய்ப்பு தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு இந்த அறிக்கையை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

தாய்மார் வெளிநாடுகளுக்கு தொழிலுக்குச் செல்வதனால் அவர்களது பிள்ளைகளும் குடும்பமும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்வது கண்டறியப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இந்த அறிக்கையின் மூலம் குறித்த பெண் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்குத் தகுதியானவரா, தொழில்வாய்ப்புத் தொடர்பில் அவரது கணவரின் விருப்பம் உள்ளதா மற்றும் சிறுவர்களின் பாதுகாப்பு போன்றவை குறித்து அறிந்துகொள்ள முடியுமென வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பொது முகாமையாளர் கூறினார்.

# காலங்கடந்த ஒப்படை ஏற்க மறுப்பு; சட்டபீடத் தலைவி மீது கத்திக்குத்து

நாவல திறந்த பல்கலைக்கழகத்தின் சட்டபீடப் பிரிவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கத்திக் குத்துச் சம்பவமொன்றில் பல்கலைக்கழக சட்ட பீடத் தலைவி யசோதரா கதிர்காமத்தம்பி பலத்த காயங்களுக்குள்ளாகி சத்திர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளார். சட்டபீடத்தில் கற்கும் மாணவரான சிவஞான சுந்தரம் சுரேந்திரஜித் என்பவரே சட்ட பீடத் தலைவியைக் கத்தியால் குத்தி பலத்த காயங்களுக்குட்படுத்தியதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, சம்பந்தப்பட்ட மாணவர் குறித்த நாளில் தமக்கான ஒப்படை அறிக்கையை சமர்ப்பிக்கத் தவறியுள்ளார். காலங்கடந்த தமது ஒப்படை அறிக்கையை பொறுப்பேற்குமாறு சட்டபீடத் தலைவியான யசோதரா கதிர்காமத் தம்பியிடம் பலவந்தப்படுத்தியதில் ஏற்பட்ட வாய்த்தர்க்கமே கத்திக் குத்தில் முடிவடைந்துள்ளதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றுமுன்தினம் நண்பகல் 12.20 மணியளவில் மேற்படி தர்க்கத்தையடுத்து சட்டபீடத் தலைவியான யசோதரா கதிர்காமத்தம்பி சட்டபீடத்தின் வரவேற்புப் பிரிவிற்கருகில் நடந்து செல்கையில் சம்பந்தப்பட்ட மாணவர் அவரைத் தம்மிடமிருந்த கத்தியால் குத்தியுள்ளார். இதனால் சட்டபீடத் தலைவியின் கழுத்துப் பகுதியிலும் வலது கையிலும் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கத்திக்குத்துக்கு இலக்கான சட்டபீடத் தலைவியின் உடலில் பல காயங்கள் காணப்படுவதுடன் அவர் அவசர சத்திர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளார். எவ்வாறெனினும் அவரது உடல் நிலை கவலைக்கிடமானதாக இல்லையென மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

கத்தியால் குத்திய மாணவன் ஒரு பதிவு செய்யப்பட்ட மருத்துவராகவும் பணியாற்றுவதுடன் சட்ட பீடத்தில் பட்டப்படிப்பு மாணவராகவும் உள்ளார். தமது ஒப்படை அறிக்கையை சட்டபீடத் தலைவி நிராகரித்ததாலேயே அவரைக் கத்தியால் குத்தியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக சிறிவர்தன தெரிவித்துள்ளார். சம்பந்தப்பட்ட மாணவர் தமது புத்தகப் பொதிக்குள் மறைத்துகத்தியை எடுத்து வந்திருக்கலாம் எனவும் அவர் தெரிவித்தார்.





# கண்ணுக்குத் தெரியாமல் களவு போகும் நீர்

**“வேருடன் பிடுங்கப்பட்ட ஒரு மரம் விட்டுச் செல்கிறது பூமியில் ஒரு துளையை”**

**சூழலியலாளர் நக்கீரன்**

முதலில் சில கேள்விகளைக் கேட்டுக்கொள்வோம்.

பருத்தியை விளைவிக்கத் தெரிந்த மேல் நாட்டினருக்கு, பின்னலாடை தொழில் நுட்பத்தை அறிந்திருக்கும் மேல் நாட்டினருக்கு, அதற்கான எந்திரங்களை உற்பத்தி செய்து தரும் மேல் நாட்டினருக்கு இந்த பின்னலாடைகளை மட்டும் அங்கேயே தயாரிக்க தெரியாதா என்ன? பின் ஏன் அதை ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் உற்பத்தி செய்து வாங்கிக்கொள்கிறார்கள்?

இதே போல் உலக அளவில் காலணி தயாரிப்புக்கு புகழ்பெற்ற நாடு இத்தாலி. ஆனால், இந்த நாட்டுக்கு பதப்படுத்தப்பட்ட தோல்கள் ஏற்றுமதி செய்யப்படுவது ஆசிய, ஆபிரிக்க நாடுகளிலிருந்து தான். இந்த இத்தாலி நாடு கச்சாப் பொருளான பதப்படுத்தப்படாத தோல்களை அப்படியே இறக்குமதி செய்துகொண்டு அதை இத்தாலியில் பதப்படுத்திக்கொண்டு காலணிகளை தயாரித்தால் கூடுதலான அந்நிய செலவாணியை மிச்சப்படுத்திக் கொள்ளலாம் அல்லவா? பின் ஏன் அவர்கள் அதை செய்வதில்லை? இக்கேள்விக்கு வழமையான விடையாக முன்னிறுத்தப்படும் “மலிவான மனிதவளம் இங்கு கிடைக்கிறது” என்ற ஒற்றைப் பொருள் அரசியல் சொற்றொடரை சற்றே ஒதுக்கி வைத்துவிட்டு வேறுசில வினாக்களை நாம் எழுப்பிப் பார்க்கலாம்.

கோதுமை உற்பத்தியில் தன்னிறைவு பெற்றதோடு அதை ஏற்றுமதியும் செய்து வந்த நாடு சவுதி அரேபியா, தற்சமயம் அந்நாடு கோதுமையை இறக்குமதி செய்துகொள்கிறது. ஏன்? சீனர்களுக்கு மிகவும் விருப்பமான உணவு பன்றி இறைச்சி. ஆனால், சீன அரசாங்கம் பன்றி இறைச்சி உற்பத்தியைக் கட்டுப்படுத்தி வருகிறது. ஏன்? சிக்கன நீர்ப்பாசன வேளாண்மைக்கு புகழ் பெற்ற இஸ்ரேல் பல வேளாண்விளை பொருட்களை ஏற்றுமதி செய்தாலும் தோடம்பழங்களை அது ஏற்றுமதி செய்வதில்லை. ஏன்?

இப்படியாக பல ஏன்?களை எழுப்பிக்கொண்டே செல்ல முடியும். இத்தகைய வினாக்களுக்கான விடைகளில்தான் ஓர் அரசியல் ஒளிந்திருக்கிறது. அதுதான் நீர் அரசியல்.

மூன்றாம் உலகப்போர் என்று ஒன்று நடைபெற்றால் அது நீருக்காகவே நடைபெறும் என்று பல அறிஞர்கள் கணித்திருக்கிறார்கள். அதற்கான சாத்தியக்கூறுகளும் பல நாடுகளுக்கிடையே காணப்பட்டு வருகிறது. ஆனாலும், பெருமளவு தண்ணீர் தட்டுப்பாடும், பற்றாக்குறையும் நிலவும் மத்திய கிழக்கு நாடுகளில் குறிப்பாக வளை-குடா பகுதி நாடுகளில் நீருக்கான தேவை அதிகமிருக்கும்போதும் அங்கு ஏன் போர் நடைபெறவில்லை என்ற கேள்விக்கு ஏன் நடைபெற வேண்டும்? என்ற கேள்வியை எழுப்புகிறார் இலண்டனை சேர்ந்த புவியியலாளர் டோனி ஆலன். தமக்கு வேண்டிய உணவுப் பொருட்களை இறக்குமதி செய்து கொண்டாலே போதுமே, அது அவர்களுக்குத் தேவையான நீரை தந்துவிடுகிறதே என்கிறார் அவர். மேலும் நீரை நேரடியாக இறக்குமதி செய்துகொள்வதைவிட இது கொள்ளை மலிவு என்றொரு கருத்தாக்கத்தை முன்வைக்கிறார் அவர். 1990இல் வெளியிட்ட இந்த கருத்தாக்கத்திலிருந்து ஆங்கிலத்தில் virtual water என்று பெயரிட்டார். இக்கருத்தாக்கத்தில் இருந்த உண்மைக்காக உலகளாவிய விருது ஒன்றினையும் இவர் பெற்றார்.

தனது “வேர்ச்சுவல் வோட்டர்” கருத்தாக்கத்துக்கு விளக்கம் தரும் ஆலன் இவ்வாறு கூறுகிறார். “கோதுமை மணிகளை விளைவிப்பதற்கு நீர் தேவைப்படுகிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆனால், கோதுமை மணி விளைந்தவுடன் அதை உருவாக்குவதற்கு பயன்பட்ட நீர் அதில் காணப்படுவதில்லை. ஆனால், அதே சமயம் அந்த நீர் அந்த கோதுமை மணிக்குள் உட்பொதிந்துள்ளது அல்லது மறைந்துள்ளது என்பது உண்மைதானே? அந்த நீர்தான் “வேர்ச்சுவல் வோட்டர்” (இதை தமிழ்ப்படுத்துகையில் “மறைந்துள்ள நீர்” என்னும் பொருள்பட “மறைந்துள்ள” என்பதின் வேர்ச் சொல்லான “மறை” என்ற சொல்லைப் பயன்படுத்தி “மறை நீர்” என்ற வார்த்தை இக்கட்டுரையில் பயன்படுத்தப்படுகிறது).

இப்படி கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துள்ள நீர்தான் மத்திய கிழக்கு நாடுகளுக்குள் பிரச்சினையை எழுப்புவதில்லை என்கிறார் ஆலன். எடுத்துக்காட்டாக ஒரு நாடு ஒரு தொன் கோதுமையை அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்துகொள்ளும்போது அந்நாடு 1300 கனமீற்றர் நீரையும் இறக்குமதி செய்து கொள்கிறது அல்லது 1300 கனமீற்றர் அளவுக்கு தனது சொந்த நீரை சேமித்துக் கொள்கிறது என்று பொருள். ஒரு அண்ணளவான கணக்கீட்டின் படி ஒரு தொன் தானியம் 1000 தொன் நீருக்குச் சமம் என புரிந்து கொள்ளலாம்.

ஆலனின் இந்த “மறை நீர்” கருத்தாக்கத்தைத் தொடர்ந்து ஒவ்வொரு பொருளுக்குமான “மறை நீர்” அளவை கணக்கிட தொடங்கினர் அறிவியலாளர்கள்.. இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஒருவர் காலையில் ஒரு கோப்பை கோப்பி அருந்துகிறார் என்று வைத்துக் கொள்வோம். அக்கோப்பியில் உள்ள மறை நீரின் அளவு 140 லீ. ஆகும்.

அதாவது ஒரு கோப்பிச் செடியைப் பயிரிட்டு, வளர்த்து, கொட்டையை அறுவடை செய்து, தூளாக்கி, பொதியிட்டு அதை கப்பலில் ஏற்றுமதி செய்யும் நாட்டின் நீர் அதில் மறைந்துள்ளது. இது ஒவ்வொரு ஏற்றுமதிப் பொருளுக்கும் பொருந்தும். இப்படி கணக்கிடும் போதுதான் ஒரு கோப்பை கோப்பியின் மறை நீர் அளவு 140 லீ ஆகிறது. இந்த அளவானது ஒரு இங்கிலாந்து நாட்டவர் நேரடியாக புழங்கும் ஒருநாள் நீரின் அளவாகும். அதாவது குளிக்க, குடிக்க, சமைக்க, கழிவறை சுத்தம் செய்ய என அனைத்துக்கும் பயன்படுத்தும் நீரின் அளவாகும். ஆனால், இந்த கோப்பிக்கான மறை நீரை ஏற்றுமதி செய்த ஆபிரிக்க நாட்டினரோ நாளொன்றுக்கு சராசரியாக 10 முதல் 20 லீற்றர் நீர் வரை கூட புழங்குவதற்கு கிடைக்காமல் அவதியுறுகின்றனர்.

இத்தகவலை தெரிந்து கொண்ட கையோடு நாம் முன்னர் எழுப்பிய மூன்று “ஏன்?” கேள்விகளுக்கான விடைகளை இப்போது காண்போம்.

தன் உணவு உற்பத்திக்காக 75 வீத நிலத்தடி நீரையே சார்ந்திருந்த சவுதி அரேபியா தொண்ணூறுகளின் தொடக்கத்தில் கோதுமை விளைச்சலை அதிகப்படுத்திக் கொண்டு அந்நிய செலவாணியை அதிகமாய் ஈட்ட ஏற்றுமதியையும் ஊக்குவித்தது. இதனால் உலக வரலாற்றில் சவுதியைப் போல் நிலத்தடி நீரை அதிகமாய் உறிஞ்சியதில் முன்னிலை பெற்ற நாடு வேறு எதுவுமில்லை என்ற பெயரை அது பெற்றது. விளைவு நிலத்தடி நீரை வெகுவாக காலி செய்துவிட்டு இன்றைய நிலையில் 6 பில்லியன் க.மீ. நீர் பற்றாக்குறையுள்ள நாடாக மாறிவிட்டது. இப்பாடத்தைக் கற்றுக்கொண்ட பிறகுதான் சவுதி இப்போது கோதுமையை இறக்குமதி செய்து கொண்டிருக்கிறது.

நம்நாட்டில் இருந்து முட்டைகளை ஏற்றுமதி செய்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். ஒரு முட்டையின் மறை நீர் அளவு 200 லீ. நாம் மாதந்தோறும் இப்படியாக பல லட்சக்கணக்கான முட்டைகளை மட்டும் ஏற்றுமதி செய்யவில்லை. பல கோடி கன அடிகள் அளவில் நமது நன்னீரையும் சேர்த்துத்தான் ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறோம். இவ்வளவு நன்னீரையும் ஏற்றுமதி செய்துவிட்டுத்தான் 1 லீ தண்ணீரை 50 ரூபா விலை கொடுத்து வாங்கி குடித்துக் கொண்டிருக்கிறோம்.

கார் தயாரிப்பில் உள்ள மறைநீரின் அளவைக் கணக்கிட்டோம் எனில் தலை சுற்றிவிடும். 1.1 தொன் எடையுள்ள ஒரே ஒரு காரின் மறை நீர் அளவு நான்கு இலட்சம் லீற்றர். இந்த அளவானது இரண்டாயிரம் மக்கள் தொகை கொண்ட 5 கிராமங்களின் ஒரு நாள் புழங்குநீர் அளவுக்கு சமமாகும். ஒரு ஆண்டுக்கு இலட்சக்கணக்கில் கார்கள் ஏற்றுமதி செய்யப்படுகிறது எனில் எவ்வளவு மறை நீர் ஏற்றுமதி ஆகிறது என்பதை கணக்கிட்டு கொள்ளுங்கள்.

வெளிநாட்டு நிறுவனங்கள் தங்கள் நாடுகளில் ஏன் கார் தயாரிப்பை மேற்கொள்ளுவதில்லை என்பதற்கான காரணங்களுள் இதுவும் ஒன்றாகும். இந்த விவகாரத்தில் அவர்கள் எவ்வளவு கவனமுடன் இருக்கிறார்கள் என்பதற்கு அவுஸ்திரேலியாவே சிறந்த எடுத்துக்காட்டு. அங்கு நன்னீரைக் கொண்டு கார் கழுவுவது கூட சிறைத் தண்டனைக்குரிய குற்றமாகும்.

ஒரு கிலோ பன்றி இறைச்சியின் மறை நீர் அளவு 4810 லீ. எனவேதான் சீனர்களின் மிகை விருப்ப உணவான பன்றி இறைச்சி உற்பத்தியைக் கட்டுப்படுத்தி வருகிறது சீன அரசு. உலக மக்கள் தொகையில் சீனர்களின் தொகை 21 வீதம். ஆனால், அந்நாட்டின் நன்னீர் வளம் வெறும் 7 வீதம்தான். ஆகையால்தான் குறைந்த அளவு நீர் தேவைப்படும் உணவுகளையே உற்பத்தி செய்ய திட்டமிட்டுள்ள சீனா அதை செயற்படுத்தியும் வருகிறது.

இறுதியாக இஸ்ரேலுக்கு வருவோம். ஒரே ஒரு தோடம்பழத்தின் மறை நீர் அளவு 50 லீ. நீர் சிக்கனத்தைப் பின்பற்றும் இஸ்ரேல் அரசு பின் எப்படி தோடம்பழங்களை ஏற்றுமதி செய்யும்? இப்படியாக விழித்துக்கொண்ட நாடுகள் எல்லாம் மறை நீர் அளவு அதிகமுள்ள பொருட்களின் ஏற்றுமதியை கட்டுப்படுத்த முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்கின்றன.

நீரை அடுத்த சந்ததியினருக்காகவும், உலகுக்காகவும் பாதுகாத்து சேமித்து வைத்தல் என்ற கருத்து மட்டுமல்ல. மதுஒழிப்பு, பன்னாட்டு நிறுவனங்களின் ஆளுகையில் சிக்கியிருக்கும் நாடுகள், உணவுப் பதார்த்தங்களில் இருக்கவேண்டிய கட்டுப்பாடு இன்னபிற அம்சங்களையும் நாம் கவனத்தில் எடுத்தாக வேண்டும்..

பிரம்மராஜன் மொழிபெயர்ப்பில் ஷண்டாரோ தனிக்காவாவின் கவிதை பதினைந்து வரிகளில் இயற்கையின் மீதான நெருக்கத்தை விவரிக்கிறது:

பறவைகள் இருக்கின்றன
எனவே வானம் அங்கிருக்கிறது
வானம் அங்கிருக்கிறது
எனவே அங்கு பலூன்கள் இருக்கின்றன
அங்கு பலூன்கள் இருக்கின்றன
எனவே குழந்தைகள் ஓடிக்கொண்டிருக்கின்றன
எனவே அங்கு சிரிப்பொலி இருக்கிறது
எனவே அங்கு சோகம் சிரிக்கிறது
எனவே அங்கு பிரார்த்தனை இருக்கிறது
மண்டியிடுவதற்கு பூமி இருக்கிறது
அதனால் நீர் வழிந்து ஓடுகிறது
மேலும் இன்றும் நாளையும் இருக்கின்றன
ஒரு மஞ்சள் பறவை அங்கிருக்கிறது
எனவே எல்லா வர்ணங்கள் வடிவங்கள் இயக்கங்களுடன்
அங்கே உலகம் இருக்கிறது.

# 13ஆவது திருத்தச்சட்ட விடயத்தில் அழுத்தங்களுக்கு அடிபணியாது அரசு

## அமைச்சர் நிமால் திட்டவட்டம்



(கொழும்பு)

13ஆவது திருத்தச்சட்டத்தை திருத்தும் விடயத்தில், உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகளின் அழுத்தங்களுக்கு அரசாங்கம் அடிபணியாது என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

"தமிழ்நாட்டினதும், இலங்கைக்கும் எதிரான சக்திகளினதும் அழுத்தம் காரணமாகவே, கடந்த மார்ச் மாதம் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களித்தது.

இந்தச் சூழ்நிலையை நாம் புரிந்து கொண்டுள்ளோம். அதேபோல, நாம் இப்போது முகம்கொடுத்துள்ள நிலைமையையும் இந்தியா புரிந்து கொள்ளும்.

நாட்டு மக்களுக்கு நல்லதைச் செய்வதற்கு இந்தியா எம்மை அனுமதிக்கும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். வரும் செப்ரெம்பர் மாதம் வடக்கு மாகாணசபைத் தேர்தல் திட்டமிட்டபடி நடத்தப்படும்.

அதற்கு முன்னர், மாகாண சபைகளின் காணி, காவல்துறை அதிகாரங்கள் தொடர்பாக எந்த மாற்றமும் செய்யப்படாது.

இது தொடர்பான திருத்தங்கள் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் சமர்ப்பிக்கப்படலாம்.

அதேவேளை, இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட மாகாணசபைகள் இணைவதைத் தடுக்கும் அரசியலமைப்புத் திருத்தம் இரண்டு வாரங்களுக்குள் சட்டமாக்கப்படும்." என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்

# போகம்பறை சிறைச்சாலை விரைவில் அரசாங்கத்திடம்

(கொழும்பு)

கண்டி - போகம்பறை சிறைச்சாலையை எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்குள் அரசாங்கத்திடம் ஒப்படைக்கவுள்ளதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. இந்தச் சிறைச்சாலையிலுள்ள கைதிகள் பல்லேகலே மற்றும் பூஸா சிறைச்சாலைகளுக்கு மாற்றப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் பி.எஸ்.விதானகே கூறினார்.

இதுவரையில் கண்டி - போகம்பறை சிறைச்சாலையிலிருந்த 400 விளக்கமறியல் சந்தேகநபர்கள் பல்லேகலே சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக செயலாளர் குறிப்பிட்டார்.

நகரங்களிலிருந்து சிறைச்சாலைகளை அகற்றும் அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

# நாடாளுமன்ற புலமைப்பரிசில் சபை இல்லாதொழிக்க முற்படுவது தவறு

## அதிருப்தி கொள்கின்றது ஐ.தே.க

(கொழும்பு)

நாட்டினதும் நாட்டு மாணவர்களினதும் எதிர்காலம் கருதி நல்நோக்கத்துக்காக நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்துடன் ஐக்கிய தேசியக்கட்சியினால் ஸ்தாபிக்கப்பட்ட நாடாளுமன்ற புலமைப்பரிசில் சபையை இல்லாதொழிப்பதற்கு அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட தீர்மானம் தவறானது என்று ஐக்கிய தேசிய கட்சி எம்.பியான அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

நாட்டின் கல்வி மேம்பாட்டையும் மாணவர்களின் கல்வி வளத்தையும் விருத்தியடையச் செய்யும் வகையில் ஒரு நல்ல நோக்கத்திற்காகவே நாடாளுமன்ற புலமைப்பரிசில் சபை ஐக்கிய தேசியக்கட்சியினால் 2002 இல் அறிமுகப்படுத்தப்பட்டது.

இதன் போது இந்தச் சபையின் அனைத்து உறுப்பினர்களின் அங்கீகாரத்துடனேயே அது நிறைவேற்றப்பட்டது. இந்தச் சபையின் மூலம் எமது மாணவ சமுதாயத்தின் முன்னேற்றம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

எனினும் எமது ஆட்சி மோசமான முறையில் கவிழ்க்கப்பட்டதன் காரணத்தால் இந்தச் சபை ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேறாது போய்விட்டது. எனினும் எமது நாட்டினதும் மாணவர்களினதும் எதிர்காலம் கருதிய இத்திட்டத்தை இல்லாதொழிப்பதற்கு அரசாங்கம் முடிவெடுத்திருப்பது ஏன் என்பது புரியாதுள்ளது. புலமைப்பரிசில் திட்டம் ஒன்றுக்கு எதிராக அரசாங்கம் செயற்படுவது தவறான செயற்பாடாகும்.

இந்நாட்டின் கல்வி நிலையை சீரழிப்பதற்கு இடமளிக்கக் கூடாது என்பதே எமது நிலைப்பாடாகும். புத்தளத்தில் ஆசிரியை ஒருவரை முழந்தாளிட வைத்தமைக்காக மாகாண சபை உறுப்பினர் ஒருவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனினும் இதனை தேர்தலைக் கருதிய செயற்பாடாகவே எண்ண முடிகின்றது. ஏனெனில் இதற்கு முன்னரும் இத்தகைய பல்வேறு சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. அவை குறித்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றார்.

# 13ஐ மறுசீரமைத்த பின்னரே வடக்கு மாகாண தேர்தல்

## அரசை எச்சரிக்கும் அமைச்சர் விமல்

(கொழும்பு)

13ஆவது அரசியலமைப்புச் சட்டத்தை மறுசீரமைத்த பின்பே செப்ரெம்பர் மாதம் வடக்கில் தேர்தல் நடாத்தல் வேண்டும். இந்த நிலைப்பாட்டிலேயே எமது கட்சி உள்ளது. அதனை மீறி அரசு செப்ரெம்பரில் 13ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தம் செய்யாமல் தேர்தலை நடாத்தினால் நாட்டில் பல எதிர்ப்பு அலைகள் தோன்றும். மக்களை இதற்காக வீதியில் இறக்குவோம். என அமைச்சர் விமல் வீரவன்ச எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பத்தரமுல்லையில் உள்ள அவரது கட்சி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கையிலேயே தேசிய சுதந்திர முன்னணித் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் அங்கு கருத்துத் தெரிவிக்கையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியா சென்று சோனியா காந்தியையும் பிரதமர் மன்மோகன் சிங்கையும் சந்தித்தாலும் இந்தியாவின் லோக் சபை நிர்வாகத்தின் கீழ் இலங்கை அரசாங்கமும் ஜனாதிபதியும் இல்லை.

அப்படி அவர்கள் நினைத்தால் தற்போதைய ஜனாதிபதி அதற்காக அடிபணியப்போவதில்லை. யுத்தம் நடைபெறும் போது எவ்வளவோ அச்சுறுத்தல் வந்தபோதும் அதை ஜனாதிபதி கண்டுகொள்ளாமல் யுத்தத்தை வெற்றியீட்டினார். அதேபோன்று இந்தியா இவ்விடயத்தில் கையடித்தால் அதனை அவர் கணக்கெடுக்கப் போவதில்லை. இந்த நாட்டில் பயங்கரவாதத்தை உருவாக்கியது இநதியாவே. இந்தியாவின் ரோவுடன் இணைந்து விடுதலைப் புலிகளுக்கு பயிற்சியளித்து ஆயுதம் வழங்கினார்கள். அதே விடுதலைப் புலிகளே இந்தியாவின் பிரதமர் ராஜிவ் காந்தியை கொலைசெய்தார்கள்.

இலங்கையில் 30 வருட கொடூர பயங்கரவாதத்தை உருவாக்கியவர்களும் இந்தியர்களே. அந்தக் கொடிய பயங்கரவாத்தை வெற்றிகொண்டவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விடுதலைப் புலிகளின் ஓர் ஏஜென்சியாகவே நாங்கள் பார்க்கின்றோம். என்றும் தெரிவித்தார்.

# நம்பிக்கையை வெல்லாதோர் மாற்று வழிகுறித்து சிந்திப்பு

## அமைச்சர் வாசு கூறுகிறார்

(கொழும்பு)

மக்களின் நம்பிக்கையை வெல்ல முடியாதவர்களே மாற்று வழிகளை யோசித்து சூழ்ச்சிகளை மேற்கொள்வார்கள் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். கடந்த சில தினங்களாக பொதுபல சேனா அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவை இலக்கு வைத்து பல்வேறு விமர்சனங்களை செய்து வருகின்ற நிலையில் அதுகுறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், மக்கள் மீது நம்பிக்கையை வைத்து தேர்தலில் வெற்றி பெற முடியாதவர்களே மாற்று வழிகளைக் கையாண்டு என்னுடைய பலத்தைக் குறைப்பதற்கு முயற்சி செய்கின்றனர்.

அத்தோடு இரத்தினபுரி மாவட்டத்தில் இருக்கும் எனது வாக்கு பலத்தை இல்லாமல் செய்வதற்கே இந்த முயற்சியென என்னால் புரிந்து கொள்ள முடிவதாகவும் இதற்கு பொது பல சேனா அமைப்பின் தலைவர் ஞானசார தேரர் என்னை விமர்சித்து வருவதாகவும் தெரிவித்தார்.

பொதுபல சேனாவின் கருத்துக்களுக்கு மக்கள் ஏமாந்து விட மாட்டார்கள். நானும் ஞானசார தேரரின் கருத்துக்களுக்கு அஞ்சப் போவதில்லை எனவும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அத்துடன் நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் சமமான உரிமையைப் பெற்றுக் கொடுப்பதற்கு என்னுடைய நடவடிக்கைகள் தொடரும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# புதிய ஊடக ஒழுக்கவிதிக் கோவை பேச்சு சுதந்திரத்திற்கு அச்சுறுத்தல்

## மனித உரிமை கண்காணிப்பகம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

புதிய ஊடக ஒழுக்கவிதியானது பேச்சு சுதந்திரத்திற்கு அச்சுறுத்தலாக அமையும் என மனித உரிமை கண்காணிப்பகம் அறிவித்துள்ளது. ஊடக அமைச்சினால் ஊடக ஒழுக்க விதிக் கோவையொன்று அண்மையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக மனித உரிமை கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.

அச்சு, இலத்திரனியல் மற்றும் இணைய ஊடகங்களை உள்ளடக்கும் வகையில் புதிய ஒழுக்க விதி உருவாக்கப்பட்டுள்ளது. ஊடகங்களை ஒடுக்கும் நோக்கில் அரசாங்கம் இந்த ஒழுக்க விதிகளை அறிமுகம் செய்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது,

குறிப்பாக அரசாங்கத்தை விமர்சனம் செய்யும், மாற்றுக் கருத்துக்களை வெளியிடும் ஊடகங்களை அடக்குமுறைக்கு உட்படுத்தும் நோக்கிலேயே இந்த புதிய ஊடக ஒழுக்க விதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஊடகவியலாளர்கள் ஏற்கனவே அழுத்தங்களை எதிர்நோக்கி வருவதாகவும் இந்த ஒழுக்க விதியானது மேலும் ஊடகவியலாளர்கள் சுய தணிக்கையில் ஈடுபட வழிகோலும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

# மாணவருக்கு 43 நாடுகளில் வருடாந்தம் புலமைப்பரிசில்

(கொழும்பு)

ஜனாதிபதி செயலகத்தினூடாக வருடாந்தம் 43 நாடுகளில் இலங்கை மாணவர்களுக்கு வெளிநாட்டு புலமைப்பரிசில் பெற்றுக்கொடுக்கும் திட்டம் ஒன்றை அரசாங்கம் ஆரம்பித்துள்ளதாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பீ.திசாநாயக்க நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடாளுமன்ற புலமைப் பரிசில் சபை திருத்தச் சட்ட மூலத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அமைச்சர் இத்தகவலை தெரிவித்தார்.

இதன் படி வருடாந்தம் 500இற்கும் மேற்பட்டவர்களுக்கு இந்த புலமை பரிசில்கள் வழங்கப்படுவதாகவும் மற்றும் உயர் கல்வி அமைச்சு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு சமூக கல்வி அபிவிருத்தி நிறுவனம் மூலமும் மேலும் 300இற்கும் மேற்பட்ட வெளிநாட்டு புலமைபரிசில் வழங்கப்படுவதாவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை, இந்தியா, ரஷ்யா, அவுஸ்ரேலியா, சீனா ஆகிய நாடுகளிலிருந்து இலங்கைக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில்கள் இந்த ஆண்டில் இரு மடங்காக அதிகரித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# மின்சாரம் இல்லாத கிராமங்களுக்கு மின்விநியோகத்தை வழங்கக்கோரிக்கை

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட சில கிராமங்களுக்கு மின் விநியோகம் பூரணப்படுத்தப்படாமல் இருக்கின்றது. இக்கிராமங்களுக்கான மின் விநியோகத்தைப் பூர்த்தி செய்து அக்கிராம மக்களுக்கு உதவ வேண்டுமென ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் வடமராட்சிப் பிரதேச இணைப்பாளரும் பிரதேச சபையின் எதிர்க் கட்சித் தலைவருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின் விநியோகத்திற்குப் பொறுப்பான இலங்கை மின்சாரசபையின் திட்டமுகாமையாளரைக் கேட்டுள்ளார். இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யுத்த அனர்த்தங்களினால் பாதிப்படைந்து இடம்பெயர்ந்த மக்கள் தற்போது வடமராட்சி கிழக்கில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர். இக்கிராம மக்களுக்கு அரசாங்கத்தின் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின் இணைப்புகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த பெப்ரவரி மாதத்தில் தாளையடி, மாமுனைக் கிராமங்களில் மின் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டு மீள்குடியேறிய மக்களுக்கு மின் விநியோகம் மேற்கொள்ளப்பட்டது. ஆயினும் மின்விநியோகம் மேற்கொள்ளப்பட்ட கிராமங்களில் சில பகுதிகளுக்கு மின்விநியோகத்திற்கான கம்பங்கள் நாட்டப்பட்டுள்ளன. மின் இணைப்புகள் ஏற்படுத்தப்படவில்லை.

செம்பியன் பற்று தெற்கு கிராமசேவை அலுவலர் பிரிவில் மாணிய வளைப்பகுதி மற்றும் பிள்ளையார் கோவில் வீதி, செம்பியன் பற்று வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் நரசிங்க வைரவர் கோயில் வீதி, மருதங்கேணி தெற்கு கிராம சேவையாளர் பிரிவில் வடலியடிப்பிள்ளையார் கோவில் வீதி ஆகிய பகுதிகளுக்கே இவ்வாறு மின்விநியோகம் மேற்கொள்ளப்படாமல் இருக்கின்றது. எனவே இப்பகுதிகளுக்கான மின் இணைப்புக்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன் அத்துடன் மறமுனைக்கிராமத்திலிருந்து குடாரப்புக்கிராமத்திற்கான மின் இணைப்பை ஏற்படுத்துவதற்கான இலகுவான வாய்ப்புக்கள் உள்ளதால் அதனையும் கருத்திற்கொள்ளுமாறும், நாகர் கோவில் மேற்கு, நாகர் கோவில் கிழக்கு, போக்கறுப்பு கிராம சேவை அலுவலர் பிரிவுகளுக்கும் மின் இணைப்பை வழங்கி அக்கிராம மக்களுக்கும் விமோசனம் வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இக் கடிதத்தின் பிரதிகள் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, யாழ்.அரச அதிபர் எஸ்.அருமைநாயகம், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் என்.திருலிங்கநாதன், யாழ்.மின்பொறியியலாளர் எஸ்.ஞானேஸ்வரன் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

## புவியியல் பாட செயலமர்வு

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 10, 11 வகுப்புக்களில் புவியியல் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான புவியியல் பாட செயலமர்வு இன்றும் நாளையும் யாழ்.கல்விவலய CRC மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி வகுப்புக்களில் யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களை பாடத்திட்டம், ஆசிரியகை நூல், எழுது பொருட்கள் பாட நூல் என்பவற்றுடன் சமூகம் கொடுக்குமாறு யாழ்.கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அருணகிரிராஜா கேட்டுக் கொண்டுள்ளார். (42)

## மெலிஞ்சிமுனைக் கிராமத்துக்கு புதிய பேருந்து சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணத்திலிருந்து மெலிஞ்சி முனைக்கு வடக்கின் வசந்தத்தின் கீழ் ஜனாதிபதி இலங்கை போக்கு வரத்து சபைக்கு அன்பளிப்பு செய்த புதிய பேருந்து இப்பிரதேசத்திற்கு வழங்கப்பட்டு சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முன்னர் ஒன்றரை வருடங்களாக யாழ்ப்பாணத்திலிருந்து மெஞ்சிமுனைக்கும் மெஞ்சிமுனையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கும் புதிய பேருந்து ஒன்று சேவையாற்றிய நிலையில பின்னர் இப்பேருந்து நயினாதீவுக்கு முக்கிய தேவை கருதி மாற்றப்பட் டது. இதனால் மெலிஞ்சிமுனைக்கு பழைய பேருந்துகள் சேவையாற்றியதால் இப்பேருந்துகள் அடிக்கடி பழுதடைவதால் இப்பிரதேச மக்கள், மாணவர்கள் பல சிரமங்களை எதிர்நோக்கிவந்தனர்.

இதனால் இப் பிரதேச மக்களின் நலன் கருதி ஊர்காவற்றுறை பிரதேசசபை தவிசாளர் ம.ஜெயகாந்தன் வட பிராந்திய இலங்கை போக்குவரத்து சபையின், யாழ்.சாலை முகாமையாளர் எஸ்.குண குலபாலச் செல்வத்துடன் தொடர்பு கொண்டு கேட்டதற்கிணங்க கொழும்பிலிருந்து அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு கொண்டுவரப்பட்ட புதிய பேருந்து NB 5839 இலக்க பேருந்தை மெஞ்சிமுனைக்கு சேவையாற்ற வழங்கப்பட்டுள்ளது.

இதனால் இப்பேருந்தானது கடந்த ஒரு வாரமாக இப் பிரதேசத்திற்கு சேவையாற்றுகின்றது. இதனால் இப் பிரதேச மக்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்துள்ளனர். (65)

## இரதோற்சவம்

ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் இரதோற்சவம் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ்வாலயத்தில் இம்முறை புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத்தேரில் விநாயகப்பெருமான் எழுத்தருளவுள்ளதுடன் இன்று வெள்ளிக்கிழமை சித்திரதேர் வெள்ளோட்ட விழா இடம்பெறவுள்ளது.

## அலங்கார உற்சவம்

கைதடி மேற்கு உதயநகர் அருள்மிகு அண்ணமார் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் 09ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

கந்தையா சிவகுருநாதர் பூசாரியார் தலைமையில் 12 நாட்களும் அலங்கார உற்சவம் நடைபெறவுள்ள நிகழ்வுகளில் அண்ணமார் அடியார்களை கலந்து கொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (90)

## கணனி வன்பொருள் பயிற்சிநெறிக்கு விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் கீழ் கணனி வன்பொருள் (Computer Hardweare) பயிற்சி நெறிக்கு யாழ்ப்பாணம் பயிற்சி நிலையத்தால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

**கல்வித்தகைமையாக**

க.பொ.த(சா/த) வரை கற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16 - 35 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

தகுதி உடையவர்கள் முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித்தகைமைகள், தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை மாவட்ட முகாமையாளர், NAITA, இல 44, சோமசுந்தரம் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் ஜீலை மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும். அத்துடன் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கணனி வன்பொருள் கற்கை நெறிக்கான விண்ணப்பம் எனத் தவறாது குறிப்பிடப்பட வேண்டும் என மாவட்ட முகாமையாளர் கி.கிருஷ்ணபாலன் அறிவித்துள்ளார்.

## முரசின் இன்றைய பலன்



(21.06.2013 - வெள்ளிக்கிழமை)

விஜய வருஷம் ஆனி மாதம் 07ஆம் திகதி. பிரதோஷ விரதம்.
விசாகம் காலை 07.18 பின் அனுஷம். திரயோதசி திதி சித்தம் யோகம்.
இராகுகாலம் 10.24 - 11.54 (இரவும் பகலும்).
சுபநேரம் 05.54 - 07.24 (இரவும் பகலும்)

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம்  | புதிய முயற்சியை ஒத்தி வைத்தல், சகோதர வழியில் தலையிடாமை, பயணமுகவரால் ஏமாற்றம், கடனை அடைக்க கடன் படல், பிதாவில் தேக சுகம் பற்றிய மனக்கவலை, எதிரியின் அச்சுறுத்தல், விசாரணையின் முடிவில் விவாகம் கைவிடல், மது போதையினால் வாகன விபத்து, தொழில் மற்றும் பயணத்தினால் குடும்பப்பிரிவு, சுவீப் அதிஷ்டம். |
| ரிஷபம்  | வியாழ சுகத்தினால் பொன்/பொருட்சேர்க்கை, பயணத்திற்கான ஏற்பாடு, மாமனால் வசந்தம், சம்பள ஏற்றம், பிரிந்தவர் பற்றிய தகவல், மனைகட்ட யோசனை, பிணக்குத்தீரல், வழக்கின் முடிவு சாதகம், இலாபங்கிட்டுதல், சுபகாரியத்திற்கு பணச் செலவு, வாகனயோகம், காப்புறுதி பணத்தை தொழிலில் முடக்குதல். |
| மிதுனம்  | வாசகங்களை வாசிக்காமல் கையெழுத்திட்டு மோசடி, பிள்ளைகள் பற்றிய மனத்துக்கம், நோய் கட்டுப்பாட்டை அடைதல், மனை/பூமி/வாகனப் பிணக்கினால் சஞ்சலம், நீதி மன்ற முடிவு வெற்றிதரல், திருமணப்பேச்சு சாதகமான முடிவு, இளைய சகோதார உதவி, மின் ஒழுக்கில் எச்சரிக்கை, பயணத்தை திடீரென கைவிடல். |
| கடகம்  | தாயாரின் நோய் பற்றிய கவலை நீங்குதல், பணவரவு, பங்குத் தொழிலை முறிக்க யோசனை, மனைவி வழியால் உதவி, சுவீப்பில் பணம், தொழிலால் பிரச்சினை, வெளியூர் பயணம் பற்றிய சிந்தனை, தனிவழி சென்று சிறுசிக்கல், அதிக வேகம் பற்றிய எச்சரிக்கை, திருடர் தொல்லை. |
| சிம்மம்  | தைரியச்சனியால் எதிரியின் தொல்லை நீக்கம், குரு 11இல் உள்ளதால் இழந்தது கிடைத்தல், பயணம் வெற்றிதரல், பிதாவின் சொத்து கிடைக்க வழியுண்டு, பதவி முன்னேற்றம், அதிகாரிகளின் பாராட்டு, வியாபார விருத்தி, குழந்தைப்பேறு, பிரிந்தவர் ஒன்று சேரல், பிள்ளைகளால் மகிழ்ச்சி, மனைவியின் தேகசுக முன்னேற்றம். |
| கன்னி  | பத்தில் குரு இருப்பது தொழிலால் சஞ்சலம், இடப்பக்க உறுப்பு பாதிப்பு, எதிரி திருடர் பற்றிய எச்சரிக்கை, பயண ஏற்பாடு, இடமாற்றம் பற்றிய கவலை, காலாவதியான பொருட் சேர்க்கை, விசாரணைக்காக அழைப்பு, பொருள் ஒன்று தவறுதல், நன்கு சிந்தித்து கையெழுத்திடல், வாகனவேகம் பற்றிய எச்சரிக்கை. |
| துலாம்  | அட்டமத்துக் குரு நீக்கம், தொல்லை குறைதல், பயணத்திற்கான ஏற்பாடு, நியமனம் பற்றிய செய்தி, பதவி ஏற்றக் கடிதம், குடும்பத்தில் குதூகலம், புதியன கொள்வனவு, இழுபட்ட கடன் பிரச்சினை தீர்ந்து விடல், உதவப்போய் சிக்கல் வரல், காசோலைகள் திரும்புதல், வேலையில் சேரவிண்ணப்பம். |
| விருச்சிகம்  | இராகு கேது 12இல், 6இல் நிற்பதினால் நோயினால் அவதிப்படல், தொழிலில் இருந்த பிணக்கு மறைதல், பிணை வைக்கப்போய் மனச்சஞ்சலம், சுபகாரியங்களுக்கு பணச் செலவு, மாதாவின் தேக நிலை திருப்தி காணல், தொலைபேசிச் செய்தி நிம்மதி தரல், பிரிந்தவர் மீண்டும் சேரல், மனைவிற்க யோசனை. |
| தனுசு  | முழங்கால் தேய்வு நோயினால் பாதிப்பு, குரு 7இல், சனி 11இல் நிற்பதால் முயற்சி பலிதமாதல், காதல் ஏற்படல், எதிரியின் தொல்லை அகலல், திருட்டுப் போனது பற்றிய செய்தி, குழந்தைப் பேறு, பிதாவின் உடல் நிலை முன்னேற்றம், இலாபம், பயணம் பற்றிய சுபசெய்தி, தொழில் பற்றிய கவலை அகலல். |
| மகரம்  | சனி 10இல், செய் தொழில் பற்றிய பிரச்சினை, எதிர்பாராத சத்திர சிகிச்சை, நண்பர்/கன்னியர் உதவி, புதிய இடத்தில் வியாபார நிலையம் திறக்க யோசனை, தானதர்ம சிந்தனை, சகோதரரால் உதவி, கடன் வசூலிக்க காவல்துறை நாடல், இழுபட்ட விவாகம் பற்றிய சுப செய்தி. |
| கும்பம்  | குரு 5இல் இருப்பது பதவியால் புகழ், இடமாற்றம் ஒத்தி வைத்தல், நோய் குணமடைய சத்திர சிகிச்சை, அரசு மற்றும் தனியார் துறையில் வேலை வாய்ப்பு, பயணம் பற்றிய தித்திப்பான செய்தி, பிதாவின் உதவியால் வசந்தம், வங்கித் தொடர்பால் நன்மை, புதியன கொள்வனவு, சுவீப் அதிர்ஷ்டம். |
| மீனம்  | மாற்று வலுவுள்ளோருக்கு உதவி, கைவிட்ட பயணம் மீள ஆரம்பம், அயலவரின் தொல்லை நீக்கம், பிரிந்தவர் ஒன்று சேரல் புதியன கொள்வனவு, நோயின் தாக்கம் குறைவடைதல், நீண்ட நாட்பட்ட கடன் கைக்குவரல், விவாக சம்பந்தம் ஆரம்பம், மூத்த சகோதர உதவி. |



கிளி. இராமநாதபுரம் அ.த.க.பாடசாலை



இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை



மன்னார் நானாட்டான் மகாவித்தியாலயம்

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட கரப்பந்துப் போட்டியில் மூன்றாமிடத்தைப்பிடித்துக் கொண்ட ஆண்கள் அணியைக் காணலாம். இதில் 15 வயதுப் பிரிவில் கிளிநொச்சி இராமநாதபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அணியும், 17 வயதுப் பிரிவில் கிளி. இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை அணியும், 19 வயதுப் பிரிவில் மன்னார் நானாட்டான் மகாவித்தியாலய அணியும் பிடித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# விலகினார் வீனஸ்



(லண்டன்)

லண்டனில் நடைபெறவுள்ள விம்பிள்டன் ரென்னிஸ் தொடரிலிருந்து அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ் விலகியுள்ளார்.

அமெரிக்காவின் முன்னணி ரென்னிஸ் வீராங்கனைகளில் ஒருவரான வீனஸ் வில்லியம்ஸ் கடந்த மே மாதம் நடந்த பிரெஞ்ச் ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் இரட்டையர் ஆட்டத்தில் இருந்து காயம் காரணமாக விலகினார். முதுகு வலியால் அவதிப்பட்டு வரும் வீனஸ் வில்லியம்ஸ் காயத்தில் இருந்து இன்னும் முழுமையாக குணமடையவில்லை. இதனால் லண்டனில் வருகிற 24ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள விம்பிள்டன் ரென்னிஸ் போட்டியில் இருந்து வீனஸ் வில்லியம்ஸ் விலகி இருக்கிறார். இது குறித்து வீனஸ் வில்லியம்ஸ் இணையத்தளத்தில் வெளியிட்டுள்ள தகவலில் விம்பிள்டன் போட்டியில் என்னால் விளையாட முடியாது. எப்பொழுதும் விரும்பும் விம்பிள்டன் போட்டியில் ஆட முடியாமல் போனது மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது. இந்த முடிவு, எனது போட்டியை காண ஆவலுடன் காத்திருந்த இரசிகர்களுக்கு ஏமாற்றம் அளித்திருக்கும். காயத்தில் இருந்து மீண்டு, விரைவில் போட்டிக்குத் திரும்புவேன் என்றார்.

33 வயதான வீனஸ் வில்லியம்ஸ் 5 முறை விம்பிள்டன் ஒற்றையர் பட்டத்தை வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஊக்கமருந்தால் நீக்கம்

(கிங்ஸ்டன்)



ஒலிம்பிக்கில் 2 தங்கம் வென்ற ஜமேக்க வீராங்கனை வெரோனிகா கம்பெல்-பிரவுன், ஊக்கமருந்து பயன்படுத்தியதால் நீக்கப்பட்டுள்ளார். ஜமேக்காவின் தடகள வீராங்கனை வெரோனிகா கேம் பெல்-பிரவுன், 31. கடந்த 2004 (ஏதென்ஸ்), 2008 (பீஜிங்) ஒலிம்பிக் 200 மீற்றர், ஓட்டத்தில் தங்கம் வென்றவர். லண்டன் ஒலிம்பிக்கில் 100 மீற்றர் ஓட்டத்தில் வெண்கலப் பதக்கம் கைப்பற்றினார்.

சமீபத்தில் (கடந்த மே 4) ஜமைக்காவில் நடந்த சர்வதேச தடகளப் போட்டியின் போது, இவருக்கு ஊக்கமருந்து சோதனை நடந்தது. இதனால், போட்டியில் பங்கேற்காமல், தாமாக முன்வந்து விலகினார் வெரோனிகா. சோதனை முடிவில், தடைசெய்யப்பட்ட டையூரெடிக் என்ற ஊக்கமருந்து பயன்படுத்தியது தெரிந்தது.

இதுகுறித்து ஜமைக்கா தடகள நிர்வாக சங்கம் (ஜே.ஏ.ஏ.ஏ.,) வெளியிட்ட அறிக்கையில்," வெரோனிகா ஊக்கமருந்து பயன்படுத்தியது நிரூபணம் ஆனது. ஒழுங்கு நடவடிக்கை குழு விசாரித்து தீர்ப்பு வழங்கும் வரை, வெரோனிகா தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளார். தவிர, சர்வதேச தடகள கூட்டமைப்பு விதிப்படி, இந்த விடயத்தை கையாளுவோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வெரோனிகா முகாமையாளர் கிளாட் பிரையன் கூறுகையில், வெரோனிகா யாரையும் ஏமாற்றவில்லை. அர்ப்பணிப்பு உணர்வுடன், கடுமையாக போராடுபவர். கண்ணியமாக நடந்து கொள்ள வேண்டும் என்பதில் உறுதியானவர். ஊக்கமருந்து விதிகளை மீறியதாக குற்றம் சாட்டப்பட்டது அவருக்கு அதிர்ச்சியாக உள்ளது என்றார்.

# சொதப்பிவிட்டோம்

ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ண அரையிறுதியில் நாம் அடைந்த தோல்விக்கு துடுப்பாட்ட வீரர்களின் பொறுப்பற்ற ஆட்டமே காரணம். நான் உட்பட அனைத்து வீரர்களும் சொதப்பிவிட்டோம். டேவிட் மில்லருக்கு வலுவான ஒத்துழைப்பை வழங்கியிருந்தால் இங்கிலாந்து அணிக்கு நெருக்கடி கொடுத்திருக்க முடியும். நெருக்கடியான கட்டத்தில் மில்லர் சிறப்பாக ஆடினார் என தென்னாபிரிக்க அணிக் கப்டன் டிவில்லியர்ஸ் தெரிவித்தார்.

# அரையிறுதியில் பிரேசில், இத்தாலி

(போர்ட்லேசா)


கொன்படரேசன் கிண்ண கால்பந்துத் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு பிரேசில் மற்றும் இத்தாலி அணிகள் தகுதிபெற்றுள்ளன.

கொன்படரேசன் கிண்ண கால்பந்துப் போட்டி பிரேசிலில் நடைபெற்று வருகிறது. இந்தப் போட்டியில் 8 நாடுகள் பங்கேற்று விளையாடி வருகின்றன. அவை 2 பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன.

லீக் முடிவில் இரண்டு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு நுழையும். ஏ பிரிவில் நேற்று முன்தினம் நடந்த ஒரு ஆட்டத்தில் பிரேசில்- மெக்சிக்கோ அணிகள் மோதின. இதில் பிரேசில் 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

நய்மார் ஆட்டத்தின் 9ஆவது நிமிடத்திலும், ஜோ 93ஆவது நிமிடத்திலும் கோல் அடித்தனர். பிரேசில் அணி பெற்ற 2ஆவது வெற்றியாகும். அந்த அணி முதல் ஆட்டத்தில் 3-1 என்ற கோல் கணக்கில் வென்றிருந்தது. இதன் மூலம் பிரேசில் அணி அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

இதேபிரிவில் நடந்த மற்றொரு ஆட்டத்தில் இத்தாலி- ஜப்பான் அணிகள் மோதின. பரபரப்பான இந்த ஆட்டத்தில் இத்தாலி 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இதன் மூலம் இத்தாலி 2ஆவது வெற்றியைப் பெற்று அரை இறுதிக்கு முன்னேறியது.



அந்த அணி முதல் ஆட்டத்தில் 2-1 என்ற கணக்கில் மெக்சிக்கோவை வென்றிருந்தது. 2 தோல்விகளைத் தழுவிய மெக்சிக்கோ, ஜப்பான் அணிகள் வெளியேற்றப்பட்டன. ஏ பிரிவில் முதல் இடத்தை பிடிப்பதற்கான ஆட்டத்தில் பிரேசில்- இத்தாலி அணிகள் மோதுகின்றன. ஸ்பெயின் அணி தொடக்க ஆட்டத்தில் உருகுவேயை வென்றமை குறிப்பிடத்தக்கது.

# ஆறு வருட சிறை

(ஆம்ஸ்டர்டாம்)

போட்டியின் போது லைன்ஸ்மனை அடித்துக் கொன்ற வழக்கில், 6 மைனர் கால்பந்து வீரர்களுக்கு 6 ஆண்டு சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. நெதர்லாந்தில் கடந்த டிசம்பரில் கிளப் அளவிலான ஜூனியர் கால்பந்துப் போட்டி நடந்தது. இதில் லைன் நடுவராக ரிச்சர்ட் நியூவென்ஹிகுயன், (வயது-41), பங்கேற்றார். இந்தப் போட்டியில் ரிச்சர்ட் மகனுடன் விளையாடினார். போட்டி முடிந்ததும் ஒரு அணியின் வீரர்கள், ரிச்சர்ட்டை சுற்றி வளைத்து தாக்கினர். பின் வீடு சென்ற அவர், மயங்கி விழுந்து மரணமடைந்தார். இதுகுறித்து விசாரித்த நெதர்லாந்து நீதிமன்றம் அளித்த தீர்ப்பில்,' ரிச்சர்ட் தலை மற்றும் வயிற்றுப்பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக மரணமடைந்தார். இதற்கு காரணமான 15 முதல் 17 வயது வரையிலான 6 வீரர்கள், ஒரு வீரரின் தந்தை என, மொத்தம் 7 பேருக்கு 6 வருடச் சிறைத் தண்டனை வழங்கப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

# உலகக் கிண்ண கால்பந்து

## 4ஆவது முறையாக ஈரான் தகுதி



(உல்சான்)

பிரேசிலில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கால்பந்துப் போட்டிக்கு நான்காவது முறையாக ஈரான் அணி தகுதிபெற்றுள்ளது.

உலகக் கிண்ண கால்பந்துப் போட்டி 2014ஆம் ஆண்டு பிரேசிலில் நடைபெறவுள்ளது. இதையொட்டி தற்போது தகுதிச் சுற்றுப் பல்வேறு நாடுகளில் நடந்து வருகிறது. இந்தப் போட்டிக்கான ஆசிய தகுதிச் சுற்றில் தென்கொரியாவின் உல்சான் நகரில் நேற்று முன்தினம் நடந்த ஒரு ஆட்டத்தில் (ஏ பிரிவு) ஈரான் அணி 1-0 என்ற கோல் கணக்கில் தென்கொரியாவை தோற்கடித்து 16 புள்ளிகளுடன் 4ஆவது முறையாக உலக கோப்பைக்கு தகுதி பெற்றது. வெற்றிக்கான கோலை 60ஆவது நிமிடத்தில் ஈரான் வீரர் ரெசா ஹுசானெஜத் அடித்தார். இப்பிரிவில் தென்கொரியாவும், உஸ்பெகிஸ்தானும் தலா 14 புள்ளிகளுடன் 2ஆவது இடத்தைப் பிடித்தன. இருப்பினும் 'கோல் அடிப்படையில் தென்கொரியா உலக கோப்பைக்கு தகுதி பெற்றது.

நான்காவது முறையாக உலகக் கிண்ண கால்பந்து போட்டிக்குத் தொடருக்குத் தகுதி பெற்றமை மகிழ்ச்சி. இது எங்கள் இரசிகர்களுக்கு நாங்கள் கொடுக்கும் சிறந்த பரிசாகவே கருதுகின்றோம். பிரேசிலின் சூழ்நிலையைப் புரிந்து கொண்டு எங்களது முடிந்தளவு சிறப்பாக செயற்படும் என ஈராதன் கால்பந்து பயிற்றுவிப்பாளர் தெரிவித்துள்ளமை குறிபபிடத்தக்கது.

பி பிரிவில் நடந்த ஒரு ஆட்டத்தில் அவுஸ்ரேலிய அணி 1-0 என்ற கோல் கணக்கில் ஈராக்கை வென்று 13 புள்ளிகளுடன் உலக கிண்ணப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

# மாகாண பாடசாலைகளுக்கிடையிலான எல்லே ஹாட்லி, மணற்காடு றோ.க.த.க சம்பியன்





சாவகச்சேரி இந்துக் கல்லூரி



வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலயம்






சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி



மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை

(வவுனியா)

மாகாண மட்ட பாடசாலைகளுக்கிடையிலான எல்லே போட்டியில் வடமராட்சி ஹாட்லிக் கல்லூரி மற்றும் மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணிகள் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டன.

வடமாகாண பாடசாலை அணிகளுக்கிடையிலான மாகாண மட்ட எல்லே போட்டி கடந்த 18ஆம் திகதி வவுனியா நகர சபை மைதானத்தில் நடைபெற்றது. இதில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலை அணிகள் பங்குகொண்டன.

இப்போட்டியில் 19 வயதுப் பிரிவு ஆண், பெண் அணிகள் மோதிக் கொண்டன.

ஆண்கள் பிரிவின் இறுதிப் போட்டியில் வடமராட்சி ஹாட்லிக் கல்லூரி அணியும், சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணியும் மோதின. இதில் முதலில் ஆடிய சாவகச்சேரி இந்துக்கல்லூரி அணி ஏழு ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு எட்டு ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் ஆடிய ஹாட்லிக் கல்லூரி அணி இறுதி வரை போராடி 8 ஓட்டங்களைப் பெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

மூன்றாமிடத்திற்கான போட்டியில் வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலய அணியும், மன்னார் எருக்கலம்பிட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அணிகள் மோதின. இதில் புதுக்குளம் மகாவித்தியாலய அணி 9-7 என்ற ஓட்டங்கள் அடிப்படையில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

தொடர்ந்து நடைபெற்ற பெண்களுக்கான இறுதிப் போட்டியில் மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அணியும், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணியும் மோதின. இரு அணிகளும் பந்தை திறமையான முறையில் தடுத்தபோதும் ஓட்டங்களைப் பெறத் திணறின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அணி 2-1 என்ற ஓட்டங்கள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்பிரிவில் மூன்றாமிடத்தை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி பிடித்துக் கொண்டது.

வடமாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சத்தியபாலன் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வில், கோட்ட, வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், பொறுப்பாசிரியர்கள், விளையாட்டு நலன் விரும்பிகள், ஆதரவாளர்கள், இரசிகர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (93,17,42)

## விளையாட்டுச் செய்திகள்

## இன்றைய ஆட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 15 வயதுப்பிரிவு அணிகளுக்கிடையிலான முதல் சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றது.

இதில் யாழ். மாவட்ட அணிகள் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அவற்றுக்கிடையிலான முதல் சுற்று ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

இதில் யாழ். மத்திய கல்லூரி அணிக்கும், கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணிக்குமிடையிலான போட்டி இன்றைய தினம் யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டிகள் 50 ஓவர்களைக்கொண்ட ஆட்டமாக இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதில் இரு அணிகளுமே சிறந்த வீரர்களைக்கொண்டுள்ளமையால் பரபரப்பு நிறைந்த ஆட்டமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(42)

# துவாரகசீலன் அதிரடிச் சதம் சென். ஜோண்ஸ் பெரு வெற்றி

(தெல்லிப்பளை)

துவாரகசீலனின் அதிரடிச் சதத்தின் மூலம் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணிக்கெதிரான போட்டியில் சென். ஜோண்ஸ் கல்லூரி அணி அபார வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான முதல் சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணிக்கும், சென். ஜோண்ஸ் கல்லூரி ஏ அணிக்குமிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் போட்டி கடந்த 16ஆம் திகதி தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய சென். ஜோண்ஸ் கல்லூரி அணிக்கு துவாரகசீலன் ஆரம்பம் முதலே அதிரடியாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தார். இவருக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் கானமிர்தன் மற்றும் பிரவீன்சாந்த் ஆகியோர் சிறப்பாகச் செயற்பட்டனர். இறுதியில் சென். ஜோண்ஸ் கல்லூரி அணி 50 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 398 ஓட்ட்ங்களைப் பெற்றது. இதில் துவாரகசீலன் 12 சிக்ஸர்கள் அடங்கலாக 153 ஓட்டங்களைப் பெற்றுஅசத்தினார்.மற்றும் கானமிர்தன் 78,பிரவீன்சாந்த் 23 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் நான்காவது விக்கெட்டுக்காக துவாரகசீலன் கானமிர்தன் 119 ஓட்டங்களையும், ஆறாவது விக்கெட்டுக்காக துவாரகசீலன் பிரவீன்சாந்த் 123 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் நவராஜா நான்கு, செந்தூரன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 399 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணி, கபில்ராஜின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென



விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணி 22.2 ஓவர்கள் நிறைவில் 90 ஓட்டங்களைப்பெற்று, படுதோல்வியடைந்தது.

இதில் எந்தவொரு துடுப்பாட்ட வீரரும் நிலைத்து நின்று ஆடவில்லை. பந்து வீச்சில் கபில்ராஜ் ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

(எஸ்.பி.)

# இந்தியா ஏன் நமது நலன்களுக்காக செயற்படவில்லை என்று கேட்கலாமா?

**- யதீந்திரா கட்டுரையிலிருந்து.**

சில தினங்களுக்கு முன்னர், இந்தியா தொடர்பில் கருத்துத் தெரிவித்திருந்த சுரேஷ் பிரேமச்சந்திரன், இந்தியா புலிகளின் காலத்தில் கடைப்பிடித்த கொள்கையை தற்போதும் பின்பற்றிவருவதாகக் குறிப்பிட்டிருந்தார். இந்தியா ஈழத் தமிழர்களின் உரிமை-களை கருத்தில் கொண்டு செயலாற்றவில்லை என்னும் அபிப்பிராயம் தமிழ் மக்களின் நலனை முன்னிறுத்தி சிந்திக்கும் பலரிடம் உண்டு.

இந்த இடத்தில் சில விடயங்களை அவதானிக்க வேண்டியிருக்கிறது. இந்தியா வைப் பொறுத்தவரையில், முதல் அர்த்தத்தில் அதற்கு இந்தியாவின் நலனே முக்கியமானது. இந்தியாவின் நலன் என்னும் புள்ளியுடன் இணைந்த ஒன்றாகவே ஏனைய விடயங்கள் நோக்கப் படும். எந்தவொரு நாட்டினதும் வெளிவிவகாரக் கொள்கை என்பது, குறித்த நாட்டின் நலனையே அச்சாணியாகக் கொண்டு சுழலும். அந்த சுழற்சியில் தடங்கல்கள் ஏற்படும்போதே ஏனைய தரப்பினரது நலன்களை, குறித்த பலம்பொருந்திய சக்திகள் ஒரு தடைநீக்க அன்று இந்தியா தனது நலன் என்னும் அச்சாணியில் சுழன்றுகொண்டிருந்தபோது, அந்த சுழற்சியில் ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான இலங்கை ஒரு தடைக்கல்லாக முட்டியது. அந்த தடைக்கல்லை அகற்றவேண்டிய தேவை இந்தியாவிற்கு ஏற்பட்டது.

இந்தப் பின்புலத்தில்தான் ஈழத் தமிழர் பிரச்சினை ஒரு பிராந்திய பிரச்சினையாக மாறியது. ஜே.ஆர் அரசாங்கத்தின் கழுத்தை நெரிக்கும் வகையி-லேயே, இந்தியா, ஈழ தமிழர்களின் உரிமைகளை முன்னிறுத்தி இயங்கிய ஆயுத அமைப்புகளின் இராணுவ ஆற்றலை விஸ்தரிக்க உதவியது. உண்மையில் அன்றைய இந்தியாவின் நடவடிக்கைகள் இந்தியாவின் பிராந்திய முக்கியத்துவத்தை இலங்கைக்கு உணர்த்தும் வகையிலேயே இருந்தது அன்றைய இலங்கையின் அமெரிக்க சார்புநிலையாகும். அமெரிக்கா தங்களுடன் இருப்பதால், இந்தியா தங்களுக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கத் துணியாதென்றே ஜே.ஆர் அரசாங்கம் கருதியிருந்தது. ஆனால் அந்த நம்பிக்கையை இந்தியாவின் பின்னைய நடவடிக்கைகள் இலங்கை விடயத்தில் ஒரு கொள்கைசார் தோல்வியை எதிர்கொள்ள நேர்ந்தது. இந்த இடத்தில் ஒரு விடயத்தை நாம் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம். இந்தியாவின் பிராந்திய முக்கியத்துவத்தை கேள்விக்குள்ளாக்க முற்பட்ட ஜே.ஆர். அரசாங்கத்தை தன்வழிக்கு கொண்டுவருவதற்கான ஓர் கருவியாக்கிக்கொள்ள முயற்சிக்கும்.

இந்த சூத்திரத்தை, 90களுக்கு முற்பட்ட இந்தியாவின் சுழற்சியுடன் ஒப்பிட்டு நோக்குவோமாயின் நாம் சில விடயங்களை தெளி-வாக புரிந்து கொள்ள முடியும். அமைந்திருந்தன. ஏனெனில் ஜே.ஆர். தலைமையிலான கொழும்பின் ஆளும் பிரிவினர் இந்தியாவின் முக்கியத்துவத்தை குறைத்து மதிப்பிட்டிருந்தனர். அவ்வாறு குறைத்து மதிப்பிடுவதற்கு காரணமாக பொய்ப்பித்தது. இறுதியில் வேறு வழியின்றியே, ஜே.ஆர். அரசாங்கம் இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்கு இணங்கியது. இது வரலாறு.

ஆனால் பின்னர் விடுதலைப் புலிகள் - பிரேமதாச அரசாங்க கூட்டின் விளைவாக, இந்தியா உபாயமாகவே ஈழத் தமிழர் நலன் இந்தியாவின் பிராந்திய நலனுடன் இணைக்கப்பட்டது. ஆனால் விடுதலைப்புலிகள்-பிரேமதாச கூட்டால், இந்தியாவின் பிராந்திய நலனுடன் இணைக்கப்பட்ட ஈழத் தமிழர் நலனை விடுதலைப்புலிகள் அதிலிருந்து வெளியில் எடுத்தனர். இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழர் அரசியல் பிராந்திய ஒத்துழைப்பை முழமையாக இழந்து போகிறது.

இதன் மூலம் ஈழத்தமிழர் நலன் என்பது இந்திய நலனுக்கு உட்பட்ட ஒன்று என்னும் நிலைமை மாறுகிறது. அதுவரைக்கும் ஈழத் தமிழர் சார்ந்து குரல்கொடுப்பதற்கான தார்மீக பொறுப்புள்ள ஒரே நாடு தானே என்னும் இந்திய அணுகுமுறை கேள்விக்குள்ளாகியது. இது, குறிப்பாக காங்கிரஸ் இந்தியாவிற்கு விரல்களை சுட்டுக் கொண்ட அனுபவத்தையே கொடுத்தது. விடுதலைப்புலிகளின் அணுகுமுறையால் ஒரு தலை கீழ் நிலைமை ஏற்பட்டது. அதுவரைக்கும் ஈழத் தமிழர் நலனை முன்னிறுத்தி கொழும்பை இறுக்கிப் பிடிக்க முற்பட்ட இந்தியா, விடுதலைப்புலிகளை இறுக்குவதற்கு அல்லது பலவீனப்படுத்துவதற்கு, கொழும்பை தழுவிக் கொள்ளும் நிலைக்கு மாறியது. 90களுக்கு பின்னர், இத்தகைய கொழும்பை தழுவிக் கொள்ளும் ஒரு கொள்கையையே இந்தியா கடைப்பிடித்து வருகின்றது.




# “ராஜரிஷி கடனை அடைத்தேன்”

**- கதாசிரியர், தயாரிப்பாளர் கலைஞானம்**

நம்மூர்த் தியேட்டரில் “பராசக்தி” படத்தைப் பார்த்த என் தயார் அதில் பூசாரி வேடத்தில் நடித்த கே.பி.காமாட்சியைப் பார்த்துவிட்டு, “இவரைப் பார்த்தால் என் ஒன்றுவிட்ட தம்பி மாதிரி இருக்கே!” என்றார். இது போதாதா எனக்கு? சென்னை புறப்பட்டேன். 1949ஆம் ஆண்டு முதல் முறையாக சென்னையில் நான் காலடி வைத்தபோது எனக்கு வயது பத்தொன்பது.

“பராசக்தி”யில் பூசாரி வேடத்தில் நடித்த கே.பி. காமாட்சியை கவி காமாட்சி என்றுதான் எல்லோரும்



அழைப்பார்கள். “ஓ ரசிக்கும் சீமானே” “புதுப் பெண்ணின் மனதைத்தொட்டு” போன்ற ஏராளமான பாடல்களை எழுதியவர். சென்னை வந்து இவரை சந்தித்தபோது, எனக்குக் கொடுத்த முதல் வேலை என்ன தெரியுமா? பக்கத்து தெருவில் உள்ள ஒரு இடத்திலிருந்து தனக்கு சாராயம் வாங்கிவரச் சொன்னதுதான்.

அடுத்த நாள் அவரை அழைத்துச் செல்ல வந்திருந்த சினிமா கம்பெனி காரில் என்னையும் ஏற்றிக்கொண்டுபோய் லட்சுமி நாராயணன் என்ற உதவி இயக்குநரிடம், “என்னுடைய சொந்தக்காரப் பையன். இவனுக்கு நல்ல வேடம் ஏதாவது கொடு” என்றார்.

அந்தப் படத்தின் பெயர் “செல்லப்பிள்ளை”. ஒரு காட்சியில் சீட்டாடும் நான்கு பேரில் ஒருவனாக என்னை நடிக்க வைத்த அந்த உதவி இயக்குநர், ஒரிரு நாட்கள் கழித்து கட்டம் போட்ட லுங்கி, காக்கிச் சட்டை போடவைத்து வேறு ஒரு வேடத்தில் நடிக்க வைத்தார். பின்னர் ஒரு நாள் நடிக்க வேண்டிய ஒ்ரு ஆள் வராமல் போகவே அந்த வேடத்திலும் என்னை நடிக்க வைத்தார். இப்படியாக அறிமுகமான “செல்லப்பிள்ளை” படத்திலேயே மொத்தம் ஏழு வேடங்களில் நான் நடித்தேன். ஆனால் ஒரு வேடம்கூட நினைவில் நிற்கும்படி இருக்காது.

நாடகங்களை எழுதி நடித்துக்கொண்டே சினி மாவிலும் வாய்ப்பு தேடிக்கொண்டிருந்தபோது, தயாரிப்பாளரும் இயக்குநருமான ஜோசப் தளியத்திடம் ஒரு கதை சொன்னேன். இன்னொரு கதை இருந்தால் சொல்லுங்கள் என்று கேட்கவே இன்னொரு கதையையும் சொன்னேன். “இப்படி ஒரு கதாசிரியர் இருந்தால் வருடத்துக்கு நான்கு படங்கள்கூட எடுக்கலாம்” என்று பாராட்டிய ஜோசப் தளியத் இரண்டு கதைக்கும் சேர்த்து ஐயாயிரம் ரூபாய் கொடுத்தார். அந்த நேரம் அது பெரிய தொகை.

எனது முதல் கதை வாணிஸ்ரீ, சுருளிராஜன், எஸ்.எஸ்.சந்திரன் நடிக்க “காதல் படுத்தும் பாடு” என்ற படமாக வெளிவந்தது. இதைத் தொடர்ந்து சுமார் நாற்பது படங்களுக்கு கதை வசனம் எழுதினேன். சுமார் இருநூறு படங்களின் திரைக்கதை உருவாக்கத்தில் பணியாற்றியிருக்கிறேன். சொந்தமாக பதினாறு படங்களைத் தயாரித்திருக்கிறேன்.

எனது நாடகம் ஒன்று “வெகுளிப்பெண்” என்ற பெயரில் படமாக்கப்பட்டு தேசிய விருது பெற்றது. நடிகை தேவிகாவின் கணவர் எஸ்.எஸ். தேவதாஸை இப்படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகப்படுத்தியிருந்தேன். தொடர்ந்து கதை வசனகர்த்தா கோகுலகிருஷ்ணா, “பைரவி”



படத்தில் இயக்குநர் எம்.பாஸ்கர், “ஆறு புஷ்பங்கள்” படத்தில் இயக்குநர் கே.எம். பாலகிருஷ்ணன், ஸ்டில் போட்டோகிராபர்கள் ஸ்டில்ஸ் ரவி, வெள்ளைச்சாமி, படத்தொகுப்பாளர்கள் வெள்ளைச்சாமி, கௌதமன், நடிகைகள் மாதவி, கீதா ஆகியோர் நான் அறிமுகப்படுத்திய புதுமுகங்களில் சிலர்.

தேவர் பிலிம்ஸில் நான் பணியாற்றியபோது கதை விவாதத்தில் பங்கு கொள்ள இரண்டு மாதங்கள் மட்டுமே வந்தவர் பாக்யராஜ். பின்னர் பாரதிராஜாவிடம் உதவியாளராகச் சேர்ந்து நடி-கராகி, இயக்குநராகவும் புகழ் பெற்று விட்டார். இடைப்பட்ட காலத்தில் பல படங்களை சொந்தமாகத் தயாரித்த நான் கடைசியாகத் தயாரித்த “ராஜரிஷி” படத்தின் தோல்வியால் கடன் சுமையில் சிக்கிக் கொண்டிருந்தேன்.

“முந்தானை முடிச்சு” படத்தின் மகத்தான வெற்றிக்குப்பின் பாக்யராஜ் உச்ச கட்ட புகழுடன் இருந்தபோது எனது கடன் சுமையைப்பற்றி கேள்விப்பட்டு “கலைஞானத்தால் நான் ஒருவேளை சாப்பாடாவது சாப்பிட்டிருப்பேன். எனவே அவருக்கு ஒரு படம் பண்ணிக் கொடுக்க வேண்டும்” என்று ஒரு விநியோகஸ்தரிடம் சொல்லியிருக்கிறார்.

பாக்யராஜிடம் சென்றேன். அவர் அப்போது இயக்கவிருந்த “எங்க சின்ன ராசா” படத்தில் பணியாற்றும்படி அழைத்தார். தொடர்ந்து அவரது வேறு சில படங்களிலும் பணியாற்றினேன். பின்னர் “இது நம்ம ஆளு” படம் துவங்கும்போது என் மகன் முருகன் கலைஞானத்தை இணை தயாரிப்பாளராக்கியதுடன் என்னை ஒரு முக்கிய வேடத்தில் நடிக்கவும் வைத்தார் பாக்யராஜ். இரு நூறுக்கும் மேற்பட்ட படங்களில் திரைக்குப்பின் பணியாற்றியபோதெல்லாம் கிடைக்காத புகழை பாக்யராஜ் “இது நம்ம ஆளு” படத்தில் நடிக்க வைத்ததின் மூலம் எனக்குத் தேடித் தந்து விட்டார். “ராஜரிஷி” படத்தின் மூலம் ஏற்பட்ட கடனில் பாதியை “இது நம்ம ஆளு” படத்தின் வருமானம் மூலம் அடைத்தேன்.

(சிறுவர் கதை)

# புத்திமான் பலவான்!



ஒருமுறை கிருஷ்ண தேவராயரின் அவையிலிருந்த அமைச்சர்கள், "நாங்களும் தெனாலிராமன் போல புத்திசாலிகள்தானே! எங்கள் புத்திசாலித்தனத்தைக் காட்ட வாய்ப்பு தரக்கூடாதா?" என்று கேட்டனர்.

இந்த அமைச்சர்களுக்குப் பாடம் புகட்ட வேண்டும் என்று நினைத்துக் கொண்ட அரசர், "சரி, உங்களுக்கு ஒரு வாய்ப்பு தருகிறேன். எனக்கு ஒருஅடி நீள புகை வேண்டும். கொண்டு வருவீர்களா?" என்றார்.

அமைச்சர்கள் திகைத்துப் போனார்கள்.

"எப்படிப் புகையைப் பிடிக்க முடியும்? அளக்க முடியும்?" என்று புரியாமல் குழம்பிப் போய் நின்றனர்.

கடைசியில் அரசர், "உங்களால் முடியாததால் ராமனை முயற்சி செய்யச் சொல்வோம்..." என்றவர், ராமனைப் பார்த்து, "ராமா, நீ தயாரா?" என்று கேட்டார்.

ராமன் துள்ளிக் குதித்து, "இதோ கொண்டு வருகிறேன்..." என்றபடியே ஓடினான்.

சிறிது நேரத்தில் வந்தான்.

ஒரு அடி நீள கண்ணாடிக் குடுவை ஒன்றை எடுத்து, ஊதுபத்தி அருகே கொண்டு சென்று ஒரு பக்கம் மட்டுமே திறந்திருந்த அந்தக் குழாயின் வாய்ப்பகுதியை புகைக்கு நேராகக் காட்டினான். மெல்ல, குழாய் முழுவதும் புகை பரவி நின்றது.

"அரசே, இதோ நீங்கள் கேட்ட ஒரு அடி நீள புகை!" என்றான் தெனாலிராமன்.

கிருஷ்ணதேவராயர் புன்னகையுடன், "எந்தப் பிரச்சினையிலும் பயந்துவிடாமல் சமயோசிதமாக செயல்பட்டால் உடனடி தீர்வு கிட்டும்..." என்றார்.

அமைச்சர்கள் அனைவரும் தலைகளைக் குனிந்து கொண்டனர்.

## இங்கிலாந்தின் The Independent பத்திரிகை ஆசிரியராக இந்தியர்!



இங்கிலாந்தின் தேசிய பத்திரிகையாக விளங்கும் "த இண்டிபெண்டன்ட்" பத்திரிகையின் ஆசிரியராக 29 வயதான இந்தியர் அமல் ராஜன் நியமிக்கப்பட்டுள்ளார். இங்கிலாந்தின் தேசிய பத்திரிகை ஒன்றில் வெள்ளையர் அல்லாதோர் ஒருவரை இப்பதவிக்கு நியமித்திருப்பது இதுவே முதல் முறை என்று கூறப்படுகிறது. முன்னதாக இவர் கருத்தாசிரியராக இருந்தார்.

"த இண்டிபெண்டண்ட்" பத்திரிக்கையின் ஆசிரியராக அமல் ராஜன் தேர்வு பெற்றுள்ளார் என்ற செய்தியை அப்பத்திரிகையின் ஆசிரியர் இவ்ஜெனி லெவ்தேவ் தனது இணையதள செய்தியில் குறிப்பிட்டுள்ளார். தொழில் போட்டி உள்ளதால், எங்கள் கம்பெனிக்கு தைரியமான அணுகுமுறை தேவைப்படுகிறது. மிகவும் திறமை வாய்ந்த அமல் ராஜனை எடிட்டர் பதவிக்கு தேர்வு செய்துள்ளதால் அவரது ஆற்றல், அறிவு, படைப்புத் திறன் ஆகியவை இந்த பத்திரிகையை மேலும் மேம்படுத்தும் என்று லெவ்தேவ் கூறியுள்ளார். கொல்கத்தாவில் பிறந்தவரான அமல் ராஜன் தனது 3 வயதில் பெற்றோர்களுடன் லண்டன் சென்று குடியேறினார். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் ஆங்கில இலக்கியம் படித்து பின்னர் ஊடகத் துறைக்கு வந்தார்.

## யுவான் சுவாங்



ஏழாம் நூற்றாண்டில் இந்தியாவின் வடபகுதியிலிருந்து தெற்கே காஞ்சிபுரம் வரை பதினாறு ஆண்டுகள் பயணம் செய்துள்ளார் யுவான் சுவாங். மீண்டும் தாயகம் திரும்பியபோது யுவான் சுவாங் கொண்டு வந்ததை முப்பது குதிரைகளில் ஏற்றினார்கள். அந்நாட்டு எல்லையில் மன்னர், அமைச்சர்கள், நகர மக்கள் அனைவரும் குதூகலத்தோடு வரவேற்றனர். அவர் கொண்டு வந்தது விலையுயர்ந்த பொன்னோ, பொருளோ, ஆபரணங்களோ இல்லை. மொத்தம் 657 பௌத்த மூல நூல்கள்.

**('நூல்களைத் தேடி பயணம்' நூலிலிருந்து)**

# ஸால்ஸா

**- ஸால்ஸா நடனக் கலைஞர் சத்யா கிருஷ்ணமூர்த்தி.**



லத்தீன் அமெரிக்க நடன வகைகளான ஸால்ஸா மற்றும் த்தாங்கோ பற்றி இரண்டு விஷயங்களைப் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். ஒன்று, லத்தீன் உறவுகளும் அவை "ஸால்ஸா" நடனத்தில் எவ்வாறு பிரதிபலிக்கின்றன என்பதும். இரண்டாவது, த்தாங்கோ அர்ஹெந்தீனோ (Argentenian Tango) ஸால்ஸாவிலிருந்து எப்படி வேறுபடுகிறது என்பது.

லத்தீன் உறவுகள் ஆணாதிக்கத் தன்மை (Machismo) கொண்டவை என்பது அனைவருக்கும் தெரியும். லத்தீன் அமெரிக்கச் சமூகம் ஆண்களால் ஆண்களுக்காகவே கட்டமைக்கப்பட்டது. இதுவே லத்தீன் நடனத்திலும் வெளிப்படுகிறது. ஆண் நடனக்காரனே நடனத்தை நடத்திச் செல்பவன். பெண் அவனைப் பின்பற்றிச் செல்பவள் மட்டுமே. நடன அரங்கில் தன்னை நடனத்துக்காக அழைக்கப்போகும் ஆணுக்காக ஒரு பெண் காத்திருக்கிறாள். நிச்சயமாக லத்தீன் பெண்களுக்கு தன்னை அழைக்கும் துணையை மறுப்பதற்குரிய உரிமை இருக்கிறது. இப்படி மறுக்கப்படும் ஆணின் ஈகோ காயப்படுகிறது. அவன் அவளைத் தன்னுடன் ஆடும்படி வற்புறுத்திக் கொண்டே இருக்கிறான். அவள் மறுக்கிறாள். சமயங்களில் இது சச்சரவுகளையும் உண்டுபண்ணியிருக்கிறது.

இதுதான் லத்தீன் வாழ்க்கையிலும் அப்படியே பிரதிபலிக்கிறது. ஒரு ஆண் பலவிதமாக நயந்து பேசி பெண்ணை வசப்படுத்த முயற்சிக்கிறான். அவன் வாழ்க்கையின் குறிக்கோளே அவளை அடைவது தான். ஆனால், ஒரு லத்தீனா (லத்தீன் பெண்) அவனை உதாசீனப்படுத்துகிறாள். கேவலப்படுத்துகிறாள். ஆனால், அவனோ தொடர்ந்து அவளிடம் இறைஞ்சுகிறான். அடிமையென நடந்துகொள்கிறான். எல்லாம் அவளை அடையும்வரைதான். அடைந்தவுடன் அடுத்த பெண்ணை நோக்கிய தனது சாகசத்தைத் தொடர்கிறான். இப்போது அந்த ஆண் மகனைத் தன் கட்டுக்குள் வைத்துக்கொள்ள வேண்டியது பெண்ணின் கடமையாகி விடுகிறது. இப்படியாகப் பல உறவுகள் பாதியிலேயே முறிந்து போகின்றன. முறியாமல் தொடரும் உறவுகள் பெண்களின் கண்ணீர்க் கதைகளாக மிஞ்சுகின்றன. ஸால்ஸா நடனத்தில் இதை நீங்கள் வெகு அழகாகப் பார்க்கலாம்.

மனிதர்களைக் கவனிப்பதற்கு ஸால்ஸா க்ளப்பைப் போன்ற பொருத்தமான இடம் வேறு எதுவுமில்லை என்பது என் கருத்து. இது சம்பந்தமாக ஒரு அருமையான கூப (Cuba) படம் ஒன்றை உங்களுக்கு நான் சிபாரிசு செய்ய முடியும். அதன் பெயர் Hasta Certo Punto (Upto a certain point). இது ஒரு எழுத்தாளன் ஹவானாவின் துறைமுகத்தொழிலாளர்களிடம் கூபச் சமூகத்தில் ஆணாதிக்கம் எப்படியிருக்கிறதென்று பேட்டி காண்பது பற்றிய படம். துறைமுகத்தில் அவன் ஒரு பெண்ணின் மீது காதல் கொள்கிறான். அவள் ஆணாதிக்கத்தில் இருந்து விடுபட்டவள். எழுத்தாளன், அவளிடம் காதல் பேசிக் கசிந்து உருகி இறுதியில் திருமணமும் செய்துகொள்கிறான். ஆனால், அவனும் ஒரு ஆணாதிக்கச் சமூகத்திலிருந்துதானே வருகிறான்? அவனாலும் அதிலிருந்து விடுபட முடியவில்லை. அவர்கள் உறவு முறிந்து போகிறது.

எனவே, ஒரு ஸால்ஸா நடனக் கலைஞன் தன்னை முன்னிறுத்தும் போது உண்மையில் அவன் தன்னுடன் ஆடும் பெண்ணைத் தன்னைப் பின்பற்றுமாறே அழைக்கிறான். பெண்ணும் அதற்குச் சம்மதிக்கிறாள். இதுதான் ஸால்ஸாவின் பாரம்பரியமாக இருந்து வருகிறது.

ஆனால், த்தாங்கோ அர்ஹெந்தீனோ அப்படியல்ல. நடனத் தளத்தில் நீங்கள் ஸால்ஸாவிலிருந்து மிக வேறுபட்டதொரு நடனத்தைப் பார்க்கலாம். இங்கும் ஆணே முன்னிலை வகிக்கிறான். ஆனால், சமயங்களில் பெண்ணும் முன்னணிக்கு வருகிறாள். ஆணுக்கு அவளே நடனத்தின் திசைகளைக் காண்பிக்கிறாள். வழக்கத்துக்கு மாறான இந்தப் பாணி அர்ஹெந்தீனிய வரலாற்றுடன் சம்பந்தப்பட்டது.

"த்தாங்கோ" அர்ஹெந்தீனோ துறைமுக நகரமான புவெனோஸ் அய்ரஸில் தொடங்கியது. அதனுடன் ஜேர்மனியிலிருந்தும் இத்தாலியிலிருந்தும் Bandoneon வும் வந்து சேர்ந்துகொண்டது. துறைமுகத் தொழிலாளர்கள் மிகுந்த ஆர்வத்துடன் இதை ஆடவும் பாடவும் செய்தனர். பந்தோனியோனிலிருந்து கிளம்பும் இசை மிக உக்கிரமானது, வதைக்கக்கூடியது.

துறைமுகத் தொழிலாளர்களோ நாள் முழுதுமான கடும் உழைப்புக்குப் பிறகு மிகவும் தனித்திருக்கிறார்கள். அந்த நிலையில் அவர்களுக்கு ஆறுதலாகக் கிடைக்கக்கூடியது அங்கிருக்கும் விலைமாதர்கள் மட்டுமே. பணத்தைத் தேடித் துறைமுகத்துக்கு வரும் அந்த விலைமாதர்களே தொழிலாளர்களின் சகாக்களாக இருக்கக்கூடியவர்கள். ஆனால், எந்த வாடிக்கையாளரைத் தேர்ந்தெடுக்கலாம் என்ற உரிமை விலைமாதரிடம் இருந்தது. எனவே, இசையைக் காண்பித்து என்னுடன் ஆட வா என அழைக்கும் ஆண் மகனைப் பற்றி அவளுக்குக் கவலையே இல்லை. நடனமாடும்போதுகூட அவள் தனது ஆதிக்கத்தையும் ஆண்களைத் தேர்ந்தெடுப்பதிலுள்ள உரிமையையும் நிலைநாட்டுகிறாள்.



இதுவே த்தாங்கோ அர்ஹெந்தீனோவின் வரலாற்றுப் பின்னணி. அதனால் த்தாங்கோவில் பெண்களுக்கும் ஆண்களைப் போலவே சம பங்கு இருந்து வருகிறது.


த்தாங்கோவை கேட்க விரும்பினால், நீங்கள் தேட வேண்டிய கலைஞர்கள் Carlos Gardel, Astor Pisazzola, Juan Maglio Pacho.

# இசைவளம் கொழிக்கும் இணுவையூர் இனிய கிராமம்

உடுவில் பிரதேசசெயலகத்திற்குட்பட்ட பல கிராம சேவையாளர் பிரிவினை உள்ளடக்கிய ஓர் வளம் கொழிக்கும் புனித ப'மியே இணுவில் எனும் கிராமமாகும். ஆலயங்களாலும் அறவாழ்விய லாலும் அன்பு நெறிப்பண்புமிக்க மக்கட் சமூகத்தை தன்னகத்தே கொண்ட ஓர் கிராமம் இதுவாகும். தவில் நாதஸ்வர மங்கள வாத்தியக் கருவிக் கலைஞர்களை உலகறியச் செய்த உத்தம கிராமமிது வயலின் வித்துவான் இராதாகிருஸ்ணன் போன்ற இசை மேதைகள் வாழும் கிராமம் இதுவாகும்.

தென்னிந்தியத்திரைப்பட பின்னணிப்புகழ்பெற்ற பாடகர்கள் போற்றிப்பாடிய பெருமைக் குரிய – பரராஜசேகரப்பிள்ளையார் கோவிலையும், உலகப்புகழ் மிகப் பெரிய மஞ்சம் கொண்ட பெருமைக் குரிய முருகன் ஆலயத்தையும் சித் தர்கள் வாழ்ந்து மன நோய்மருத்துவத்தில் வெற்றி கண்ட வரலாற்றுப் புகழ்மிக்க காரைககால் சிவன் கோவிலையும், தன்னகத்தேகொண்ட புனித ப'மி இதுவாகும்.


இணுவில் தர்ம சாஸ்திர குருகுல பிரதம குருதானு ஐயர் மகா தேவக்குருக்களிற்கு தென்னிந்திய நடிகர் பென்னாடை போர்த்திகெளரவிப்பு


இந்திய சிதம்பர தீட்சகர்கள் கெளரவிப்பு இணுவிலில் சிறப்பு நிகழ்வு


யாழ். இணுவில் மத்திய கல்லூரி


இணுவையூர் பெற்றெடுத்த உலகப்புகழ் பரதநாட்டிய மேதை மஹாவித்துவான் அமரர் மா.த.ந.வீர மணிஐயர் யாழ்.பல்கலைக்கழக நுண் கலைப்பீட முன்னாள் விரிவுரையாளர்.

தொகுப்பு:-
வெண்கட்டியன்

## புதுவரவு




இணுவில் மைந்தன் பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள் தமிழில் 'கல்வியியல்' துறை சார்ந்த நூல்கள் பலஎழுதி அத்துறை சார் விருத்தியில் முதன்மைப் பங்கு வகித்து வருபவர். அவரின் புதிய அறுவடையாக 'உளவியல் ஊடுதலையீடுகள்' என்னும் நூல் வெளிவந்துள்ளது.



இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கல்விப்பீடத்தில் முது நிலை விரிவுரையாளராகப்பணிபுரிகின்ற கலாநிதி சசிகலா குகமூர்த்தி அவர்களுடைய படைப்பாக் யாழ்ப்பாணத்தில் பெண் கல்வி: தோற்றமும் வளர்ச்சியும், என்னும்நூல்புதுவரவாக வெளிவந்துள்ளது. இவர் இணுவில் ஆறுமுகம்குகமூர்த்தியின் துணைவியாராவார்.








தவிலின் தனித்துவமான சொற்கட்டுக்களை வெளிப்படுத்திய **மேதை தட்செணாமூர்த்தி** பிறப்பிடம் இணுவில்

## இங்கிதங்கள் தரும் இணுவில்...!

இங்கிதங்கள் தரும் இணுவில்
எங்கள் ஊராம் – இங்கு
இருப்பவர்கள் நாமெல்லாம்
ஒரு குலமாம்
எங்கள் புகழ் பரப்பி
எழில் தோற்றம் காட்டி
இளமையுடன் சிரிக்கின்றாள்
இணுவையூர் சீமாட்டி

பார்க்கும் இடம் எல்லாம்
பசிய நிறம் இயற்கை
போர்த்த கொடை நிலமோ
செம்மை நிறம்
காற்று சுமந்து வரும்
கருமேகம் – நிலக்கீழ்
ஊற்று சுரந்து தரும்
அமிர்தம் இணை குடிநீர்

காய் சுமக்கும் பயிர்கள்
பாய் விரிக்கும் – இளமை
ஊர் சுமக்கும்
கறவை பால் சுரக்கும்
வேர் கிளைத்தே கல்வி
வித்தகராய் இளையோர்
ஊர் சிறக்க
பள்ளி ஆலயங்கள் நிறைந்தே
இங்கிதங்கள் தரும் இணுவில்
எங்கள் ஊராம்.

சங்கம் வளர்த்த தமிழ்
எங்கள் புகழ் மணக்க
இங்கும் பல சான்றோர்
ஈன்றாள் இணுவை அன்னை
அந்தப் பரமன் தன்னை
மறந்தான் இசை மழையால்
இந்த உலகோர் இணுவை
கலையால் தமை மறப்பாய்.


இணுவையூர்
**இலட்சுமி புத்திரன்**


இரா.சுந்தரலிங்கம் என்னும் கல்விப்பணியாளர் இணுவையூர் பெற்றெடுத்த சிறந்த நிர்வாகி


2011 க.பொ.த உ/த அதிகூடிய பெறுபேறு 3A தே.பபிராஜ்

## கருத்துரை

தினமுரசுப்பத்திரிகை முன்னெடுக்கும் வாரமொருகிராமம் எனும் செயன்முறையை உளமாரப்பாராட்டுகின்றேன்.ஏனெனில் ஊர்ப்பெருமை உலகறியவைப்பதும் கிராமத்தின் சாதனைகளை பறைசாற்றுவதும் நன்நெறிவாழவியலை சுட்டிக்காட்டுவதும் பத்திரிகை தர்மங்களில் ஒன்று அந்தவகையில் எனது பிறப்பிடம், வாழ்விடமாகிய இணுவைய'ர்ப்பெருமைகளை எடுத்தியம்பும் செயன்முறைக்கு மீண்டும் நன்றி கூறுகின்றேன். இசைவளம் பொங்கும் பக்தி மயப'மியிது ஆலயமணியோசையுடன்ஆரம்பமாகும். இணுவைய'ர் மக்களின் வாழ்வியல் பல சாதனைகளை சமைத்துள்ளது. தவில் வித்துவான் சின்னராசா, மகாவித்துவான் வீரமணிஐயரின், நன்நெறிக் கல்விப்பணிப்பாளர் சுந்தரலிங்கம், கலாப'ஷணம் மூ.சிவலிங்கம், அப்பாக்குட்டி, மயில்வாகனம், பொன்னையா போன்ற மகாபுருசர்களை பெற்றெடுத்த பெருமைக்குரிய கிராமமிது பெருமையுடன் பெயர் சொல்லிப் போற்றுகின்றேன். எனது கிராமத்தை வாழ்த்தவந்த உங்களிற்கு நன்றிகூறி.


இணுவையூர்
**க.தேவராஜா**
முன்னாள் வணிகபீடாதிபதி
தற்போதய
சிரேஸ்ட விரிவுரையாளர்


19 வயது ஆண்கள் பிரிவில் மாகாணமட்டப் போட்டியில் குண்டுபோடுதல் முதலாம் இடம் பி.பிரஷாத்

## யா/இணுவில் இந்துவின் சாதனைகள்

மது ஒழிப்பு தினத்தில் நடத்தப்பட்ட ஓவியப் போட்டியில் இணுவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த 3 மாணவர்கள் தேசிய மட்டத்தில் வெற்றியீட்டியுள்ளனர்.


செல்வன்
புஸ்பராசா நிலவரசன்
1 ம் இடம் தரம் 11
ரூபா 30,000 பணப்பரிசு


செல்வன்
இராசலிங்கம்
விதுர்ஷகன்
3 ம் இடம் A/L
ரூபா 10,000 பணப்பரிசு


செல்வன்
சின்னராசா டினேசன்
ஆறுதல் பரிசு
(முதல் 25) A/L
ரூபா 2,000 பணப்பரிசு


சிறந்த சித்திர ஆசிரியருக்கான பரிசையும் இக்கல்லூரி ஆசிரியர் **எஸ்.ஜெகன்** பெற்றுள்ளார். மேற்படி கௌரவிப்பு நிகழ்வு கொழும்பில் இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்றது.


சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட கேலிச் சித்திரப் போட்டியில் தேசிய மட்டத்தில் 2ம் இடத்தைப் பெற்றுக்கொண்ட **செல்வி றஞ்சன் லக்ஷிகா**

உலக அஞ்சல் தினக் கட்டுரைப் போட்டியில் தேசிய ரீதியில் **செல்வி க.மோகனஜெனனி** 3ஆம் இடம்பெற்றுள்ளார். ரூபா 4,000 பணப்பரிசு


2011ஆம் ஆண்டு தேசிய தமிழ் மொழித்தினவிழா நடனம் முதலாம் இடம் - வி. வானதி


2007 க.பொ.த.சா/த அதிகூடிய பெறுபேறு 10A - வே.அஜந்தினி


2012மாகாண தமிழ்மொழித்தின விழா பேச்சுப்போட்டி சிரேஷ்ட பிரிவில் முதலாம் இடம் த.மதிஜனன்

# பளையில் மாற்றுவலுவுள்ளோருக்கு நலனோம்பு அட்டை வழங்கும் திட்டம்

(கிளிநொச்சி)

பளை பிரதேச செயலர் பிரிவில் மாற்றுவலுவுள்ளோருக்கு நலனோம்பு அட்டை வழங்குவதற்கான செயற்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

வட மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் இவ் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரன் உரிய ஒத்துழைப்பை வழங்கியுள்ளார்.

பளை பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன் இதில் ஈடுபடவுள்ள உத்தியோகத்தர்களுக்குரிய சகல ஏற்பாடுகளையும் சமூக சேவைகள் அலுவலர் செல்வி.கே.கேதினி, மற்றும் கிராம அலுவலர்கள் ஊடாகவும் மேற்கொண்டுள்ளார்.

யாழ். மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் ஆ.ஞானவேல் தலைமையிலான ஒரு குழுவினரும், கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் தலைமையிலான ஒரு குழுவினரும் ஒரே நேரத்தில் பதிவு, புகைப்படம் எடுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர்.

இவ் வேலைத் திட்டம் பின்வரும் கிராம அலுவலர் பிரிவுகளில் குறித்த தினங்களில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதன்படி எதிர்வரும் 24 ஆம்திகதி திங்கட்கிழமை காலை 9 மணி முதல் 11 மணி வரையும் கோயில்வயல் கிராம அலுவலர் பிரிவிலும், முற்பகல் 11.30 மணி முதல் 1.30 மணி வரையும் இயக்கச்சி கிராமத்திலும் பிற்பகல் 2.30 மணி முதல் 4.30 மணி வரையும் முகாவில் கிராமத்திலும் மாலை 4.30 மணி முதல் 6.30 மணி வரையும் மாசார் கிராமத்திலும் மேற்கொள்ளப்படவுள்ளது.

அதே தினம் காலை 9 மணி முதல் 11 மணி வரையும் புலோப்பளை மேற்கு கிராமத்திலும், முற்பகல் 11.30 மணி முதல் 1.30 மணி வரையும் அரசர்கேணி கிராமத்திலும், பிற்பகல் 2.30 மணி முதல் 4.30 மணி வரையும் கச்சார்வெளி கிராமத்திலும், மாலை 4.30 மணி முதல் 6.30 மணி வரையும் இத்தாவில் கிராமத்திலும், மேற்கொள்ளப்படவுள்ளது.

25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணி முதல் 9.00 மணி வரையும் சோரன்பற்று கிராமத்திலும் காலை 9.30 மணி முதல் 11.00 மணி வரையும் தர்மக்கேணி கிராமத்திலும் பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரையும் புலோப்பளை கிராமத்திலும் பிற்பகல் 4.00 மணி முதல் 5 மணி வரையும் அல்லிப்பளை கிராமத்திலும் மேற்கொள்ளப்படவுள்ளது.

27 ஆம்திகதி வியாழக்கிழமை காலை 9 மணி முதல் 11.00 மணி வரையும் முல்லையடி கிராமத்திலும், முற்பகல் 11. 30 மணி முதல் 1 மணி வரையும் பளை நகரப்பகுதியிலும், பிற்பகல் 2.00 மணி முதல் 6.00 மணி வரையும் தம்பகாமம் கிராமத்திலும்,

அதே தினம் காலை 9.00 மணி முதல் 11.00 மணி வரையும் கிளாலி கிராமத்திலும்,

முற்பகல் 11.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரையும் முகமாலை கிராமத்திலும், மேற்கொள்ளப்படவுள்ளது.

மாற்றுவலுவுள்ளோர் தொடர்பான 4 பக்க படிவங்கள் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் தவறவிடப்பட்டவர்கள் குறித்த கிராம அலுவலர் பிரிவுகளில் புகைப்படம் எடுக்கும் பதியும் நாளில் பதிவு செய்யவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாற்றுவலுள்ளோர் ஒவ்வொருவரும் தமது அடையாள அட்டை, குடும்ப அட்டை சகிதம் வருகை தரல் வேண்டும். வருகை தரமுடியாதவர்களுக்கு வீடுகளில் சென்று பதிந்து புகைப்படம் எடுக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (90)


# மானிப்பாய் அந்தோனியார் ஆலய வருடாந்த திருச்சொரூப பவனி

(மானிப்பாய்)

மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழாவின் இறுதி நாளான கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 7. 00 மணிக்கு யாழ். ஆயர் தலைமையில் திருப்பலி பூசைகள் நடைபெற்றன.

காலை 9.00 மணியளவில் திருச்சொரூப பவனி ஆலய வளாகத்தில் இருந்து வீதி வழியாக இடம் பெற்றது.

திருப்பலிப் பூசையிலும் தொடர்ந்து நடைபெற்ற பவனியிலும் பல்லாயிரக்கணக்கானோர் பங்குபற்றியமையும் குறிப்பிடத்தக்கதாகும். (66)



## வெள்ளி நற்சிந்தனை...

# பழிவாங்குவது பண்பல்ல!

மன்னிப்பது ஓர் உயர்ந்த குணம் தவறுகளை மறந்து விடுவது தெய்வத் தன்மைக்குச் சமமாகும். மற்றவர்களின் தவறுகளை மன்னிக்கும் சக்தி மனிதனுக்கு மட்டும் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்ற உயிரினங்களுக்கு அந்த சக்தி கிடையாது.

பொதுவாக மற்றவர்கள் செய்த தீமைகளை நினைவில் வைத்துக் கொண்டு சமயம்வரும் போது அதற்காக அவர்களைப் பழிவாங்க நினைப்பது தான் மனித சுபாவம் அதே சமயம் மற்றவர்கள் துன்பப்படும்போது. அதைப் பார்த்து இரக்கப்படும் குணமும் மனிதனுக்கு உண்டு. ஆகவே நம்மால் பிறருக்கு உபகாரம் செய்யமுடியாமல் போனாலும், அபகாரம் செய்யாமலாவது இருக்க வேண்டும்.

தீமையில் ஈடுபடுகிற நேரம், அனைத்தும் வீணாக கப்படும் நேரமே. நன்மை செய்கின்ற நேரத்தை மட்டும் தான் நாம் வாழ்ந்த நேரமாகக் கருதிக் கொள்ளவேண்டும்.

வாழ்க்கையில், நமக்கு என்று ஏற்பட்ட கடமைகளை முறையாகச் செய்து கொண்டு பிறருக்கு உதவிடும் நல்லெண்ணத்தோடு வாழ்ந்து கொண்டிருந்தால் இறைவன் நம்முடன் கட்டாயம் உதவிக்கு வருவார்.

சில சமயங்களில், நல்லவர்கள் துன்பத்துக்கு ஆளாகிறார்களே, அது ஏன்? இங்கே தான் கர்ம பலனைப் பற்றிச் சிந்திக்கவேண்டும். "நாம் செய்த கர்மத்தின் பலனை நாம் அனுபவிக்கினறோம்." என்று துயரம் எற்படும் போது ஆறுதல் கொள்ள வேண்டும். எனவே தான், நல்லது நடக்கும் போது அளவுக்கு மீறித் துக்கப்பட வேண்டியதும் இல்லை.

மகாபாரதத்தில் தர்மனின் நிலை இது தான். துரியோதனாதியர்கள் எவ்வளவோ தீமைகள் செயயும் போதும், அவர்களைப் பழிவாங்க வேண்டும். என்கிற எண்ணம் தருமர் மனதில் தோன்றியதில்லை. விளைவாக, வாழ்க்கையின் முடிவில், அவர் நன்மையையே அனுபவிக்கிறார்.

பழிவாங்கும் எண்ணத்தினை அகற்றி விடுங்கள். அல்லது அவ் எண்ணமே உங்களைப் பழி வாங்கும்.

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# பதிவிறக்கப் பெட்டகம்

**யூ.ஆர்.அனந்தமூர்த்தியின் 'அவஸ்தை' நாவலிலிருந்து...**

தப்பு அர்த்தம் வந்துவிடக் கூடாதென்று நினைப்பதால் நானை சொல்ல வந்ததைத் தெளிவாகச் சொல்ல முடியவில்லை. இந்த பூமியில் பிறந்த பின் தப்பிலே இருந்துதான் தொடங்க வேண்டும். போராடத்தான் வேண்டும். வாழ்வைச் சிறுமைப் படுத்தும் இருளை விரட்டிக்கொண்டே இருக்க வேண்டும்.

*** *** ***

மக்களுக்குப் பிடிக்காதவனாய் போகும் தைரியமில்லாதவன் அரசியல் தலைவனாக இருக்கத் தகுதி படைத்தவன் அல்லன்.

*** *** ***

பெண் எதற்காகப் பவித்திரமாக இருக்க வேண்டும், சொல்? அவள் சொத்தாக இருப்பதனால். இப்படிப் பெண் பவித்திரமானவள் என்று சொல்கிறவர்களே பெண்ணை அழிப்பவர்கள்; சமையல், அலங்காரம், சங்கீதத்திற்கு மாத்திரம் பெண் லாயக்கு என்று கருதுபவர்கள், தன்னுடன் சம்போகத்திற்கு ஒத்துக்கொளளும் பெண்ணை மோசமானவள் என்று பாவிப்பவாகள்.

*** *** ***

எனக்குக் காதல் முக்கியம். அதை இழந்துவிட்டு எந்தப் புரட்சி செய்ய முடியும்? செய்துதான் என்ன பிரயோசனம்?

*** *** ***

நம்மைச் சூழ்ந்துள்ள சிறுமை, வெளியில் மாத்திரமல்ல, நம்முள்ளேயும் இருக்கிறது. நம் மனசின் தீவிரத்தன்மையை அழிப்பதற்காகச் செயற்படும் இந்தச் சிறுமையை உள்ளும் புறமும் ஒரே வேகத்தில் இனம்காண வேண்டும். இதனால் சதா விழிப்பாயிருக்க வேண்டியுள்ளது. இந்த நிலைப்பாடு, எதிலும திருப்தி காணும் மனிதர்களுக்கு கர்வமாகத் தோன்றலாம். இது தவிர்க்க முடியாதது. பொருள்களின் கவர்ச்சிக்கு வசபபடாத நிஷ்டூரமும், நம்மைச் சுற்றி பிறந்துகொண்டும் செத்துக் கொண்டும் இருப்பவையெல்லாம் நம்மைப் பாதிக்கட்டும் என நம்மைத் திறந்து வைத்துக்கொண்டிருப்பதும் தான் யோக நிலை. சலனமும் சடத்துவமும் ஆகிய இரண்டும் ஜோடிகள என்பதை மறக்க வேண்டாம்.

*** *** ***

நாம் தீவிரமாய் விரும்பியதைப் பெறும் தைரியம் பெறுவதில்லை ஏன்? பெற்றபின்பு அது முன்புபோல் மதிப்பிற்குரியதாய் இருக்காது என்ற பயமா?

*** *** ***

கடவுள் இருக்கிறார் என்று ஒருவனுக்குத் தெரிகிறதென்று வை. நம்பிக்கையை இல்லை நான் சொல்வது, அப்படி நிச்சயமாகவே தெரிகிறதென்று வை. அப்படித் தெரிய முடியுமானால அப்படிப்பட்டவன் ஆத்திகனாவது பெரிய விஷயம் இல்லை தானே. வங்கியில் பணம் வைத்திருப்பது போல். வட்டி உத்தர வாதம். ஆனால் கடவுள் இருக்கிறாரோ இல்லையோ என்று சந்தேகம் இருப்பவன் கடவுளை நம்பும் தீர்மானம் எடுப்பது இருக்கிறதே, அது நிஜமான ஒரு சவால். அப்படியே, அரசியலில நம் போராட்டத்தின் மூலம் முன்னேற்றம் வரும்; இந்த முன்னேற்றத்திலிருந்து எல்லா நல்லதும் மிக எளிதாக வந்துவிடும் என்று தெரிந்துகொண்ட ஏழைகளின் பக்கம் நின்று புரட்சிக்குச் செயலபடுவது ஒரு முறை. சனங்களின் வழிமுறை அது... நாம் கொண்டுவரும் முன்னேற்றம் எல்லாம், நல்லதையே செய்யும் என்று நம்ப முடிகிறதோ இல்லையோ, சுற்றியுள்ள சிறுமைகளுக்கும் துக்கங்களுக்கும் எதிராய்ப் போராடுவது தேவை எனபது மட்டும் தெளிவாய்ப புரிகிறது.


*** *** ***

நான் யாரும் யாருக்காகவும் அனுதாபப்படக் கூடாது என்கிறவன். பணம் பண்ணுகிறவர்களுக்கும், மக்களின் நன்மதிப்பை விரும்புகிறவர்களுக்கும் அனுதாபம் தேவை. ஆழமான உறவுகளுக்கு அனுதாபம் இடைஞ்சல் தரும்.

*** *** ***

புராதனமான நீண்ட ஒரு பண்பாடு, எதையும் கறுப்பு - வெளுப்பாய் மட்டுமே எப்படிப் பார்க்க முடிகிறது? ஒன்றில் கணமூடி எதிர்ப்பது அல்லது கண்மூடி ஆதரிப்பது என்று இரு நிலைப்பாடுகளுக்கிடையில் நம்மை இறுக்கிக் கொள்வதை எப்படி விளக்க? 'அது' அல்லது 'இது' என்கிற எதிர்வுக்குள் மனிதர்களை மாட்டுவிக்கும் ஒரு கலாசாரம் எப்படித் தற்காலப் பிரச்சினைகளை அறிந்துகொள்ள முடியும்? தன்னை எப்படிப் புதுப்பித்துக் கொள்ளும்? தன்னை எப்படி விமர்சித்துக் கொள்ளும்? தன்னை விமர்சிக்க சக்தி இல்லாத கலாசாரம் உயிருடன் இருக்க முடியுமா?

# கைவிட்டுச்சென்ற வயல் காணிகளை திருப்பி ஒப்படைக்கக் கோரி மகஜர்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய மீள்குடியேற்ற பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் முப்பது வருடங்களுக்கு முன்னர் தாங்கள் கைவிட்டுச் சென்ற வயல் காணிகளைத் தங்களுக்குத் திருப்பித் தர வேண்டும் என்று நேற்றுமுன்தினம் அதிகாரிகளிடம் கோரியிருக்கின்றனர்.

இந்த மக்களுக்கு சொந்தமாக அரசாங்கத்தினால் வழங்கப்பட்டிருந்த 2000 ஏக்கருக்கும் மேற்பட்ட வயல் காணிகளில் தற்போது சிங்கள மக்களே விவசாயம் செய்வதாகவும், அவர்களிடமிருந்து அந்தக் காணிகளைப் பெற்றுத் தர வேண்டும் என்று அவர்கள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள வெலிஓயா சம்பத்நுவர பிரதேச செயலாளரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்திருக்கின்றனர்.

இந்த மகஜரைக் கையளிப்பதற்காக முல்லைத்தீவு மாவட்ட பிரஜைகள் குழுவின் முக்கியஸ்தர்கள், மற்றும் இந்தப்பிரதேசத்தைச் சேர்ந்த கிராம அபிவிருத்திச் சங்கங்கள், விவசாய அமைப்புக்களின் தலைவர்கள், முக்கியஸ்தர்கள் உள்ளிட்ட சுமார் 49 பேர் சென்றிருந்தனர்.


இந்தப் பிரதேசத்து மக்கள் மீள்குடியேற்றப்பட்டு இரண்டு வருடங்களாகின்றன. இவர்களுக்கு ஒன்பது மாதங்களுக்கு மாத்திரமே நிவாரண உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. தற்காலிக வீடுகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகளும் அரசினால் வழங்கப்பட்டிருக்கின்றன.

ஆனால், "குடியேற்றப்பட்டுள்ள காணிகளில் இருக்கின்றோமே தவிர, எமக்கென அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு, நாங்கள் இடம்பெயர்வதற்கு முன்னர், விவசாயம் செய்து வந்த காணிகளுக்குள் நாங்கள் போக முடியாதிருக்கின்றது. இதனால் எங்களுடைய வாழ்வாதாரத் தொழிலாகிய விவசாயத்தைச் செய்ய முடியாமல் இருக்கின்றது. எனவே எங்களையும் விவசாயம் செய்ய அனுமதியுங்கள் என்று மகஜர் மூலமாக சேருநுவர பிரதேச செயலாளரிடம் கேட்டுள்ளோம்" என்றார் கொக்குத்தொடுவாய் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கந்தையா அருமைநாயகம். இந்த மக்களுடைய காணிகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள வெலிஓயா சேருநுவர பிரதேச செயலாளர் பிரிவுக்குள் அடக்கப்பட்டிருப்பதன் காரணமாகவே, அந்த பிரதேச செயலாளரிடம் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது என்று இந்த மகஜரைக் கையளிப்பதற்காகச் 40 பேர் குழுவில் சென்று திரும்பியுள்ள முல்லைத்தீவு மாவட்ட பிரஜைகள் குழுத் தலைவர் துரைராஜா ரவிகரன் தெரிவித்தார்.

இந்தக் காணி விடயம் தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரிடம் ஏற்கனவே பல தடவைகள் தெரிவித்திருந்தும் சரியான பதில் தங்களுக்குக் கிடைக்கவில்லை என்று ஊர்மக்கள் கூறுகின்றனர்.

இதுபற்றி கருத்து வெளியிட்ட முல்லைத்தீவு அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன், இந்த விடயம் தொடர்பாக உரிய அரச உயர் மட்டத்திற்குத் தெரிவித்துள்ளதாகவும் அவர்களின் பதிலுக்காகத் தாங்கள் காத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

# அரச சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதிய அங்கத்தவர்களுக்கு சான்றிதழ்வழங்கல்



(யாழ்ப்பாணம்)

யாழ். கோப்பாய் பிரதேசத்திற்குட்பட்ட அரசாங்க சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதிய அங்கத்தவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. யாழ். மாவட்டத்திலுள்ள 15 பிரதேசசெயலாளர் பிரிவுகளில் அரசாங்க சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதியம் செயற்பட்டு வருகிறது.

இந்த நிலையில் அரசாங்க சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்திற்கு அங்கத்தவர்களைச் சேர்த்தல், உரிய கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொடுத்தல், தேவையான வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல், சிறப்பாக செயற்படுத்துதல் போன்ற பல்வேறு செயற்பாடுகளில் கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள அரசாங்க சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதியம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

இந்த நிதியத்தில் தங்களது சிறப்பான செயற்பாடுகளை வழங்கிவருகின்ற 7 அரசாங்க சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதிய அங்கத்தவர்களுக்கு நினைவுப்பரிசும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. கோப்பாய் பிரதேச செயலாளர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்தின் தலைவர் சி.சத்திவேல், கோப்பாய் பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் இ.கிருஸ்ணதாசன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# தமிழருக்கு தீர்வு கிடைக்காமல் செய்ய தீவிரமாக செயற்படுகின்றது அரசு

## சித்தார்த்தன் குற்றச்சாட்டு





"இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு மத்திய அரசாங்கத்தின் தலையீடற்ற சமஷ்டி தீர்வே தேவை. எவ்வாறாயினும் தமிழ் மக்களுக்கு ஒரு நியாயமான தீர்வு எந்தக் காலத்திலும் கிடைக்கக்கூடாது என்பதில் அரசாங்கம் தீவிரமாகச் செயற்படுகின்றது" என்று "புளொட்" அமைப்பின் தலைவர் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடகமையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

"1987ஆம் ஆண்டில் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்ட போது அதில் ஒன்றும் இல்லை என்று அதனை நிராகரித்த தமிழர் தரப்பு, இன்று 13இல் எந்தவிதமான மாற்றமும் செய்ய வேண்டாம். அதற்கான அழுத்தத்தை இந்தியா வழங்க வேண்டும் என்று சொல்லுமளவிற்கு மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் காய் நகர்த்தல்களை மேற்கொண்டுள்ளது".

"தனிநாடு என்பது தமிழர்கள் அடைய முடியாத ஒரு கனவு என்றும் அவ்வாறு அது நடைபெற்றால் அதனை நாங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்றும் இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி சுட்டிக்காட்டியிருந்தார்.

இருந்தபோதும் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்திலுள்ள குறைபாடுகளை விளங்கிக்கொண்ட அவர், இதனை ஏற்றுக்கொள்ளுமாறும் கரையோரத்தில் உள்ள வீதியை எவ்வளவு செலவானாலும் புனரமைத்து தருவதாகவும் தெரிவித்திருந்தார்.

இவர் இந்தச் செயற்பாடுகள் எல்லாம் தங்கள் நலன்களை மையப்படுத்தியதாகவே அமைந்ததே தவிர எங்கள் நலனிற்காக அல்ல. இந்நிலையில், அவர்கள் தொடர்பில் எங்களுக்கு எப்போதும் ஒரு கேள்வி இருந்துகொண்டே இருந்தது".

"இன்றும் 13ஆவது திருத்தம் தொடர்பில் இந்தியா அழுத்தம் கொடுப்பதாகத் தெரிவித்துள்ளது. அது எவ்வளவு நடைமுறைச் சாத்தியமானது என்று பொறுத்திருந்து பார்க்க வேண்டும். சிலவேளைகளில் பொருளாதார ரீதியிலும் புவியியல் ரீதியிலும் இந்தியா ஒரு அழுத்தம் கொடுக்கக் கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன. இருந்தாலும் சீனாவைக் காட்டியே மகிந்த ராஜபக்ஷ தனது காரியங்களை நடத்தி வருகின்றார்".

"யுத்தம் முடிவுக்கு கொண்டு வருவதற்கு முன்னர் ஜனாதிபதி பல வாக்குறுதிகளை எம்மிடம் வழங்கியிருந்தார். அதற்கு எதிர்மாறாக அவர் இப்போது செயற்பட்டு வருகின்றார். யுத்தத்தினையும் புலிகளையும் காட்டி சிங்கள மக்களை தன் வசப்படுத்தி இருக்கின்றார்கள்.

இவ்வாறான நிலையில் தமிழ் மக்களுக்கு ஒரு நியாயமான தீர்வு எந்தக் காலத்திலும் கிடைக்கக்கூடாது என்பதில் அரசு தீவிரமாகச் செயற்படுகின்றது. மத்திய அரசாங்கத்தின் தலையீடுகள் அற்ற தீர்வாக சமஷ்டி தீர்வை அரசாங்கம் முன்வைக்க வேண்டும்" என்று சித்தார்த்தன் மேலும் குறிப்பிட்டார். (25)

# 111 வர்த்தகர்களுக்கு தண்டப்பணம்

காலாவதியான பொருட்கள் மற்றும் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாத 111 வர்த்தகர்களுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கையில் 4 இலட்சத்து 20 ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணம் நீதிமன்றங்களினால் அறவிடப்பட்டுள்ளதாக பாவனையாளர் அதிகார சபையின் யாழ்.மாவட்ட அதிகாரி நவரட்ணம் சிவசீலன் தெரிவித்தார்.

யாழில் கடந்த 5 மாதங்களில் 5 நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 111 வர்த்தகர்களுக்கு எதிராக இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நடவடிக்கை எடுக்கப்பட்ட 111 வர்த்தகர்களும் யாழ்.மல்லாகம், பருத்தித்துறை, சாவகச்சேரி, ஊர்காவற்துறை நீதிமன்றங்களில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

ஆஜர்ப்படுத்தப்பட்டவர்களில் 16 வர்த்தகர்கள் நீதிமன்றிற்கு சமூகமளிக்காததால் அவர்களுக்கு பிடியாணை பிறப்பித்துள்ளதுடன், 95 வர்த்தகர்களுக்கு 4 இலட்சத்து 20 ஆயிரத்து 500 ரூபா தண்டம் அறவிடப்பட்டுள்ளதாக பாவனையாளர் அதிகார சபையின் யாழ். மாவட்ட அதிகாரி மேலும் கூறினார். (25)



லண்டன் வாழ் மக்களின் நிதியுதவியுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் நாளைமறுதினம் திறந்து வைக்கப்படவுள்ளதாக நல்லை ஆதீன குரு முதல்வர் தெரிவித்துள்ளார். லண்டன் மாநகரில் நல்லூர் ஆதீன திருப்பணிக் குழு உருவாக்கப்பட்டு அங்கு வாழும் மக்களின் உதவியுடன் புதிதாக இரண்டு மாடிக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு நாளைமறுதினம் காலை 9 மணிக்கு திறந்துவைக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். புதிதாக அமைக்கப்பட்ட ஆதீன முகப்புத் தோற்றத்தைக் காணலாம்.

# குழந்தைகளுக்கு வலிநிவாரண மாத்திரை மருத்துவர் அனுமதியுடன் வழங்கவேண்டும்

காய்ச்சலுக்குள்ளாகியுள்ள குழந்தைகளுக்கு பரசிட்டமோல் தவிர்ந்த வேறு எந்தவொரு வலி நிவாரண மாத்திரையையும் மருத்துவரின் சிபாரிசின்றி வழங்க வேண்டாமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. கொழும்பு சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையின் பணிப்பாளர் நாயகம், டாக்டர் ரத்ன சிறிஹேவகே இதனைத் தெரிவித்துள்ளார். காய்ச்சலுக்குள்ளாகியிருந்த சில குழந்தைகளுக்கும், வளர்ந்தவர்களுக்கும் பரசிட்டமோல் மாத்திரைக்கு மேலதிகமாக ஸ்டேரொய்ட் வகையை சேர்ந்த சில வலி தவிர்ப்பு மாத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன. இதனால் சில குழந்தைகள் டெங்கு நோயினால் உயிரிழந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக காய்ச்சலுக்குள்ளாகின்றவர்களுக்கு, மருத்துவர்களின் சிபாரிசின்றி வலி தவிர்ப்பு மாத்திரைகளை வழங்கக் கூடாது. இரண்டு நாட்களுக்கு மேல் காய்ச்சலுடன், தோலும் அதனுடன் சேர்த்து தசை வலி, தலைவலி , வாந்தி போன்ற அறிகுறிகள் காணப்படுமாயின், தாமதிக்காது உடனடியாக வைத்தியரை நாடி சிகிச்சை பெற வேண்டும். தவறும் பட்சத்தில் டெங்கு அதிர்ச்சி நிலைக்கோ, டெங்கு இரத்தபோக்கு நிலைக்கோ உள்ளாகி உயிரிழக்க நேரிடும். அதனால் நோய்களை ஆரம்பத்திலேயே அடையாளம் கண்டு, வைத்தியர்களின் சிபாரிசுடன் சிகிச்சையளிக்கப்பட வேண்டுமென கொழும்பு சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையின் பணிப்பாளர் நாயகம் , டாக்டர் ரத்ன சிறிஹேவகே மேலும் தெரிவித்துள்ளார்.

குமுதாவை விட வதனி உயரமானவள். நளினியை விட குமுதா உயரம் கூடியவள்.
ஆரணியை விட வதனி உயரம் குறைந்தவள்.

29. இவர்களில் உயரம் கூடியவர் யார்?
1) வதனி  2) ஆரணி  3) நளினி

30. இவர்களில் உயரம் குறைந்தவர் யார்?
1) நளினி  2) குமுதா  3) வதனி

❖ உருவில் தரப்பட்ட தொழிலுக்கு அவசியமான உபகரணத்தை தெரிந்து கோடிடுக.

31. 
1) துறப்பணம்  2) கலப்பை  3) மேசன்கரண்டி

32. 
1) தூரிகை  2) வனைசில்லு  3) கரப்பு

33. 300இன் அரைவாசியின் $\frac{1}{3}$ உடன் 25ஐ கூட்டினால் கிடைக்கும் விடை?
1) 50  2) 75  3) 125

34. மண்டபம் ஒன்றில் 14 தூண்கள் சமதூர இடைவெளியில் நடப்பட்டுள்ளன. இரண்டு துண்டுகளுக்கு இடையிலான தூரம் 4m எனின் மண்டபத்தின் மொத்த நீளம் யாது?
1) 56m  2) 52m  3) 60m

35. 2010ஆம்ஆண்டு மார்ச்மாதம் 4ஆந்திகதி வியாழக்கிழமை எனின் மார்ச் மாத இறுதி நாள் எத்தனையாம் திகதி?
1) புதன்கிழமை  2) வியாழக்கிழமை  3) செவ்வாய்க்கிழமை

36. அகலத்தை போல் இரண்டு மடங்கு நீளமுள்ள செவ்வகவடிவ பூம்பாத்தி ஒன்றின் அகலம் 8cm எனின் பூம்பாத்தியின் சுற்றளவு யாது?
1) 36cm  2) 48cm  3) 64cm

37. | எ | வி | த் |
| --- | --- | --- |
| பு | ம் | கா |
| கி | த | கு |

கட்டத்தில் உள்ள சொற்களை கொண்டு நகரம் ஒன்றின் பெயரை எழுதுக?
..............................................

38. இது ஞாயிற்றுத் தொகுதியின் மிகச்சிறிய கோளாகும். சூரியனுக்கு மிக அண்மையில் இருப்பதால் மிகவும் வெப்பமானதாகும். இங்கு கூறப்படும் கோள் எது?
..............................................

39. நடக்க இருப்பதை முன்னரே கூறுபவனை குறிக்கும் தனிச்சொல் எது? ..............................

40. சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியமாக்குக.
முதியோரை / நாம் / வேண்டும் / சிறியோராகிய / மதிக்க

**விடைகள்**

| | | | | |
| --- | --- | --- | --- | --- |
| 1) 2 | 9) 2 | 17) 2 | 25) 3 | 35) 1 |
| 2) 1 | 10) 3 | 18) 2 | 26) 1 | 36) 2 |
| 3) 2 | 11) 2 | 19) 0 | 27) 3 | 37) புத்தளம் |
| 4) 2 | 12) 1 | 20) X | 28) 2 | 38) புதன் |
| 5) 1 | 13) 2 | 21) X | 29) 2 | 39) தீர்க்கதரிசி |
| 6) 1 | 14) 2 | 22) X | 30) 1 | 40) சிறியோராகிய நாம் முதியோரை மதிக்கவேண்டும். |
| 7) 2 | 15) 3 | 23) 3 | 31) 1 | |
| 8) 1 | 16) 2 | 24) 2 | 32) 1 | |
| | | | 33) 2 | |
| | | | 34) 2 | |





# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

# கல்வி முரசு

பிரபல ஆசிரியர்களின் தொகுப்பு  1.30 மணி

❖ 1 ஆம், 2ஆம் வினாக்களில் தரப்பட்ட படங்களில் ஒத்த தன்மையுள்ள இரு படங்களை குறிக்கும் எழுத்துக்கள் கொண்ட விடையின் கீழ் கோடிடுக.

01. 
A B C D
1) A, B  2) B, D  3) C, D

02. 
A B C D
1) A, D  2) B, C  3) A, B

❖ கீழ்வரும் வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக.

03. போட்டியில் வெற்றி பெறுவது அவ்வளவு இலகுவான காரியமில்லை என்பதால் விளங்கிக் கொள்வது.
1) போட்டியில் வெற்றி பெறக்கூடாது.
2) போட்டியில் வெற்றி பெறுவது கடினம்.
3) போட்டியில் வெற்றி பெற முடியாது.

04. கடற்கரை ஓரங்களில் கல்வேலி அமைப்பதன் நோக்கம்.
1) படகுகளை நிறுத்துவதற்காக.
2) மண்ணரிப்பை தடுப்பதற்காக.
3) சுற்றுலா பயணிகளை கவர்வதற்காக.


05. துடுப்பந்தாட்ட வீரர்கள் தலைக்கவசம் அணிவதன் நோக்கம்
1) பாதுகாப்புக்காக  2) அழகிற்காக  3) பந்தின் வேகத்தை கட்டுப்படுத்துவதற்காக

❖ தரப்பட்ட எழுத்துக்களையும் அவற்றின் குறியீடுகளையும் அடிப்படையாக கொண்டு விடையளிக்குக.

ம - ◪  தி - ⊘  ச - ✚  வ - ⧖  ப - ∟  ம் - ⬢  பு - ☒  ப் - ☆

06. சம்பவம் என்ற சொல்லுக்கான சரியான குறியீட்டை தெரிவு செய்க.
1) ✚ ⬢ ∟ ⧖ ⬢  2) ⧖ ⬢ ∟ ✚ ⬢  3) ✚ ⬢ ◪ ⧖ ⬢

07. பின்வருவனவற்றின் சரியான தொடர்பை காட்டுவது.
1) திவசம் - ⊘⧖◪⬢  2) மதிப்பு - ◪⊘☆☒  3) வசம்பு - ⧖✚⬢∟





08. தோலால் தயாரிக்கப்பட்ட பொருட்களை குறிக்கும் எழுத்துக்கள் எவை?
1) C, E 2) A, B 3) C, B


09. விளையாட்டுப் பொருட்களை குறிக்கும் எழுத்துக்கள் எவை?
1) A, F, D 2) H, A, B 3) H, B, F

10. F, D, G தொடர்பாக கூறக்கூடியது.
1) தகவல்தொடர்பு சாதனங்கள் 2) பொழுதுபோக்கு சாதனங்கள் 3) மின்சார உபகரணங்கள்

❖ **11ஆம், 12ஆம் வினாக்களில் உள்ள கோலத்தை அவதானித்து -?- இக்குறி இடப்பட்ட இடத்திற்கு வரவேண்டிய விடையை தெரிந்து கோடிடுக.**

11.


1) 63 2) 54 3) 48

12.


1) 84 2) 68 3) 72

❖ **பின்வரும் விவரணத்தை வாசித்து 13ஆம், 14ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

| | |
|---|---|
| 1 பந்தும் 1 பொம்மையும் = ரூபா 110 | 1 பொம்மையும் 1 விளையாட்டுக்காரும் = ரூபா 90 |
| 1 பந்து = ரூபா 60 | 1 பொம்மையும் 1 பலூனும் = ரூபா 75 |

13. பலூன் ஒன்றின் விலை யாது?
1) 30.00 2) 25.00 3) 40.00


14. விளையாட்டுக்கார் ஒன்றும் பலூன் ஒன்றும் வாங்கத்தேவையான பணம் யாது?
1) 45.00 2) 65.00 3) 55.00


15. பூம்பாத்தி ஒன்றில் ரோஜா, மல்லிகை, செவ்வந்தி செடிகள் முறையே மாறி மாறி நடப்பட்டன. முதலாவதாக நடப்பட்டது ரோஜா செடி எனின் 29வதாக நடப்பட்ட செடி எது?
1) ரோஜா 2) செவ்வந்தி 3) மல்லிகை


16. காலை 8.45 மணிக்கு பயணத்தை ஆரம்பித்த ஒருவர் மு.ப. 10.20 மணிக்கு பயணத்தை முடித்தார் எனின் பயணத்திற்கு செலவான காலம் யாது?
1) 2மணி 25நிமிடம் 2) 1மணி 35நிமிடம் 3) 1மணி 50நிமிடம்



❖ **17ஆம், 18ஆம் வினாக்களுக்கு A,B,C நிரைகளை உதவியாக கொண்டு விடை தருக.**





17. A,B,C, மூன்று நிரைகளிலும் உள்ள உரு எது?




18. A நிரையில் உள்ளதும் B நிரையில் இல்லாததுமான உரு எது?




❖ **கீழ்வரும் கூற்றுக்கள் எப்போதும் உண்மையாயின் (✓) எனவும் சில வேளைகளில் உண்மையானது எனின் (✗) எனவும் ஒரு போதும் உண்மையாக இருக்காது எனின் (O) எனவும் அடையாளம் இடுக.**

19. இரண்டு ஒற்றை எண்களின் கூட்டுத்தொகை ஓர் ஒற்றை எண். ( )
20. வானில் கருமுகில் கூட்டம் தோன்றினால் மழை பெய்யும். ( )
21. ஆண்களை விட பெண்கள் உயரம் குறைந்தவர்கள். ( )
22. நீலத்திமிங்கிலம் குட்டியீன்று இனம்பெருக்கும். ( )

❖ **சரியான விடையை தெரிந்து கோடிடுக.**

23. மாகாணம் - மாவட்டம் - நகரம் என்பவற்றுக்கிடையிலான தொடர்பை காட்டும் உருவை தெரிக.



24. சதுரமுகியை செய்வதற்கான வெட்டுரு தரப்பட்டுள்ளது. இதனை மடித்து ஒட்டுவதன் மூலம் பெறப்படும் சதுரமுகியின் எதிர்பக்கங்களில் உள்ள புள்ளிகளின் கூட்டுத்தொகை 7 ஆக அமையக் கூடிய உரு எது?



25.  = 60 எனின் இவ்வுருவின் பெறுமானம் யாது?
1) 45 2) 25 3) 30

❖ **இடைவெளிக்கு பொருத்தமான சொற்களை தெரிந்து கோடிடுக.**

26. ராகுல் 200m ........................ ஓட்டப்போட்டியில் முதலிடம் பெற்றான்.
1) குறுந்தூர 2) மத்தியதூர 3) நீண்டதூர

27. கடைக்கு சென்ற கமல் 750 ................................ எண்ணெய் வாங்கினான்.
1) லீற்றர் 2) கிலோகிராம் 3) மில்லிலீற்றர்

28. சாதாரண மனிதனின் உடல் வெப்பநிலை $98.4^{0}$ ............... ஆகும்.
1) செல்சியஸ் 2) பரனைட் 3) மில்லிமீற்றர்

# அவுஸ்ரேலிய புகலிடதாரிகளுக்கு 3 நிபந்தனைகளுடன் தற்காலிக விசா

அவுஸ்ரேலியாவில் புகலிடம் கோருவோருக்கு மூன்று நிபந்தனைகளுடன் தற்காலிகமான விசா வழங்கப்படுவதனால் தமிழர்களுக்கு உயிரிருந்தும் நடமாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அவுஸ்ரேலியாவில் இருக்கும் பாதிக்கப்பட்ட புகலிடக் கோரிக்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

புகலிடக் கோரிக்கையாளர்கள் தொழில் செய்ய முடியாது, குடும்பத்தை அவுஸ்ரேலியாவுக்கு எடுக்க முடியாது மற்றும் பணம் அனுப்பமுடியாது ஆகிய மூன்று நிபந்தனைகளுடனேயே தற்காலிக விஸா வழங்கப்படுகின்றது.

2012.08.13ஆம் திகதிக்கு பின்னர் அவுஸ்ரேலியாவிற்குள் நுழைந்தவர்களுக்கே இவ்வாறான நிபந்தனைகளுடன் தற்காலிக விசா வழங்கப்படுகின்றது என்றும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கையில், தமிழ் மக்கள் சொந்த நாட்டிலேயே இடம் பெயர்ந்து வாழ்வதற்கான உரிமை மறுக்கப்பட்டு, தனது தாய்நாட்டை விட்டு அகதிகளாக இடம்பெயர்ந்து வருகின்றனர்.

இவற்றில் ஒன்றுதான் இந்த கடல் வழியான அவுஸ்ரேலியா பயணமாகும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடல் மார்க்கமாக பயணிப்பது என்பது ஒரு மனிதனின் மரணப் பயணமாகவே அமைகின்றது. தமிழ் அகதிகள் தமது உயிரைப் பாதுகாக்கும் நோக்கத்திலேயே இவ்வாறான பாதுகாப்பற்ற இந்த கடல் பயணத்தை தொடர்கின்றனர் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆனால், தற்போது அவுஸ்ரேலிய குடிவரவுத் திணைக்களமானது தனது சட்டத்தில் பாரிய திருத்தங்களை எற்படுத்தியுள்ளது. இந்த திருத்தங்களுடன் வழங்கப்படும் தற்காலிக விசாவானது தமிழர்களுக்கு உயிரிருந்தும் நடமாடமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

# வவுனியா கனகராயன்குளத்தில் வயல் விழாவும், கண்காட்சியும்



(வவுனியா)

வவுனியா மாவட்ட விவசாயத் திணைக்களத்தினுடைய விரிவாக்கல் பிரிவின் ஏற்பாட்டில் வயல் விழாவும் கண்காட்சியும் கனகராயன்குளத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றன.

ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவம், இயற்கைப் பசளைகளை பயன்படுத்தி பயிர்ச் செய்கை மேற்கொள்வதால் ஏற்படும் பீடைத் தாக்கக் குறைவு, பயிராக்கல் முறையினூடாக நோய்த்தாக்கத்திலிருந்து பாதுகாத்தல், தூவல் நீர்ப்பாசனத்தினூடாக நோய்த் தாக்கத்தை குறைத்தல் என்பவற்றை முன்வைத்து கண்காட்சி நடைபெற்றது.

பயிர்களை பயிரிடும் முறை, குறைந்த செலவில் அதிக இலாபம் பெறும் வகையில் தாவரங்களை நாட்டும் முறை, வாழை இலையினால் வேலி அடைக்கும் முறை, கோழி வளர்ப்பு, பன்றி வளர்ப்பு ஆகியன தொடர்பில் இதன்போது விளக்கமளிக்கப்பட்டன.

கனகராயன்குளத்திலுள்ள கருமூல தாய் தாவர பழத் தோட்டத்தில் நடைபெற்ற இந் நிகழ்வுகளில் வடமாகாண விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ்.சிவகுமார், வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சரஸ்வதி மோகநாதன், வவுனியா வடகசு பிரதேச செயலாளர் க.பரந்தாமன் உட்படப் பலர் கலந்துகொணடனர்.

# எக்நெலிகொட கடத்தல் ஆதாரங்கள் ஐ.தே.க.விடம்

லங்கா ஈ நியூஸ் ஊடகவியலாளர் பிரகீத் எக்நெலிகொட கடத்தப்பட்டமைக்கான ஆதாரங்கள் தம்மிடம் இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

திட்டமிட்ட குழுவொன்று எக்நெலிகொடவை கடத்தியதாக பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் தம்மிடம் குறிப்பிட்டதாக ஐக்கிய தேசியக் கட்சியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் அஜித்பெரேரா புலமைப் பரிசில் தொடர்பிலான நாடாளுமன்ற விவாதத்தில் கலந்துகொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். எனினும், எக்நெலிகொடவை யார் கடத்தினார்கள் என்பது இன்னமும் அடையாளம் காணப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

திட்டமிட்ட குழுவொன்று பிரகீத் எக்நெலிகொடவை கடத்திச் சென்றிருக்கலாம் என விசாரணைகளின் மூலம் தெரிய வந்துளளதாக பாதுகாப்பு அமைச்சு தமக்கு கடிதம் மூலம் அறிவித்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தின் பிரதியை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை காணாமல் போனதாகக் கூறப்படும் ஊடகவியலாளர் பிரகீத் எக்நெலிகொட விடயம் தொடர்பில் சாட்சியமளிப்பதற்காக எதிர்வரும் ஜூலை மாதம் 16 ஆம் திகதி நீதிமன்றத்திற்கு ஆஜராகுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் அருந்திக பெர்ணாண்டோவுக்கு ஹோமாகம நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# கல்வி நிர்வாக சேவை போட்டிப் பரீட்சை மத்திய கல்லூரியில் விசேட கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் வட்டத்தின் விசேட ஆசிரியர் வாண்மை விருத்தி செயற்திட்டமாக இலங்கை கல்வி நிர்வாக சேவை போட்டிப் பரீட்சை 2013 இற்கான ஆரம்பக் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை நடைபெறவுள்ளது.

ஏனைய வகுப்புக்கள் விடுமுறை நாட்களில் நடைபெறவுள்ளன.

இதற்கான வளவாளர்களாக யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அருணகிரிநாதன் (கல்வி அபிவிருத்தி), பிரதிக் கல்விப் பணிப்பாளர் இரவீந்தரன் (திட்மிடல்), தமிழ் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் அருந்தாகரன், லலீசன் (கோபபாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை), அதிபர் கணேஸ்வரன் மற்றும் துறைசார் வளவாளர்கள் தயாளன், தவசேகர் தமிழிந்திரன் ஆகியோர் செயற்படவுள்ளனர். மேலும் பரீட்சை மதிப்பீட்டாளர்களும் வழங்குவர்.

இக்கருத்தரங்கில் அனைத்து ஆசிரியர்களும் மற்றும் திறந்த போட்டிப்பரீட்சை விண்ணப்பதாரிகளும் கலந்து பயன்பெறுமாறு யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் வட்டம் அழைக்கிறது.

மேலும் இடநெருக்கடியை தவிர்க்கவும், அச்சடிக்கப்பட்ட குறிப்புகளை பெற்றுக்கொள்ளவும் முற்பதிவினை மேற்கொள்ள 0770540061 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொள்ள முடியுமென மத்திய கல்லூரி அதிபர் எஸ்.கே. எழில் வேந்தன் அறிவித்துள்ளார்.

# பொங்கல் விழா

(பருத்தித்துறை)

அல்வாய் கிழக்கு வெல்லுருவை ஞான வைரவர் ஆலய வருடாந்த பொங்கல் விழா இன்று வெள்ளிக்கிழிமை ஆரம்பமாகி, நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு விசேட பூசை நடைபெற்று 11 மணிக்கு நிறைவு பெறவுள்ளது.

நேர்த்திக்கடனுக்காக கட்டப்படும் ஆட்டுக்கடாக்களுக்கு அன்பளிப்புத் தொகை 1000 ரூபா அறவிடப்படும் என ஆலய நிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர்.

# மனைவியுடன் தகராறு சயனைட் அருந்திய கணவர்

(மானிப்பாய்)

மனைவியுடன் ஏற்பட்ட தகராறு காரணமாக சயனைட் கடித்து தற்கொலைக்கு முயற்சித்த ஒருவர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கபபட்டுள்ளார்.

குருசுமதவடி, ஆனைக்கோட்டை பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதான குடும்பஸ்த்தர் ஒருவரே இவ்வாறு வைததியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றுள்ளது என்று மானிப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரி மல்கம் பிளேட் தெரிவிததார்.

சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸார் மனைவியிடம் விசாரணை மேற்கொண்டவேளை, கணவருக்கு சயனைட் எவ்வாறு கிடைத்தது என்பது பற்றி தனக்குத் தெரியாதென்று கூறியுள்ளார்.

சயனைட் கடித்த குடும்பஸ்தர், சுயநினைவற்ற நிலையில் இருப்பதனால் அவரிடம் விசாரணைகள் மேற்கொள்ள முடியாதுள்ளதாகவும் அவருக்கு நினைவு திரும்பியதும் சயனைட் எங்கிருந்து அவருக்குக் கிடைத்தது என்பது பற்றிய விபரங்கள் திரட்டப்படும் என்றும் பொலிஸ் பொறுப்பதிகாரி மேலும் கூறினார்.

# வவுனியா பிரதேச செயலராக உதயராசா பதவியேற்பு

(வ்வுனியா)



வவுனியா பிரதேச செயலகத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட பிரதேச செயலாளர் கே.உதயராசா, கடந்த திங்கட்கிழமை தனது பதவியை பொறுப்பேற்றுக் கொண்டார்.

கடந்த 5 வருடங்களாக வவுனியா பிரதேச செயலாளராக கடமையாற்றிய அ. சிவபால சுந்தரன், வட மாகாண திணைக்களமொன்றுக்கு மாற்றலாகியதையடுத்தே வவுனியா உள்ளூராட்சி உதவி ஆணையாளராக கடமையாற்றிய கே.உதயராசா புதிய பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# வேரோடு வினை களையும் நீராவி விநாயகருக்கு தேரோடும் வீதியிலே புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம்

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற வேரோடு வினைகளையும் வேழமுகத்து விநாயகர் யாழ். நீராவிப் பதியிலே ஜெய வீரகத்தி விநாயகராக எழுந்தருளி வீற்றிருந்து வழிபடும் அடியவர்க்கு திருவருள் வழங்கி அருள பாலிக்கின்றார். அத்தகைய அருள்மிகு விநாயகப் பெருமான் திருவீதி வலம் வருவதற்காக நிர்மாணிக்கப்பெற்ற புதிய சித்திரத்தேர் இன்று வெள்ளோட்டம் விடப்படுகிறது. இது ஒரு பொன்னான நன்னாள்.

அழகிய புதுப்பொலிவுடன் அற்புத வடிவில் அமைக்கப்பெற்ற புதிய சித்திரததோ இன்று கோலாகலமாக வெள்ளோட்டம் காண்பது ஒரு புனித புண்ணிய கைங்கரியமாகும். அரிய பிறவியாகிய மானிடப் பிறவி எடுத்த பெரும் பாக்கியசாலிகளால் நிறைவேற்றபட்டுள்ள இத்தேர்த் திருப்பணி ஒப்புவமையில்லாத பூர்வஜென்மப் புண்ணியப்பேறாகும்.

இதுவரை காலமும் மஹோற்சவம் நிகழாதிருந்த இந்த ஆலயத்தில் கொடியேற்றம் செய்து, புதிய தேரும் செய்து, வருட மஹோற்சவமும் நடக்கத் திருவருள் கைகூடிய விதத்தை என்னென்பது! எல்லாம் அவன் செயல்!

கணங்களுக்கெல்லாம் பதியாக விளங்கும் கணபதி, விக்கினங்கள் தீர்க்கும் வக்கினேஸ்வரராக, தனக்கு மேல் வேறு தலைவரில்லாத விநாயகப் பெருமானாக புதிய தேரிலே ஆரோகணிக்கும் அற்புதக் காட்சியை நாம் காண வைத்த ஸ்தபதி தேர்ச் சிற்பாசாரியாருக்கு நாம் பெருநன்றியுடையவர்களாவோம்.


இன்று வெள்ளோட்டங் காணும் புதுத்தேர் மீது ஆனைமுகன் ஆரோகணிக்க அடியார்கள் வடம்பிடித்து இழுத்துச் சொர்க்கத்திலே இடம்பிடிக்கும் இன்று இடம்பெறும் அருட்காடசியின் அற்புதப் பாங்கு சொல்லுந்தரமன்று.

ஆகவே இன்று நிகழும் தேர் வெள்ளோட்ட நிகழ்வில் கலந்துகொண்டு எம்பெருமானுடைய திவ்ய பேரருளுக்குப் பாத்திரமாகி பேரானந்தப் பெருவாழவுக்கு அடிகோலுமாறு அடியார் பெருமக்களை அன்புடன் அழைக்கின்றோம்.

“கணபதியைக் கைதொழ கடு வினை அகலும்”

கலாபூஷணம்
இராசையா ஸ்ரீதரன்

# உத்தர காண்ட் மழை வெள்ளத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலி



உத்தரகாண்டில் மழை வெள்ளத்தால் யாத்திரிகர்களுக்கு பெரும் சோகம் ஏற்பட்டுள்ளது. வெள்ளம், நிலச்சரிவால் சேற்றில் கூட்டம் கூட்டமாக புதைந்து ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். உத்தரகாண்ட், இமாச்சலப் பிரதேசம், அரியானா மாநிலங்களில் பருவமழையின் போது வழக்கமாக பெய்யும் மழையின் அளவை விட, கடந்த 3 நாட்களில் மூன்று மடங்கு அதிகமாக பெய்ததால் ஆறுகளில் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. ஏராளமான பகுதிகள் மழை வெள்ளத்தில் சிக்கியுள்ளன. ஆங்காங்கு நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.மழை காரணமாக வீடுகள் இடிந்துள்ளன.

உத்தரகாண்ட் மாநிலத்தில் 100 பேர் பலியாயினர். ருத்ர பிரயாக் மாவட்டத்தில் அதிகளவில் பாதிப்பு ஏற்பட்டது. அலக் நந்தா ஆற்றின் கரையோரம் இருந்த 40 ஹோட்டல்கள் உட்பட 73 கட்டிடங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. கேதார்நாத், பத்ரிநாத், கங்கோத்ரி, யமுனோத்ரி, சமோலி, உத்தரகாசி போன்ற இடங்களுக்கு புனித யாத்திரை மேற்கொண்ட ஒரு இலட்சம் பக்தர்கள் சாலைகள் சேதம் அடைந்ததால் ஆங்காங்கே சிக்கியுள்ளனர். பொதுமக்களும் பல இடங்களில் வெள்ளத்துக்கு இடையே சிக்கித் தவிக்கின்றனர். அவர்களை மீட்கும் பணியில் இராணுவ ஹெலிகொப்டர்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு இவற்றின் மூலம் உணவு பொட்டலங்கள், உணவு பொருட்கள் போடப்படுகின்றன.

வட மாநிலங்களில் கடந்த 3 நாட்களுக்கும் மேலாக துவம்சம் செய்த மழை, பல்வேறு இடங்களில் நேற்று முன்தினம்சற்று ஓய்ந்தது. வெப்பநிலையும் சாதகமாக இருந்ததால், மீட்பு பணிகள் சுறுசுறுப்பாக மேற்கொள்ளப்பட்டன. உத்தரகாண்டில் மழை, வெள்ளத்துக்கு ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர். இவர்களில் .பெரும்பாலோர் யாத்திரிகர்கள். வெள்ளம், நிலச்சரிவால் கூட்டம் கூட்டமாக சேற்றில் புதைந்து இவர்கள் இறந்துள்ளனர். புகழ்பெற்ற கேதார்நாத் கோயில் அருகே 50 பக்தர்கள் புதைந்து பலியாகினர். வெள்ளத்தில் இக்கோயில் முழுமையாக மூழ்கி விட்டது. இதனால், கோயில் அப்படியே இருக்கிறதா இடிந்து விட்டதா என தெரியவில்லை என மாவட்ட கலெக்டர் ஜஸ்பால் ஆர்யா கூறினார்.

பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி ஆகியோர் விமானம் மூலம் உத்தரகாண்ட் மாநில வெள்ளச்சேத பகுதிகளைப் பார்வையிட்டனர். மத்திய உள்துறை செயலாளர் ஆர்.கே. சிங்கும் வெள்ளம் பாதித்த பகுதிகளை தனியாக பார்வையிட்டார்.

# சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பால் தமிழ் நாட்டில் பெரும் சர்ச்சை

இருபத்தியோரு வயதான ஆணும், பதினெட்டு வயதான பெண்ணும் உடலுறவு கொண்டால் அவர்கள் திருமணமானவர்களாக கருதப்படுவர் என சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி எஸ் கர்ணன், அளித்திருக்கும் தீர்ப்பு தமிழ்நாட்டில் பெரும் சர்ச்சையை உருவாக்கியிருக்கிறது.

கோவைப்பகுதியைச் சேர்ந்த ஒரு இஸ்லாமியப் பெண், தான் தன் கணவரால் கைவிடப்பட்டுவிட்டதாகக்கூறி பராமரிப்புத் தொகை கேட்டு நீதிமன்றம் சென்றார். அந்த பெண்ணிடமிருந்து பிரிந்து சென்றவர் அவர்களது இரு குழந்தைகளுக்கும் தானே தகப்பன் என்று ஏற்றுக்கொண்டதால், அந்த குழந்தைகளின் பராமரிப்புக்காக மட்டும் மாதம் தலா 500 ரூபாய் வழங்கினால் போதும் மற்றபடி அவர்களுக்கு திருமணமானதாக சான்றுகள் எதுவும் இல்லாத நிலையில், அந்த பெண் குடும்பப் பராமரிப்புத்தொகை எதையும் கோரமுடியாது என்று குடும்பநல நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்தத் தீர்ப்பை எதிர்த்து அந்த பெண் செய்த மேல் முறையீட்டு மனுவின் மீது தீர்ப்பளிக்கையிலேயே நீதிபதி கர்ணன் இந்த சர்ச்சைக்குரிய கருத்துக்களைக் கூறியிருக்கிறார்.

இந்தத் தீர்ப்பு திருமணம் செய்துகொள்வதாகக் கூறி உடலுறவு கொண்டு பின்னர் ஏமாற்றும் ஆண்களுக்கு ஒரு எச்சரிக்கை என்று ஒரு சிலரும், திருமணத்திற்கு முன்னரே உடலுறவு கொள்ள இந்தத்தீர்ப்பு தூண்டக்கூடும் என்று ஒரு சிலரும், உடலுறவையே திருமணமாக்குவது என்பது தனிமனித சுதந்திரத்தில் தலையிடுவதாகும் என்று வேறு சிலரும் வாதிடுகின்றனர்

# இலங்கை இராணுவ அதிகாரிகள் விரைவில் திருப்பி அனுப்பப்படுவர்

## மத்திய இணை அமைச்சர் நாராயணசாமி தகவல்



(சென்னை)

குன்னூரில் இராணுவப் பயிற்சி பெறும், இரண்டு இலங்கை இராணுவ அதிகாரிகள், விரைவில் திருப்பி அனுப்பி வைக்கப் படுவர்,"" என, மத்திய அமைச்சர் நாராயணசாமி கூறினார்.

சென்னை விமான நிலையத்தில் அவர் கூறியதாவது:-

குன்னூரில் இராணுவ பயிற்சி பெறும் இரண்டு இலங்கை அதிகாரிகளை, திருப்பி அனுபபுமாறு, இராணுவ அமைச்சர் மற்றும் செயலரிடம் கூறியுள்ளோம். விரைவில், இரு அதிகாரிகளும் திருப்பி அனுப்பப்படுவர்.

பா.ஜ., கட்சி சார்பில், பிரதமர் வேட்பாளராக, நரேந்திர மோடியை நிறுத்த அதிக வாய்ப்புள்ளது. அதேபோல், காங்கிரஸ் சார்பில், பிரதமர் வேட்பாளராக, ராகுலை நிறுத்த அதிக வாய்ப்புள்ளது. இலங்கை கடற்படையினரால், சிறை பிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை மீட்க, மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது விரைவில் அவர்கள் மீட்கப்படுவர். இவ்வாறு அவர் கூறினார்..

காங்கிரஸில் பாருங்கள், பிரதமர் பதவிக்கு பெருந்தன்மையுடன் ராகுல் காந்தியை அனைவரும் பரிந்துரைக்கிறோம். ஆனால் பா.ஜ.க.வில் பெரும் அடிதடியே நடக்கிறது என்று கூறியுள்ளார் மத்திய இணை அமைச்சர் நாராயணசாமி. சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர் களிடம் பேசுகையில் அவர் இதைத் தெரிவித்தார்.

புதிய அமைச்சர்கள் பதவி ஏற்பின் போது 2014 ம் ஆண்டு ராகுல் பிரதமர் பதவியை ஏற்க வேண்டும் என்று மன்மோகன் சிங் கூறியுள்ளார். 2004ஆம் ஆண்டு பிரதமர் பதவியை மன்மோகன் சிங்குக்கு சோனியா கொடுத்தார். 2014 ம் ஆண்டு தேர்தலுக்கு பிறகு பிரதமர் பதவியை ராகுல் காந்தியிடம் மன்மோகன் சிங் ஒப்படைக்க உள்ளார்.

இந்த பெருந்தன்மை காங்கிரஸ் கட்சியில் மட்டுமே உள்ளது. ஆனால் பாரதீய ஜனதா கட்சியில் பிரதமர் பதவிக்கு குடுமிப்பிடி சண்டை நடக்கிறது. மோடியை ஏற்க அத்வானி மறுக்கிறார். அத்வானியை ஏற்க மோடி மறுக்கிறார். அருண்ஜெட்லி, சுஷ்மா சுவராஜ் ஆகியோரும் பிரதமர் பதவிக்கு ஆசைப் படுகிறார்கள். இவர்களால் நாட்டு மக்களுக்கு என்ன செய்ய முடியும் என்றார் நாராயணசாமி.

# இலங்கை தம்பதியினரை கடத்தியோர் தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது



(சென்னை)

இங்கிலாந்தில் வசிக்கும் இலங்கைத்தம்பதியினரான தவராஜா ஜலஜா ஆகியோரை கடந்த 25ஆம் திகதி சென்னையில் கடத்தியவர்கள் மீது தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடைய கண்ணன், ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியை இந்திரா அந்தோணி மேரி, பிரபு, மதியழகன், சரவணன், சதிஷ்குமார், இளங்கோ இலங்கையைச் சேர்ந்த வசந்த் ஆகிய 8 பேரை கைது செய்தனர்.

இந்த நிலையில் கைதான 8 பேர் மீது தேசிய பாதுகாப்பு சட்டத்தில் நடவடிக்கை எடுக்க வடக்கு மண்டலம் கூடுதல் கமிஷனர் தாமரை கண்ணன் பரிந்துரைந்தார். இதை ஏற்று சென்னை பொலிஸ் கமிஷனர் 8 குற்றவாளிகளை தேசிய பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்ய உத்தரவிட்டார்.

இதையடுத்து 8 பேரும் தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டன

# 21 வயது பெண்ணுக்கு 11 குழந்தைகள்



பலஸ்தீனத்தில் உள்ள காசா பகுதியைச் சேர்ந்தவர் ரவுக் அல்ப்பதாஸ் (வயது 25). இவர் 7 ஆண்டுகளுக்கு முன்பு 14 வயது பெண்ணை திருமணம் செய்து கொண்டார். இவரது மனைவிக்கு தற்போது 21 வயது ஆகிறது. இந்த 7 ஆண்டில் அவரது மனைவி 11 குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ளார்.

அவருக்கு 1தடவை 4குழந்தைகள் பிறந்தன. இன்னொரு தடவை 3 குழந்தைகள் பிறந்தன. பின்னர் அடுத்தடுத்து 2 இரட்டை குழந்தைகள் பிறந்தன. இதனால் அவர் 21 வயதிலேயே 11 குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ளார்.

ரவுக் அல்ப்பதாஸ் அரசு ஊழியராக உள்ளார். 11 குழந்தைகளை வளர்ப்பதற்கு போதிய பணம் இல்லாமல் தவிக்கிறார்கள். 11 குழந்தைகள் இருப்பதால் அவர்களுக்கு அரசு உதவி தொகை வழங்கி வருகிறது. ஆனாலும் உணவுக்கும், மற்ற தேவைகளுக்கும் இது போதவில்லை என்று ரவுக் அல்ப்பதாஸ் கூறினார்

# ரஷ்யா அணு ஆயுதங்களை விரைவில் குறைக்கவேண்டும்

## வலியுறுத்தும் ஒபாமா

ரஷ்யா அணு ஆயுதங்களை குறைக்க வேண்டும்மென அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வலியுறுத்தியுள்ளார்.

அயர்லாந்தில் நடைபெற்ற ஜி8 மாநாட்டில் கலந்து கொண்ட அமெரிக்க அதிபர் ஒபாமா, பின்னர் ஜேர்மன் சென்றுள்ளார். அங்கு பெர்லின் சுவரின் பெர்டன்பார்க் வாய்ற்கதவு முன்பு நேற்று முன்தினம் உரையாற்றினார்.

அப்போது ஒபாமா பேசியதாவது:-

அணு ஆயுதங்களை மூன்றில் ஒருபங்காக குறைக்க வேண்டும். அவ்வாறு செய்தாலும் அமெரிக்க மற்றும் அதன் நேச நாடுகளின் பாதுகாப்பு நடவடிக்கை உறுதி செய்ய முடியும் என்று நம்புகிறேன். நான் அனைத்து விஷயங்களையும் ஆராய்ந்த பிறகே இதை கூறுகிறேன்.

ரஷ்யா, பனிப்போரின் போது வைத்திருந்த அளவுக்கு அணு ஆயுதங்களையும் குறைக்க வேண்டும். இது தொடர்பாக ரஷ்யாவுடன் பேச்சு வார்த்தை நடத்த முடிவு செய்துள்ளேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள ரஷ்யாவின் துணை பிரதமர் திமித்ரி ரோகோசின், அமெரிக்கா அணு ஆயுதக்குறைப்பு நடவடிக்கைகளுக்கு தடை ஏற்படும் வகையில், தனது அணு வலிமையை அதிகப்படுத்தி வருகிறது. இந்நிலையில், நாங்கள் அமெரிக்காவின் இந்த அணு ஆயுத குறைப்பு பேச்சு பற்றி கவலை படவில்லை., என்று கூறினார்.

# பேரீச்சம்பழ விநியோகத்தில் முறைகேடு தரமான பேரீச்சம்பழம் எங்கே?

## களஞ்சியசாலையில் தில்லு முல்லு

(கனகராயன்குளம்)

துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் உள்ள தரம் 6 தொடக்கம் 11 வரையான மாணவர்களுக்கு வழங்கவென கொடுக்கப்பட்ட பேரீச்சம்பழத்தில் புழுக்களும், வண்டுகளும் காணப்பட்டதனையடுத்து அதனை மாணவர்களுக்கு வழங்க வேண்டாமென மல்லாவி பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் செல்வரட்ணம் அறிவித்துள்ளார்.

உலக உணவுத் திட்டத்தின் கீழ் துணுக்காய் கல்வி வலயத்திலுள்ள 60 பாடசாலைகளுக்கு ஒரு மாணவனுக்கு 2 கிலோ கிராம் வீதம் வழங்கவென இப் பேரீச்சம்பழங்கள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. அத்துடன் தரம் 6 தொடக்கம் 9 வரையான மாணவர்களுக்கு வீட்டுக்கு கொண்டு செல்ல ஒரு கிலோ கிராம் வழங்கப்படுவதுடன், பாடசலைகளில் வைத்து மதிய உணவுக்குப் பின்னர் ஒவ்வொருநாளும் 35 கிராம் வழங்க வேண்டுமெனவும் அதிபர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், மு/அணிஞ்சியன் குளத்திற்கு 500 கிலோ கிராமும், மல்லாவி மத்திய கல்லூரிக்கு 400 கிலோ கிராமும் வழங்கப்பட்ட நிலையில் இவற்றினை மல்லாவிப் பிரதேச பொதுச்சுகாத்தாரப் பரிசோதகர் செல்வரட்ணமும் பார்வையிட்ட போது அதற்குள் இறந்த நிலையில் வண்டுகளும், புழுக்களும் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

பேரீச்சம்பழத்தின் காலாவதித் திகதி நீண்ட நாட்கள் இருக்கின்ற போதும், அவற்றில் வண்டுகள், புழுக்கள் உள்ளமை கண்டு பிடிக்கப்பட்டதனை அடுத்து, அவற்றை மாணவர்களுக்கு வழங்க வேண்டாமென அவர் அதிபர்களுக்கு அறிவித்துள்ளார். (17)

## இந்தியா சிறப்புத்...

லேயே புதுடில்லியால் நியமிக்கப்படவுள்ளதாகக் கூறப்படும் சிறப்புத் தூதுவரை உத்தியோகபூர்வமாக ஏற்காதிருக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது.

இலங்கையின் இந்த எதிர்ப்பு மற்றும் அதிருப்தியையும் மீறி இந்தியா தூதுவரொருவரை ஆலோசனை வழங்க என்ற போர்வையில் நியமிக்குமானால் அவருடன் எவ்வித கலந்துரையாடலிலும் ஈடுபடாதிருக்க கொழும்பு முடிவெடுத்துள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

அதேவேளை, இலங்கை அரசு இது விடயத்தில் கடும் எதிர்ப்பை வெளியிடும் பட்சத்தில் இந்தியா தமது முயற்சியைக் கைவிடக்கூடும் எனவும் கருதப்படுகிறது

1987ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் .பிரகாரம் அமுல்படுத்தப்பட்ட அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான முயற்சியில் அரசு தீவிரமாக இறங்கியுள்ளது. அத்துடன், இந்தியாவுக்கு வழங்கிய மேலும் சில உறுதிமொழிகளை கொழும்பு நிர்வாகம் மீறிவருகின்றது எனவும் கூறப்படுகின்றது

இந்தியாவின் தலையீட்டுடன் கொண்டுவரப்பட்ட 13 ஆவது திருத்தச்சட்ட விடயத்தில் இலங்கை எடுத்துவரும் நிலைப்பாடு இந்தியாவுக்கு கடும் கொதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றபோதும் என்ன வகையான எதிர்ப்பை இந்தியா வெளிப்படுத்தும் என தெரிவிக்கப்படவில்லை

13 விவகாரம் உட்பட முக்கிய சில விடயங்கள் தொடர்பில் இலங்கை அரசுடன் விரிவாகப் பேச்சு நடத்தும் வகையிலேயே சிறப்புத் தூதுவர் நியமிக்கப்படவுள்ளார் எனவும் செய்திகள் வெளியாகியிருந்தன.

இலங்கைக்கான சிறப்புத் தூதுவராக இந்தியாவுக்கான ஐ.நா.வின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பதவியிலிருந்து அண்மையில் ஓய்வுபெற்ற இராஜதந்திரியான ஹர்தீப்சிங் பூரி நியமிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் ஆட்சிக்காலத்தில் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் பூரி, அரசியல் அதிகாரியாகப் பணியாற்றியவர். இந்திய உடன்பாட்டுக்கான முன் ஆயத்த நடவடிக்கைகளில் பங்கேற்றவர் என்பதுடன் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கிற்கும் பூரி நெருக்கமானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சுண்டிக்குளத்தில்...

அனுமதிக்கப்படாத சுண்டிக்குளம் பகுதியில் வெளிமாவட்ட மீனவர்கள் அனுமதியின்றி கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதனால் அப்பகுதி மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் நிலையும் காணப்படுகின்றது. இது சம்பந்தமாக ஊடகங்கள் வாயிலாகச் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இதனை அடியொற்றி இலங்கை மனித உரிமை ஆணைக்குழு கவனமெடுத்து சம்பந்தப்பட்ட தரப்பினரிடையே சந்திப்பை ஏற்படுத்தி அந்தப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இதன் ஒரு கட்டமாக நேற்று இலங்கை மனித உரிமை ஆணைக்குழு யாழ்.காரியாலயத்தில் யாழ். கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களப் பணிப்பாளர் ந.கணேசமூர்த்தி, பருத்தித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பருத்தித்துறை உதவி பொலிஸ் அத்தியட்சகர், சுண்டிக்குளம் மீனவர் சங்கத்தினர் ஆகியோர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.காரியாலய அதிகாரி ரி.கனகராஜ் தலைமையில் ஒன்று கூடி ஆராய்ந்ததுடன், விரைவில் இவ்விடயம் சம்பந்தமாக சம்பந்தப்பட்ட தரப்பினரை ஒன்று கூட்டி கலந்துரையாடி அவர்களது பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.(பா)

## விபத்துக்களைத்...

துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

விபத்துக்கள் ஏற்படுவதையும், மனித உயிர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை தடுப்பதும் இந்த கருவிகள் பொருத்தப்படுவதற்கான முக்கிய நோக்கமாக அமைந்துள்ளது எனத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

## இலத்திரனியல்....

அதன்பிரகாரம் அடுத்த 6 மாதங்களுக்குள் விலை மனுக்கள் ஊடாக தெரிவு செய்யப்பட்ட நிறுவனமொன்றுடன் புதிய இலத்திரனியல் அடையாள அட்டையை வடிவமைப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என ஆட்பதிவுத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. நாட்டிலுள்ள அனைத்து பிரஜைகளினதும் தரவுகள் திரட்டப்பட்ட பின்னர் புதிய தேசிய அடையாள அட்டைகளை தயாரிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என திணைக்களத்தின் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இந்தப் புதிய இலத்திரனியல் அடையாள அட்டையில் உறுதியான பாதுகாப்பு முறைகளை உள்ளடக்கவும் எண்ணியுள்ளதாக ஆட்பதிவு ஆணையாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## வன்னியில்...

கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வுகளில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, றிசாட் பதியுதீன், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (தெரிவாகிய தொண்டராசிரியர்களின் விபரம் 2ஆம் பக்கத்தில்) (29)

## யுத்த வெற்றி...

களைத் தெரிவித்தார்.

அரசின் இந்தப் போக்கைத் தடுத்து நிறுத்த இந்தியா நடவடிக்கை எடுக்கும் என்று நாம் நம்புகிறோம். 13 ஆவது திருத்தச் சட்டத்தை ஒழிப்பது பெரிய தொரு நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதி, இதில் பல்வேறு பகுதிகள் உள்ளன.

அரசாங்கம் அதிகாரப்பகிர்வு தொடர்பான தனது வாக்குறுதியில் ஆர்வம் காட்டவில்லை. போரில் வெற்றி பெற்றதும் அந்த ஆர்வம் எல்லாமே போய்விட்டது.

இந்தியத் தலைவர்களுடனான சந்திப்புகளின் போது, அரசாங்கம் கொமன் வெல்த் பிரகடனத்தை மீறிவிட்டதாகவும், இதனால், கொழும்பில் கொமன்வெல்த் தலைவர்களின் உச்சி மாநாட்டை நடத்துவது பொருத்தமற்றது என்றும் எடுத்துக் கூறியுள்ளோம். ஆனால், உண்மையில் கொமன் வெல்த் மாநாடு தொடர்பாக என்ன செய்வதென்று இந்தியாவே முடிவு செய்ய வேண்டும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## மதுப்பிரியர்களின் அட்டகாசம்; விசனமடையும் பொதுமக்கள்

(சாவகச்சேரி)

கல்வயல் பகுதியில் மதுப்பிரியர்களின் அட்டகாசம் அதிகரித்துக் காணப்படுவதாக அப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கல்வயல் சண்முகானந்தா வீதியிலுள்ள வாசிகசாலையில் இரவு வேளையில் மதுப்பிரியர்கள் தமது பொழுதைக் கழிப்பதாக பலரும் தெரிவிக்கின்றனர். காலை வேளையில் வெற்று மதுபானப் போத்தல்கள், ரின்கள் இந்தப் பகுதிகளில் தாராளமாகக் காணப்படுகின்றன.

அருகே ஸ்ரீசண்முகானந்தா வித்தியாசாலை எதிரே முன்பள்ளி, பொதுநோக்கு மண்டபம் மற்றும் கிராம அலுவலர் காரியாலயம் என பலதரப்பட்ட பொது அமைப்புக்கள் காணப்படுகின்ற முக்கியமான பகுதிகளிலேயே இவ்வாறான அருவருக்கத்தக்க செயல்கள் இடம் பெறுவதாக இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அண்மையில் இந்தப் பகுதியில் மது அருந்தியவர்கள் பாடசாலைக்குள் மதுப்போத்தல்களை வீசிவிட்டுச் சென்றுள்ளனர். இதனால் மாணவர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே இவ்வாறான சம்பவங்களைத் தடுக்கச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ)

## ஞானிமடம் வீதிக்கு விமோசனம்

(முழங்காவில்)


வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் பூநகரி ஞானிமடம் சந்தியில் இருந்து கறுக்காய்த் தீவு மகா வித்தியாலயம் வரையான இரண்டு கிலோ மீற்றர் வீதி 5 கோடி 75 இலட்சம் ரூபா செலவில் காப்பெற் வீதியாக மாற்றப்படவுள்ளது.

இதற்கான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு நடைபெறுவதாகவும், நான்கு மாதத்தில் பூர்த்தி செய்யப்பட்டு மக்களின் பாவனைக்கு விடப்படவுள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர். (112)

## சட்டவிரோத ஆஸி.பயணம் பிடிபட்டவர்களிடம் சி.ஐ.டி. விசாரணை

(கொழும்பு)

அவுஸ்ரேலியா செல்ல முயன்றார்கள் என்ற சந்தேகத்தில் கிழக்கு கடற்பரப்பில் வைத்து நேற்று முன்தினம் அதிகாலை கைது செய்யப்பட்ட 88 பேரும் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரிடம் நேற்று மாலை ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 66ஆண்களும், 22 பெண்களும் அடங்குகின்றனர். இதில் 18 வயதுக்குக் குறைந்த சிறுவர்கள் 11 பேரும் சிறுமிகள் 9 பேரும் அடங்குகின்றனர். இதே வேளை கர்ப்பிணித் தாய்மார்கள் இருவர் உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன், கைது செய்யப்பட்டவர்களில் 50 பேர் மட்டக்களப்பை சேர்ந்தவர்கள் என்றும் யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த ஒன்பது பேரும், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய இடங்களைச்சேர்ந்த தலா எழுவரும், வவுனியா, அம்பாறை தலா ஐவரும், திருமலையைச் சேர்ந்த இருவரும், மன்னார், கொழும்பு, புத்தளம் ஆகிய இடங்களைச் சேர்ந்த தலா ஒருவரும் அடங்குகின்றனர்.



கொழும்புத்துறை பிரதான வீதியில் அமைந்துள்ள பொதுக் கிணற்றின் முன்பகுதி முன்னர் சேதமடைந்தநிலையில் தற்போது யாழ்.மாநகர சபையினால் சீர் செய்யப்பட்டுள்ளது. இதனால் மக்கள் சிரமமின்றி கிணற்றைப் பயன்படுத்தி வருகின்றனர். (21)

## தமிழக...

அதேநேரம், கடந்த 2011 ஆம் ஆண்டில் ஆயிரத்து 670 பேரும், 2010 ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 40 பேரும் இலங்கை திரும்பி இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களுக்கான மருத்துவ பரிசோதனைகள், கடவுச்சீட்டு வழங்கல் போன்ற சேவைகளை ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான ஆணையகம் மேற்கொள்கின்ற அதேநேரம், நிதி உதவிகளையும் வழங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## மணவாளக்கோல விழா

(யாழ்.நிருபர்)

காரைநகர் வியாவில் அருள்மிகு ஐயப்பசுவாமி தேவஸ்தான மணவாளக் கோலத் திருவிழா இன்று சிறப்பாக நடைபெறவுள்ளது.

காலையில் சங்காபிஷேகம் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறும். தொடர்ந்து இரவு 8.00 மணிக்கு நடைபெறும் வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து திருவூஞ்சல், சுவாமி வீதிவலம் வரும் நிகழ்வும் இடம்பெறும். (10)

# ஆட்கடத்தலும் துஷ்பிரயோகமும் இலங்கையில் இப்போது தாராளம்

## அமெரிக்க அறிக்கையில் விபரிப்பு

வேலைவாய்ப்புக்கள் குறித்து பொய்யான வாக்குறுதிகளைக் கொடுத்து ஆட்களை ஏமாற்றி அழைத்துச் செல்லல் தொடர்பிலான நடவடிக்கைகள் குறித்த அமெரிக்க அரசுத்துறையின் வருடாந்த அறிக்கையில் இலங்கை நிலைவரம் மோசமானதாக இருப்பதாகக் கூறப்பட்டுள்ளதுடன், தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட வேண்டிய நாடுகளின் இரணடாவது நிலைப்பட்டியலில் அந்த நாடு பட்டியலிடப்பட்டுள்ளது.

பொய்யான வாக்குறுதிகள் வழங்கப்பட்டு கட்டாய வேலைகளுக்காகவும், பாலியல் தொழிலுக்காகவும் இலங்கையர்கள் வேறு நாடுகளுக்கு அழைத்துச் செல்லப்படுவது கணிசமாக தொடர்வதாக அமெரிக்க அறிக்கை கூறுகிறது.

16 முதல் 17 வயது வரையிலான சிறார்கள், பெண்கள் மற்றும் ஆண்கள் உட்பட பல இலங்கையர்கள், சவுதி அரேபியா, குவைத், கட்டார், ஐக்கிய அரபு இராச்சியம், ஜோர்தான், பஹ்ரைன், லெபனான், இராக், ஆப்கான், மலேசியா மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளில் நிர்மாணப்பணியாளர்களாக, வீட்டு வேலையாட்களாக, ஆடைத் தொழிற்சாலை பணியாளர்களாக கட்டாய வேலையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும், நடமாடுவதற்கான சுதந்திரத்தை இவர்களில் சிலர் இழந்துள்ளதாகவும், சிலரிடம் கடவுச் சீட்டுக்கள் பறிமுதல் செய்யப்பட்டு வைக்கப்பட்டுள்ளதாகவும் அமெரிக்கா கூறியுள்ளது.

இலங்கையின் வெளி நாட்டு வேலைவாய்ப்பு ஏஜனசுகளின் அமைப்பில் அங்கம் வகிக்கும் பல முகவர்கள், வெளிநாடுகளுக்கு வேலைக்கு செல்லும் ஆண்களிடம் கணிசமான வேலைவாய்ப்புக்கான பணத்தைப் பெறுவதாகவும், பெண்கள் பலர் தமக்கு கிடைக்கும் சம்பளத்தில் இந்தப் பணத்தையும் பிடித்துக்கொள்ள அனுமதிப்பதாகவும் அது கூறுகிறது.

பல ஏஜன்சிகள் ஒரு வேலைக்காக ஒப்பந்தத்தை செய்துவிட்டு அதனிலும் குறைவான சிரமமான வேலைகளைப் பெற்றுக்கொடுப்பதாகவும், அனுமதி பெறாத பல துணை முகவர்கள் இதில் உதவுவதாகவும் அந்த அறிக்கை கூறுகிறது.


இலங்கையின் உள்நாட்டிலேயே பல இடங்களில் சிறார்கள் தொழிலாளர்களாகவும், பாலியல் தொழிலாளர்களாகவும் பயன்படுத்தப் படுவதாகவும், மலையக தமிழ் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் கொழும்பு போன்ற இடங்களில் வீட்டுப் பணியாளர்களாக பல விதமான துன்புறுத்தல்களுக்கும் உள்ளாவதாகவும் அமெரிக்க அறிக்கை குற்றஞ்சாட்டுகிறது.

இந்த மலையக சிறார்கள் உடல் ரீதியாகவும், உளரீதியாகவும், பாலியல் ரீதியாகவும் துன்புறுத்தலுக்கு உள்ளாவதாகவும் அது கூறுகிறது.

இப்படியான முறையற்ற ஆட் கடத்தல்களுக்கு பெருமளவில் போர் விதவைகளும், பதிவு செய்யப்படாத பெண் தொழிலாளர்களும் இலகுவில் ஆட்படுவதாகவும் அது கூறுகிறது.


சீனா, தாய்லாந்து மற்றும் ஏனைய தெற்காசிய நாடுகள், ஐரோப்பிய நாடுகள், முன்னாள் சோவியத் ஒன்றியத்தைச் சேர்ந்த பெண்கள் இலங்கையில் அணமைக் காலமாக பாலியல் தொழிலாளர்களாகப் பயன்படுத் தப்படுவதாகவும் அந்த அறிக்கை கூறுகின்றது.

இவை தொடர்பில் இலங்கை அரசாங்கம் சில நடவடிக்கைகளை எடுத்திருகின்ற போதிலும், அவை போதுமான பலனை இது வரை தரவில்லை என்றும் அந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது.



முல்லைத்தீவு மாவட்டம் கரைத்துறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் நீராவிப்பிட்டி கிராமத்தில் இன்று 21.03.2013 திறக்கப் படவிருக்கும் அழகிய தோற்றம் இது. (125)

# இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது இந்தியா



இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நடைபெற்ற ஐ.சி.சி. சாம்பியன்ஸ் கிண்ண 2 ஆவது அரையிறுதிப் போட்டியில் இந்தியா 8 விக்கெட்டுகளால் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குள்நுழைந்தது.

182 ஓட்டங்கள் என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இந்தியா 35 ஓவர்களில் 02 விக்கெட்டுகளை இழந்து 182 ஓட்டங்களை பெற்று தனது இலக்கை எட்டியது.

ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணத்திற்கான 2 ஆவது போட்டி பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் இங்கிலாந்து, கார்டி்.ப், சோபியா கார்டன்ஸ் மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணித்தலைவர் முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தார்.

துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்கள் நிறைவில் 08 விக்கெட்டுகளை இழந்து 181 ஓட்டங்களை பெற்றது.

182 ஓட்டங்கள் என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 02 விக்கெட்டுக்களை இழந்து 182 ஓட்டங்களை பெற்று இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது.

இறுதிப்போட்டி எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இங்கிலாந்திற்கும் இந்தியாவிற்கும் இடையில் நடைபெறவுள்ளது.

# மெழுகுதிரி கைத்தொழில் வழிகாட்டல் செயலமர்வு

(கிளிநொச்சி)

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தால் பூநகரி பிரதேச செயலகப் பிரிவில் மெழுகுதிரி செய்யும் கைத்தொழில் முயற்சிகள் தொடர்பான வழிகாட்டல் செயலமர்வுகள் பொதுமக்களுக்கு நடத்தப்பட்டது.

அரசாங்க அதிபர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரனின் முயற்சியால் பூநகரி பிரதேச செயலர் கே.எஸ்.வசந்தகுமாரின் வழிகாட்டிலின் கீழ் நடைபெற்ற இச் செயலமர்வை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கிளிநொச்சி மாவட்ட உதவிப் பணிப்பாளர் கே.சசிகரன் மேற்கொண்டார். அன்புபுரம் கிராமத்தில் 14 பொதுமக்களும், கரடிக் குன்று கிராமத்தில் 15 பொதுமக்களும், நாவாந்துறை கிராமத்தில் 18 பொதுமக்களும் இச் செயலமர்வில் கலந்து கொண்டனர்.

அரச, அரச சார்பற்ற துறைகளால் வழங்கப்படும் நிதி உதவிகளைக் கொண்டு கைத்தொழில் முயற்சிகளை திறம்பட மேற்கொள்வது தொடர்பாக பயனுள்ள செயலமர்வாக அமைந்ததாக கலந்துகொண்ட பொதுமக்கள் தெரிவித்தனர்.

# இலவச கண்சிகிச்சை முகாம் நெடுந்தீவில் இன்று ஆரம்பம்

நெடுந்தீவுப் பகுதி மக்களின் நன்மை கருதி கண்வைத்திய முகாம் வட மாகாண கடற்படைகளின் கட்டளைத் தளபதி¨றியல் அட்மிரல் சிரந்தா உடவத்தவின் ஏற்பாட்டில் 21 ஆம் 22 ஆம் திகதிகளில் நெடுந்தீவு பிரதேச வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

நெடுந்தீவு மக்களின் கண் சம்பந்தமான பிரச்சினைகளை தீர்வு செய்யும் முகமாக மேற்கொள்ளப்படும் இரண்டு நாள் கண்சிகிச்சை முகாம் நெடுந்தீவு கடற்படைகளின் கட்டளை அதிகாரி பி.எஸ்.கே.காரியப்பெருமா தலைமையில் நடைபெறவுள்ளது.

ஜோன்ஸ் கில்ஸ் கம்பனிமற்றும் 2020 விசன்சம்பியன் பவுன்டேசன் நிறுவனம் என்பவற்றின் ஆதரவுடன் இடம் பெறும் இந்த பாரிய கண்சிகிச்சை முகாமிற்கு கொழும்பு கண்வைத்தியசாலை கண் வைத்திய நிபுணர் பிரசன்ன குணவர்த்தனா, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை கண் வைத்திய நிபுணர் சந்திரகுமாரன் ஆகியோர் கலந்துகொண்டு சிகிச்சைகளை வழங்கவுள்ளார்கள்.

இந்நிகழ்வில் ஆசியுரைகளை நயினாதீவு விகாராதிபதி நவுது பதுமன கீர்த்தி திச தேரர் இந்து மதகுரு குணேந்திரசர்மா, கிறிஸ்தவ மதகுரு அருட்தந்தை அன்ரன் அமல்ராஜ் ஆகியோர் வழங்கவுள்ளார்கள்.

மருத்துவ முகாமில் விருந்தினர்களாக வட மாகாண கடற்படைகளின் கட்டளை அதிகார்றியல் அட்மிரல் சிரந்தா உடவத்த, பாரம்பரிய கைத்தொழிலகள் மற்றும் சிறுதொழிலகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்கள்.


தொழிற்பயிற்சிகள்

Mobile Phone Repairing

Batch I - திங்கள் முதல் வெள்ளி வரை 8.30 am -11.00 am காலம் 2மாதம்
Batch II - சனி, ஞாயிறு 9.00 am - 11.00 am

Electronics

TV, Mobile Phone, DVD வேறு எலக்ரோனிக் பொருட்கள் திருத்தும் முறைபயிற்சியளிக்கப்படும்
(காலம் 10 மாதம்)

Air Conditioning

சகல விதமான குளிர்சாதனங்களும் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும்
(காலம் 6 மாதம்)

(C/2852)

பயிற்சிகள் ஆரம்பம் - 23.06.2013

விபரங்களுக்கு
Jaffna Technical Instutute
இல. 7, பலாலிவீதி, யாழ்ப்பாணம்.
0778249949
கிளை : ஸ்ரான்லி வீதி, 56/15, யாழ்ப்பாணம்.
பரீட்சை முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும், வெளிமாவட்ட மாணவர்களுக்கு தங்குமிட வசதி வழங்கப்படும்


# ஊடகக்காரருக்கு கொலைமிரட்டல்; பொதுபலசேனா மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

பிரபல சிங்கள தொலைக்காட்சி ஊடகவியலாளரான தில்கா சமன்மலி என்பவருக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்ததாக பொது பல சேனாவுக்கு எதிராக பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. தில்கா சமன்மலிதெரண தொலைக்காட்சியில் 360 பாகை என்ற பெயரில் அரசியல் நிகழ்ச்சி நடத்தி வருபவராவார்.

பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் அண்மையில் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டிருந்தார்.

அதன்போது ஞானசார தேரர், பௌத்த நெறிகளுக்கு முரணாக குடிப்பழக்கம் கொண்டவர் என்பதை அவர் வாயாலேயே ஒப்புக் கொள்ளவைக்கும் வகையில் தில்கா கிடுக்குப்பிடி கேள்விகளைத் தொடுத்திருந்தார்.

மேலும் ஞானசார தேரர் குடித்து விட்டு வாகனம் ஓட்டியதற்காக நீதிமன்றத்தில் குற்றவாளியாக்கப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டவர் என்பதையும் தில்கா ஆதாரபூர்வமாக நிரூபித்திருந்தார்.

இதன் காரணமாக பொதுபல சேனாவிற்கு பாரிய பின்னடைவு ஏற்பட்டிருந்தது.

இதனையடுத்து பொதுபல சேனாவின் முக்கியஸ்தர்கள் மற்றும் அதன் ஆதரவாளர்களிடமிருந்து தொலைபேசி வாயிலாக ஊடகவியல்ளாளர் தில்காவிற்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக இதனையடுத்து அவர் தனக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல் தொடர்பில் கொழும்பு குற்றத்தடுப்பு பொலிசில் முறைப்பாடொன்றைச் செய்துள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 யூன் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.